

நவீன
விக்கிரமாதித்தன்!
வ.ந. கிரிதரன்

நவீன விக்கிரமாதித்தன்!

(நாவல்)


‘அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்’

பதிவுகள்.காம்

2025

உள்ளே..

சமர்ப்பணம்



எனது இந்த நாவலை நான் என்னை மிகவும் பாதித்த அறிவியல் அறிஞர் ஆல்பேர்ட் ஐன்ஸ்டைனுக்குச் சமர்ப்பணம் செய்கின்றேன். நவீன இயற்பியலைப் புதுக்கி அமைத்தவர். 'காலவெளி' அமைப்பாக இப்பிரபஞ்சத்தைக் கண்டவர். காலம், வெளி பற்றிய தனது சார்பியற் கோட்பாடுகளால் இருப்பு பற்றிய புரிதலுக்கான புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தவர். என் இருப்பு பற்றிய சிந்தனைகள் இவரது அறிவியற் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்நாவலிலும் இருப்பு பற்றிய, காலவெளி பற்றிய என் சிந்தனையோட்டங்களை நாவலின் நாயகனூடு காணலாம். இவருக்கு இந்நாவலைச் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

என்னுரை

மேலோட்டமாகப் பார்த்தால் 'நவீன விக்கிரமாதித்தன்' ஒரு நாவலா என்று தோன்றும். ஆனால் இது ஒரு நாவல்தான். நாவலென்றால் அதனை மையக்கருத்து, கதைப்பின்னல் (Plot), பாத்திரங்கள், உரையாடல், எழுதப்படும் மொழி என்னும் பல்வேறு கோணங்களில் அணுகுவர். அவையெல்லாம் ஆழ்ந்து நோக்கினால் இந்நாவலிலும் உள்ளன. இந்நாவலுக்கு ஒரு தொடக்கமுண்டு. முடிவுண்டு. இந்நாவலில் பாத்திரங்கள் உள்ளன. உரையாடல்கள் உள்ளன. ஒரு கட்டத்தில் முடிவுமுண்டு. ஆனால் இம்முடிவு பிறகாலத்தில் சந்தர்ப்பம் ஏற்படின் விரிவடைவதற்கும், மேலும் பல பகுதிகளை உருவாக்குவதற்கும் வழி சமைத்துள்ளதையும் அவதானிக்கலாம்.

இந்நாவலின் கூறுகள் நவீன விக்கிரமாதித்தனின் ஆளுமையை அவனது சிந்தனைகள், உறவுகள், உரையாடல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன. அவனது இருப்பு பற்றிய தேடலை எடுத்துக் காட்டுகின்றன. 'காலவெளி' அமைப்பாக விரிந்திருக்கும் இப்பிரபஞ்ச அமைப்பு பற்றிய நாயகனின் தேடல்கள் இந்நாவலைப் பொறுத்தவரையில் முக்கியமானவை. வழக்கமான சுவாரசியம் மிக்க சம்பவங்களின் தொடர்ச்சியாகப் பின்னப்பட்டுள்ள நாவலைப்போன்ற நாவல்களில் ஒன்றல்ல 'நவீன விக்கிரமாதித்தன்'.

இந்நாவல் நாயகனின் இருப்பு பற்றிய தேடல்களை, கலை, இலக்கிய உலகு பற்றிய சிந்தனைகளை, விமர்சனங்களை முன் வைக்கின்றதை நாவலைப் படிப்பவர்கள் புரிந்துகொள்வர்.

இந்நாவல் 'பதிவுகள்' இணைய இதழில் தொடர்ச்சியாக வெளிவந்து தற்போது 'ஓவியா' பதிப்பாக வெளியாகின்றது. அதற்காக ஓவியா பதிப்பகத்துக்கும், அதன் உரிமையாளர் எழுத்தாளர் வதிலைப் பிரபாவுக்கும் நன்றி. ஏற்கனவே எனது நாவலான 'குடிவரவாளன்' ஓவியா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இது ஓவியா பதிப்பகம் மூலம் வெளியாகும் எனது இரண்டாவது படைப்பு.

நாவல் பற்றிய உங்கள் கருத்துகளை என்னுடன் பகிர்ந்துகொண்டால் மகிழ்ச்சியடைவேன். உங்கள் கருத்துகளை girinav@gmail.com என்னும் என் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அத்தியாயம் ஒன்று - நான் விக்கிரமாதித்தன் பேசுகின்றேன்!

என் பெயர் விக்கிரமாதித்தன். என்னை நன்கு அறிந்த சிலர் என்னை நவீன விக்கிரமாதித்தனென்று கூறுவார்கள். முற்றும் தளராத விக்கிரமன் - விக்கிரமாதித்தன் - எவ்விதம் மீண்டும் மீண்டும் முருங்கை மரத்திலேறி வேதாளம் குடியிருக்கும் தொங்குமுடலைத் தூக்கி வருவானோ அவனைப்போன்றவனே நானும். முயற்சி செய்வதில் எனக்குச் சலிப்பில்லை.மீண்டும் மீண்டும் முயற்சி செய்வதில எனக்குப் பெருங்களிப்பு என்று வேண்டுமானால் நீங்கள் கருதலாம். அதிலெனக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை.

உள்ளிருந்து எள்ளி நகைத்தது யார்?!
ஒவ்வொரு முறையும் இவ்விதம்!
நகைப்பதே உன் தொழிலாயிற்று.!
விரிவெளியில் படர்ந்து கிடக்குமுன்!
நகைப்போ , நீ விளைவிக்கும் கோலங்களோ,!
அல்லது உன் தந்திரம் மிக்க!
கதையளப்போ எனக்கொன்றும் புதியதல்லவே.!
இரவுவானின் அடுக்குகளில்!
உனது சாகசம் மிக்க!
நகைப்பினை உற்றுப் பார்த்திடும்!
ஒவ்வொரு இரவிலும்,!
நட்சத்திரச் சுடர்களில்,!
அவற்றின் வலிமையில்!
உன்னை உணர்கின்றேன்.!
எப்பொழுதுமே இறுதி வெற்றி!
உனக்குத்தான்.!
எப்பொழுதுமே உன்காட்டில்!
மழைதான். அதற்காக!
மனந்தளர்வதென் பண்பல்ல. ஆயின்!
உன்னை வெற்றி கொள்ளுதலுமென்!
பேரவாவன்று.பின்!
உனைப் புரிதல்தான்.!
ஓரெல்லையினை!
ஒளிச்சுடருனக்குத்!
தந்துவிடும் பொருளறிந்த!
எனக்கு!
அவ்வெல்லையினை மீறிடும்!
ஆற்றலும், பக்குவமும்!
உண்டு; புரியுமா?!
வெளியும், கதியும், ஈர்ப்பும்!
உன்னை, உன் இருப்பினை!
நிர்ணயித்து விடுகையில்!
சுயாதீனத்துடன்!
பீற்றித் திரிவதாக உணரும்!
உன் சுயாதீனமற்ற,!
இறுமாப்புக்கு!
அர்த்தமேதுமுண்டா?!
இடம், வலம் , மேல், கீழ்.!

இருதிசை, நோக்கு கொண்ட!
பரிமாணங்களில் இதுவரையில்!
நீ!
ஒருதிசையினைத் தானே காட்டி!
புதிருடன் விளங்குகின்றாய்?!
உன் புதிரவிழ்த்துன்!
மறுபக்கத்தைக் காட்டுதலெப்போ?!
இரவி , இச் சுடர் இவையெலாம்!
ஓய்வாயிருத்தலுண்டோ? பின்!
நான் மட்டுமேன்?!
நீ எத்தனை முறை தான்!
உள்ளிருந்து!
எள்ளி நகைத்தாலும்!
மீண்டும் மீண்டும்!
முயன்று கொண்டேயிருப்பேன்.!
நீ!
போடும் புதிர்களுக்கு!
விளக்கம் காணுதற்கு!
முயன்று கொண்டேயிருப்பேன்.!
வேதாளங்களின் உள்ளிருந்து!
எள்ளி நகைத்தல் கண்டும்!
முயற்சியில்!
முற்றுந் தளராதவன் விக்கிரமாதித்தன்!
மட்டும்தானா?

அட்டா, வித்தியாசமானவனாக இருக்கின்றானே இவன் என்று நீங்கள் எண்ணுவதை என்னால் நன்றாகவே உணர்ந்துகொள்ள முடிகின்றது. இங்கு நான் கூறப்போவது என்னைப்பற்றி. எனது என்ணங்கள், என் வாழ்க்கைச் சம்பவங்கள் இவற்றைப்பற்றி. என் குறிப்பேடுகள் பலவற்றையும் இங்கு நான் உங்களுடன் அவ்வப்போது பகிர்ந்துகொள்வேன். அவை என்னைப்பற்றிய சரியானதொரு சித்திரத்தை உங்களுக்கு அறியத்தரலாம். கோடியிலொருவனான ஒரு சாதாரண மானுடன் இவனைப்பற்றி அறிவதிலென்ன சுவாரசியமிருக்க முடியுமென்று நீங்கள் கேட்பது என் காதுகளில் விழுகின்றது. இதற்கு நான் கூறப்போகும் பதிலிதுதான்: 'மகா காலக்சிகளை உள்ளடக்கியுள்ள மிகச்சாதாரணமான சுடரொன்றின் கோள்களிலொன்றில்தான் நாம் , மானுடர்கள் வாழ்கின்றோம். அவ்வகையில் ஒவ்வோருயிரும் இங்கு முக்கியத்துவம் மிக்கவைதான்.அவ்வகையில் நானும் முக்கியத்துவம் மிக்கவனே என்பது என் தீர்க்கமான நம்பிக்கை.

இருப்பை இரசிப்பதில், சிந்திப்பதில், வாசிப்பதில் எனக்கு எப்பொழுதுமே பெரு விருப்புண்டு. இப்பிரபஞ்சத்தில் நம் இருப்பு மகத்தானது மட்டுமல்ல அற்பமானதும் கூடத்தான். சிந்திப்பு இன்பத்தைத் தருகின்றது. சிந்திப்பு எனக்குப் புரிதலைத் தருகின்றது. சிந்திப்பு எனக்குத் தெளிவைத்தருகின்றது.

முப்பரிமாண உருவங்களைக்கொண்டு நாம் கானும் உலகை, உயிர்களை , அவை தெரியும் அகத்தோற்றங்களை வரைவதைக் 'கியூபிச' ப் பாணி என்போம். இங்கு நீங்கள் என், விக்கிரமாதித்தனின் ஆளுமையை, எண்ணங்கள், குறிப்புகள், சம்பவங்கள் இவற்றினூடு கூடவே காலத்தையும் உள்ளடக்கிக் காணப்போகின்றீர்கள். காலவெளிச்சட்டத்தில் என் ஆளுமையை அணுகப் போகின்றீர்கள். இத்தகைய அணுகுமுறைக்கு என்ன பெயர் வைக்கலாமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றேன்.

உங்களுக்கு நல்லதொரு பெயர் தெரிந்தால் பகிர்ந்துகொள்ளுங்கள்.

'என்ன பலமான சிந்தனை நண்பரே'

சிந்தனை கலைந்து திரும்பிப் பார்க்கின்றேன்.

கவிஞர் , மகா கவிஞர், நம் காலத்து மகா கவிஞர் புன்னகையுடன் நிற்கின்றார்.

சொற்களைத் தேர்ந்தெடுத்து சோகங்களை வடித்தெடுப்பதில் வல்லவர் இவர். அச்சோகங்களில் மூழ்கி இவரைக் கொண்டாடப் பலருள்ளனர். இவரது கவிதை வரிகளில் இவர் வெளிப்படுத்தும் உணர்வுகள் இவரது ஆழ்மனத்து உணர்வுகளல்ல. அவை அவரது ஆழ்மனத்தை மூடிநிற்கும் அவரது வெளி மனத்துச் செருக்குகள். சிந்தித்துச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப்பதில் வல்லவர் இவர். அவ்வகையில் இவர் மகா கவிஞரல்லர். மகா புலவர். கவிதைகளை இரசிக்க முடிந்த என்னால் புலவர்களின் புத்திச் செருக்குகளை இரசிக்க முடிந்ததில்லை; முடிவதில்லை. அது அவருக்கும் தெரியும். ஆனால் அது பற்றியெல்லாம் அவர் என்னுடன் அலட்டிக்கொள்வதேயில்லை.

இவரைப்பற்றிய என் எண்ணங்களை என் குறிப்பேட்டிலொரு கவிதையாக நீங்கள் காணலாம். அதனை உங்களுக்காக இங்கு தருகின்றேன். படித்துப் பாருங்கள்.

மகாகவிஞர் அவர் என்று கூறுவர்.
சொற்களைத் தேர்ந்துடுத்து
சோகங்களை வடித்தெடுப்பதில்
அவர் வல்லவர்.
அவரது கவிதை வரிகளில்
அவர் வெளிப்படுத்தும் உணர்வுகள்
அவரது ஆழ்மனத்து உணர்வுகள்
அல்ல.
அவரது ஆழ்மனத்தை மூடிநிற்கும்
அவரது வெளிமனத்தின் செருக்குகள் அவை.
சிந்தித்துப் பொருத்தமான சொற்களை
அவர் தேர்ந்தெடுப்பது
அவற்றின் வாசகரைக் கவர மட்டுமே.
அவை அவரின் இதயத்தின்
ஆழ்ஊற்றென்றால்
அவற்றுக்கு நான் அடிமை.
ஆனால் அவரிதயத்தில்
அவ்விதம் ஊற்றுகள் ஊறுவதில்லை.
ஆழ் உணர்வுகளை அவர் சொற்கள்
வெளிப்படுத்துவதில்லை.
அதனால் அவை கவிதைகள்
அல்ல.

ஆழமனத்தின், அக உணர்வின்
வெளிப்பாடு கவிதை.
புறமனத்தின் புத்தியின்
வெளிப்பாடு புலமை.
அவர் மகாகவிஞரல்லர். ஆனால்
மகா புலவர்.

கவிதைகளை இரசிக்க முடிந்த என்னால்
புலவர்களின் புத்திச் செருக்குகளை இரசிக்க
முடிந்ததில்லை; முடிவதில்லை.

இதுபோன்ற பல கவிதைகளை என் குறிப்பேடு தாங்கி நிற்கின்றது. கலை, இலக்கியம் , அரசியல், பொருளாதாரம், வானியற்பியலென்று பலவற்றைப் பற்றி அவை பேசும். பல்வகை மானுட உணர்வுகளைப் பற்றி அவை பேசும். அவற்றையும் அவ்வப்போது உங்களுடன் பகிர்ந்துகொள்வேன்.

கவிஞர் மீண்டும் கேட்டார் 'என்ன பலமான சிந்தனை'

அதற்கு நான் கூறினேன் 'பலமான சிந்தனையெதுவுமில்லை. பலங்குறைந்த சிந்தனைதான். வலிமையற்ற சாதாரண சிந்தனைதான்.'

கவிஞர் என் பதிலைக்கேட்டுச் சிரித்தார் 'அந்தப் பலத்தைப் பற்றி நான் இங்கு கூறவில்லை. ஆனால் எல்லோரும் அவ்விதமே எண்ணிக்கொள்கின்றார்கள். கடுமையான சிந்தனையைப் பலமான சிந்தனையென்றும் வழக்கில் கூறுவதுண்டு. நண்பர் மறந்து விட்டாரென்று நினைக்கின்றேன்.'

இதற்கு நான் இவ்விதம் பதிலளித்தேன் 'மகா கவிஞருக்கு நகைச்சுவை உணர்வு குறைந்து விட்டது போலும். கொரோனா பலரையும் மாற்றி விட்டதுதான்.'

ஆனால் கவிஞர் சளைக்கவில்லை. ' நானும் பகடியாகத்தான் கூறினேன். பாவம் நீங்கள் அதனைப்புரிந்துகொள்ளவில்லை.'

'இந்தச் சொற்றொடர் பலமான சிந்தனை என்னும் சொற்றோடர் ஏன் வந்ததென்று நினைத்துப் பார்த்திருக்கின்றீர்களா?"

கவிஞர் தர்க்கரீதியான, நல்லதொரு பதிலை இவ்விதம் தந்தார் 'சிந்தனைகள் பலவற்றில் ஒருவர் மூழ்கியிருக்கையில், அவரைப்பார்த்து என்ன பலவாகச் சிந்தனை என்று கேட்டதுதான் காலப்போக்கில் பலமான சிந்தனையாகப் பரிணாமம் அடைந்திருக்க வேண்டும்.'

'நல்ல பதில்' என்றேன். கூடவே 'இதனால்தான் நீங்கள் மகா புலவர்' என்றேன். கவிஞரும் அதை இரசித்தாரென்பதை அவரது முகபாவனைகள் எடுத்துரைத்தன. சிறிது நேரம் உரையாடிய பின்னர் மகா புலவர் சென்று விட்டார். மானுடர்கள்தாம் எத்தனை வகையினர். ஓவ்வொருவர் உளவியலும்தான் எத்தனை எத்தனை வகை!

அத்தியாயம் இரண்டு: மாநகரத்து மாமழையும், மனோரஞ்சிதமும்!

இருண்டிருக்கும் மாநகரத்திரவு.
இருளைக்கிழித்தொரு மின்னலின் கோடிழுப்பு.
இடியின் பேரொலி.
யன்னலினூடு பார்க்கையில் பேசாத்திரைப்படமாய்
மழைக்காட்சி விரிகிறதெதிரே.

கட்டடக்காட்டு விருட்சமொன்றின் பொந்துக்குள்ளிருந்து பெய்யும் மாநகரத்து மழையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். சலனப்படமொன்றின் நிகழ்வுகளைப் பார்த்துக்கொண்டிருப்பதைப் போல் வானம் பொத்துக்கொண்டு பெய்துகொண்டிருக்கின்றது. இயற்கை நிகழ்வுகளில் எனக்குப் பிடித்த நிகழ்வு பொழியும் மழை. பெய்யும் மழையை இரசிப்பதிலுள்ள சுகமே தனி. பால்ய பருவத்தில் 'மழையே வா' என்று வரவேற்று பாடியது தொடக்கம், காகிதக் கப்பலை பீலியால் வீழ்ந்து ஓடும் நீரில் விடுவது தொடக்கம் ஆரம்பித்த தொடர்பு. பின்னர் பதின்ம வயதுகளிலும் தொடர்ந்தது. இரவு மழை, வயற்புறத்து மண்டூகங்களின் இசைக்கச்சேரி, சடசடக்கும் ஓட்டுக்கூரைகளில் பட்டுத்தெறிக்கும் நீரொலி, இடையிடையே மின்னும் மின்னல் நங்கையரின் ஒளியழகு, தொடரும் உருண்டோடும் பேரிடியோசை. இவற்றைப் படுக்கையில் படுத்திருந்தபடி இரசிப்பதிலுள்ள சுகம் தனித்துவம் மிக்கது. சில சமயங்களில் பகல் மழைகளில் .நாற்சாரப் பீலிகளிலிருந்து நீர் வீழ்ச்சியெனப்ப் பாயும் நீரில் குளித்து மகிழ்வதிலென்னை மறந்திருக்கின்றேன்.

எழுத்துகள் எவ்வகையியாயினும் , கவிதை, கதை, கட்டுரை எவ்வகையினதாயினும் அவற்றில் விபரிக்கப்படும் மழைக்காட்சிகள் என் வாசிப்பனுபவங்களுக்கு இன்பத்தைத் தந்தன. எத்தனை மழைக்காட்சிகளில் என்னை நான் பறி கொடுத்திருக்கின்றேன்.

இழந்தது உறவுகள் , உருண்டு புரண்ட மண் மட்டுமல்ல, இதுபோன்ற இயற்கை நிகழ்வுகளையும்தாமென்று உணர்ந்தது உள்ளம். இழந்ததையெண்ணிக் கழிவிரக்கமா? இன்னுமா? அன்று மட்டுமல்ல, இன்று மட்டுமல்ல, என்றுமே இருக்கப்போகும் உணர்வு இதுவென்றும் உணர்ந்தேன்.

உணர்வுகளுக்கு அடை போட முடியுமா? எதற்காக? யாருக்காக? வயற்புறத்து மண்டூகங்களின் விடியும்வரைக் கச்சேரிகளற்ற மாநகரத்துப் பெருமழை! பேய்மழை! மழையென்றாலெனக்கு எப்போதும் மாகவியின் மழைக்கவிதை மனத்தில் உருவெடுக்கும். உணர்ச்சிகள் ஊற்றெடுக்கும் என்ன கவிஞன் அவன்! "பேய்கொண்டு தக்கைய"டிக்கும்: காற்று! "வெட்டியிடிக்கும்" மின்னல்! "கொட்டியிடிக்கும்" மேகம்! "பக்கமலைகளுடைந்து"பாயும் வெள்ளம்! "தாளங்கள் கொட்டிக் கனைக்கும்" மேகம்!
"பக்கமலைகளுடைந்து"பாயும் வெள்ளம்! "தாளங்கள் கொட்டிக் கனைக்கும்" மேகம்!

மாநகரத்துப்பெருமழை பொழிந்து தள்ளுகிறது. படுக்கையில் குடங்கிக்கிடக்கின்றேன். பொழியும் மழையைப் பார்க்கின்றேன். வெளியே விரிந்திருக்கும் இருளில் வெட்டியடிக்கவில்லை மின்னல்! தக்கையடிக்கவில்லை; விண்ணைக்குடையவில்லை காற்று. கொட்டியிடிக்கவில்லை மேகம்! அப்படியா? அப்படித்தான் தோன்றியது. அல்லது என் மனப்பிரமையா! கழிவிரக்கத்தின் வெளிப்பாடா?

ஒரு காலத்தில் மழை பொழிந்தபோது கோவைமரத்தில் , நனைந்த சிறகு சிலிர்த்த பசுங்கிளிகளைப் பார்த்து மெய்ம்மறந்ததை எண்ணிக்கொண்டேன். 'மழை வா! வேயில் போ!" பாடிக்கழித்த பாடசாலைப் பருவங்களை எண்ணிக்கொண்டேன். ஓட்டுக்கூரையில் மழைத்தாரை பட்டுக் கேட்கும் சடசடப்பை இரசித்தபடி படுத்திருந்ததை எண்ணிக்கொண்டேன். வெளியே மழை அமைதியாகப் பெய்து கொண்டிருந்தது! ஆரவாரமற்ற அமைதியான மழை! பெருமழை! பேய்மழை! மாநகரத்துப் பெருமழை!

மனோரஞ்சிதத்துக்கு மழைக்காட்சியென்றால் பெரு விருப்பு. குழந்தைபோல் குதித்துக் கும்மாளமிடுவாள். அத்துணை களிப்பு அவளுக்கு. மழையை இரசிப்பது, மழையில் குளிப்பது, மழையை நினைப்பது, அதில் நனைவது எல்லாவற்றிலும் அவளும் என்னைப்போல்தான். சங்கத்தமிழ் இலக்கியத்தில் வரும் மாமழை என்னும் சொல் அவளுக்கு மிகவும் பிடிக்கும். குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில் வரும்

'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும், நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல், மேல்நின்று தான்சுரத்த லான்' என்னும் வரிகள் அவளுக்கு மிகவும் பிடித்த வரிகள். நற்றிணையில் வரும 'இரு விசும்பு அதிர மின்னி கருவி மாமழை கடல் முகந்தனவே' என்னும் வரிகளும் அவளுக்குப் பிடித்த மேலுமிரு வரிகள். இவையெல்லாவற்றையும் விட அவளுக்கு அதிகமாகப் பிடித்த வரிகள் செம்புலப் பெயல்நீரார் எழுதியவை:

'யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.'

அவளுக்குப் பிடித்த முக்கியமான கவிஞர்களில் ஒருவர் செம்புலப் பெயல்நீரார். இவ்வரிகளை வைத்துத் திரைப்படக் கவிஞர் கண்ணதாசனும் பாடலொன்றை எழுதியிருக்கின்றார். அதுவும் அவளுக்கு மிகவும் பிடிக்கும். 'வாழ்கைப் படகு' படத்தில் வரும் நேற்று வரை நீயாரோ? நான் யாரோ? பாடல்தான் அது. அப்பாடலை வைத்து நாமிருவரும் சில சமயங்களில் வேடிக்கையாக மாறி மாறி உரையாடிக் களிப்பதுண்டு. உதாரணத்து ஒன்று.

மனோரஞ்சிதம் - 'நேற்றுவரை நீ யாரோ?"
நான் - 'நான் யாரோ?"
மனோரஞ்சிதம் - 'இன்று முதல் நீ வேறோ?"
நான் - 'நான் வேறோ"

இவ்விதம் அப்பாடலின் வரிகளை இருவரும் பாடிப் பொழுதைக் களிப்பதிலுள்ள இன்பம் தனி.

மனோரஞ்சிதத்தும் இலக்கியத்தில் மட்டும்தான் ஆர்வமென்றில்லை. இருப்பு , வானியற்பியல் , இயற்கை, நுண்கலைகள் என்று பல விடயங்களிலும் என்னைப் போல் ஆர்வமுண்டு. அவை பற்றிய நூல்கள் ,கட்டுரைகள் எவையென்றாலும் விரும்பி வாசிப்பாள். அதனால் அவளுடன் இவை பற்றித் தர்க்கபூர்வமாக, அறிவுபூர்வமாக இவளுடன் விவாதிக்கலாம். இருவருமே இவ்விதமான விவாதங்களை விரும்பிச் செய்வதுண்டு.

இருவரின் மனப்போக்கும் இலக்கியப் படைப்புகள் , கலைகள் விடயத்தில் பெரிதும் ஒன்றாகவே இருந்தது. எழுத்தாளர் சுந்தர ராமசாமி கிடைக்கும் சமயங்களிலெல்லாம் வெகுசன இலக்கியப் படைப்புகளை வாங்கு வாங்கென்று வாங்குவார். அவரது ஜே.ஜே.சில குறிப்புகள் நாவலின் நாயகன் புகழ்பெற்ற மலையாள எழுத்தாளரான ஜே.கே தமிழின் வெகுசன படைப்புகளைப்பற்றி வேடிக்கையும், எள்ளலுமாக 'உங்கள் சிவகாமி சபதத்தை முடித்துவிட்டாளா..? ' என்று கேட்பதாகத் தமிழின் வெகுசன இலக்கியத்தை அவர் எள்ளி நகையாடுவார்.

இதிலுள்ள மிகப்பெரிய குறை என்னவென்றால் என்பதை மனோரஞ்சிதம் பின்வருமாறு சுட்டிக்காட்டுவாள் - 'வெகுசன இலக்கியமென்பது தமிழுக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. எல்லா மொழிகளிலும் உள்ளதுதான். சுரா இது எதோ தமிழுக்கு மட்டுமே உரிய ஒன்றாகக் காட்டுவது முட்டாள்தனம். இவர் பதிலுக்கு மலையாள வெகுசனப் படைப்பொன்றைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் ஏதோ வெகுசன இலக்கியத்தால் தமிழின் இலக்கியத்தரம் குறைந்து போவதாகப் பாசாங்கு செய்வதை ஏற்க முடியாது விக்கிரமா'

மனோரஞ்சிதம் என்னை அன்புடன் விக்கிரமா என்றழைக்கையில் உண்மையில் என் மெய் சிலிர்ப்பதுண்டு. அவ்வளவு இனிமையாக, கனிவாக என்னை அவள் அழைப்பாள். அவள் கூறுவது முற்றிலும் சரியானதொரு கூற்று. நான் அதனை முற்றாகவே ஏற்பவன். பதிலுக்கு 'ரஞ்சிதம், நீ கூறுவது சரிதான். குழந்தை இலக்கியம் போல் வெகுசன இலக்கியத்துக்கும் ஒருவரின் வாசிப்பனுபவத்தில் முக்கியமானடோரிடமுண்டு. பங்குண்டு. இதனை இவர் சுரா உணரவில்லை' என்பேன். நான் அவ்விதம் அவளை ரஞ்சிதமென்று அவ்வப்போது விளிப்பதை அவளும் மிகவும், விரும்புவாள்.

மனோரஞ்சிதம் அத்துடன் நல்லதொரு பாடகியும் கூட. அவளுக்குப் பாரதியாரின் கவிதைகள் மிகவும் பிடிக்கும். குறிப்பாக 'நின்னைச் சரணடைந்தேன் கண்ணமா' பாடல் அவளுக்கு மிகவும் பிடிக்கும். அதனை மனதொன்றி, இனிமையாக பாடுவாள். அவ்விதம் அவள் பாடுவதைக் கேட்பது எனக்கும் மிகவும் பிடிக்கும். மனம் அமைதியற்றிருக்கும் தருணங்களில் அவளை அக்கவிதையைப் பாடச்சொல்லிக் கேட்பதுண்டு. அடிக்கடி இவ்விதம் கேட்பதைக் கண்ட அவள் அதனை ஒலிப்பதிவு செய்து தேவையான நேரமெல்லாம் கேளு விக்கிரமா என்று தந்துவிட்டாள்.

நின்னைச் சரணடைந்தேன்- கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்*! (நின்னைச்)*

பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று

மிடிமையும் அச்சமும் மேவி என் நெஞ்சில்
குடிமை புகுந்தன*,* கொன்றவை போக்கென்று

தன் செயலெண்ணித் தவிப்பது தீர்ந்திங்கு
நின் செயல் செய்து நிறைவு பெறும்வண்ணம்

துன்பமினியில்லை சோர்வில்லை
சோர்வில்லை தோற்பில்லை
நல்லது தீயது நாமறியோம் நாமறியோம்
நாமறியோம்

அன்பு நெறிகள் அறங்கள் வளர்ந்திட
நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக!
நின்னைச் சரணடைந்தேன்- கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்!

பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று

ஜன்னைலூடு இன்னும் பொழிந்துகொண்டிருக்கும் மழையை,. மாநகரத்து மழையை, சலனமற்ற அமைதியான மழையைப் பார்க்கின்றேன். நம் சங்கத்துப்புலவருக்குத்தான் எத்துணை மொழி வளம். 'பெரும்பெயல்', 'மாமழை','படுமழை','கலிமழை' போன்ற் சொற்றொடர்கள் குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் அதிகம். 'பெரும் பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்', 'படுமழை பொழிந்த சாரல்','கலிமழை கெழீஇய கான்யாற்று இடுகரை' போன்ற வரிகல் என்னை மிகவும் கவர்ந்தவை. உரிய காலத்தில் பெய்யும் மழையைக் காலமாரி என்றார்கள். காலந்தப்பிப் பெய்யும் மழையை வம்பமாரி என்றார்கள். வம்பமாரி என்னும் சொற்றொடர் புன்னகையை வரவழைத்தது. வம்பு என்னும் சொல் பழந்தமிழ்ச் சொல். இலங்கைத் தமிழர்கள் பேச்சு வழக்கில் குறிப்பாக ஆத்திரத்துடன் சண்டை பிடிக்கையில் வம்பிலை பிறந்ததுகள் என்று சாதாரணமாகவே இச்சொல்லைப் பாவிப்பதை அவதானித்திருக்கின்றேன். முறை தவறி, காலத் தவறி பெய்த மழையைப்போல் முறை தவறிப் பிறந்ததைக் குறிக்கப் பயன்படுத்தினார்கள் போலும்.

வெளியில் மாமழை இன்னும் முழங்கிப் பெய்துகொண்டிருந்தது.

இருண்டிருக்கும் மாநகரத்திரவு.
இருளைக்கிழித்தொரு மின்னலின் கோடிழுப்பு.
இடியின் பேரொலி.
யன்னலினூடு பார்க்கையில் பேசாத்திரைப்படமாய்
மழைக்காட்சி விரிகிறதெதிரே.
இழந்தது உறவுகள் , உருண்டு புரண்ட மண்
மட்டுமல்ல,
இதுபோன்ற இயற்கை நிகழ்வுகளையும்தாமென்று
உணர்ந்தது உள்ளம்.
இழந்ததையெண்ணிக் கழிவிரக்கமா?
இன்னுமா?
அன்று மட்டுமல்ல,
இன்று மட்டுமல்ல,
என்றுமே இருக்கப்போகும்
உணர்வு இதுவென்றும்
உணர்ந்தேன்.

உணர்வுகளுக்கு அடை போட முடியுமா?
எதற்காக? யாருக்காக?
வயற்புறத்து மண்டூகங்களின்
விடியும்வரைக் கச்சேரிகளற்ற
மாநகரத்துப் பெருமழை! பேய்மழை!
மழையென்றாலெனக்கு எப்போதும்
மாகவியின் மழைக்கவிதை
மனத்தில் உருவெடுக்கும்.

உணர்ச்சிகள் ஊற்றெடுக்கும்
என்ன கவிஞன் அவன்!
"பேய்கொண்டு தக்கைய"டிக்கும்: காற்று!
"வெட்டியிடிக்கும்" மின்னல்!
"கொட்டியிடிக்கும்" மேகம்!
"பக்கமலைகளுடைந்து"பாயும் வெள்ளம்!
"தாளங்கள் கொட்டிக் கனைக்கும்" மேகம்!

மாநகரத்துப்பெருமழை பொழிந்து தள்ளுகிறது.
படுக்கையில் குடங்கிக்கிடக்கின்றேன்.
பொழியும் மழையைப் பார்க்கின்றேன்.
வெளியே விரிந்திருக்கும் இருளில்
வெட்டியடிக்கவில்லை மின்னல்!
தக்கையடிக்கவில்லை;
விண்ணைக்குடையவில்லை காற்று.
கொட்டியிடிக்கவில்லை மேகம்!
அப்படியா? அப்படித்தான் தோன்றியது.
அல்லது என் மனப்பிரமையா!
கழிவிரக்கத்தின் வெளிப்பாடா?

ஒரு காலத்தில் மழை பொழிந்தபோது
கோவைமரத்தில் , நனைந்த சிறகு சிலிர்த்த
பசுங்கிளிகளைப் பார்த்து மெய்ம்மறந்ததை
எண்ணிக்கொண்டேன்.
'மழை வா! வேயில் போ!"
பாடிக்கழித்த பாடசாலைப் பருவங்களை
எண்ணிக்கொண்டேன்.
ஓட்டுக்கூரையில் மழைத்தாரை பட்டுக்
கேட்கும் சடசடப்பை இரசித்தபடி
படுத்திருந்ததை
எண்ணிக்கொண்டேன்.
வெளியே மழை அமைதியாகப்
பெய்து கொண்டிருந்தது!
ஆரவாரமற்ற அமைதியான மழை!
பெருமழை! பேய்மழை!
மாநகரத்துப் பெருமழை!

மாமழை போற்றுதும்.
மாமழை போற்றுதும்.

அத்தியாயம் மூன்று - மனவெளி நண்பர்கள் - சதுரன் & வட்டநிலா தம்பதியினர்!

தட்டையர்கள் என் மனவெளி நண்பர்களில் முக்கியமானவர்கள். உண்மையில் இவர்கள் எம் படைப்புகள். அவர்களுடன் நான் அவ்வப்போது உரையாடுவதுண்டு. மனவெளி உரையாடல்கள்தாம். தட்டையர்கள் உலகுக்கு விஜயம் செய்வதென்றால் எனக்கு மிகவும் பிடித்த பொழுதுபோக்கு. பரிமாண வித்தியாசங்கள் எங்களுக்கிடையில் ஏற்படுத்திய வித்தியாசங்கள் எங்களுக்கு மிகவும் சாதகமாகவிருக்கின்றன. அதனால் தட்டையர்கள் உலகு எப்பொழுதும் எனக்கு உவப்பானதாகவே இருக்கின்றது. தட்டையர்கள் உலகில் நான் எப்போதுமே உவகையுறுவதற்கு முக்கிய காரணங்களிலொன்று என்னவென்று நினைக்கின்றீர்கள்? மானுடப் படைப்பிலுள்ள பலவீனங்களிலொன்றுதான். ஏனெனில் அங்கு நான் அவர்களைவிட எல்லாவகையிலும் உயர்ந்தவன். என்னை மீறி அங்கு எவையுமேயில்லை. இது போதாதா என் உவகைக்கு. அதனால்தான் என்னைச் சுற்றித் தட்டையர்கள் உலகங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இரவு வானத்துச் சுடர்களைப்போல் அவை என்னைச்சுற்றிக் கண்களைச் சிமிட்டுகின்றன. தட்டையர்கள் உலகத்து உயிர்களுக்கும் எம்முலகத்து உயிர்களுக்குமிடையில் தோற்றத்தில் வேறுபாடுகள் பெரிதாக இல்லை. அவர்கள் எம்மைபோல் கனமானவர்கள் அல்லர். தட்டையர்கள். முக்கிய வேறுபாடு மிகப்பெரிய வேறுபாடென்பேன். அந்த ஒரு வேறுபாடு போதும் அனைத்தையுமே மாற்றி வைப்பதற்கு. ஆம்! பரிமாணங்களில் எம்மை மிஞ்சிட அவற்றால் முடியவே முடியாது. அவர்களால் ஒருபோதுமே அவர்களது பரிமாணச்சுவர்களை மீறவே முடியாது. இப்படித்தான் பரிமாணம் மிகு உலகத்து உயிர்களெல்லாம் எம்மைப்பற்றியும் எண்ணக்கூடுமென்று நான் அவ்வப்போது எண்ணுவதுண்டு. உண்மையில் பரிமாண மிகு நண்பனொருவனும் என் மனவெளி நண்பர்களிலொருவனே. அவனுடனும் நான் அவ்வபோது தனிமையில் நேரம் கிடைக்கும்போது உரையாடுவதுண்டு. அதுபற்றி பின்னர் சந்தர்ப்பம் கிடைக்கையில் கூறுவேன்.

நான் உருவாக்கிய, தட்டையர் மனவெளி நண்பர்களில் நான் அடிக்கடி உரையாடும் தம்பதியினராக சதுரன் & வட்டநிலா தம்பதியைக்கூறுவேன். அவர்களுடன் நான் நினைத்தபடியெல்லாம் உரையாடுகையில் ஏற்படும் வியப்பும், இன்பமும் விபரிக்க முடியாதவை. உதாரணத்துக்கு ஓர் உரையாடலைத் தருகின்றேன். இதற்கிடையில் இவையெல்லாம் தேவைதானா என்றும் நீங்கள் ஒருவேளை கேள்விகள் எழுப்பக் கூடும். அதற்கான என் திடமான பதில் தேவைதான் என்பதுதான். நான் ஆரமபத்திலேயே கூறியிருக்கின்றேன் என் ஆளுமையை அறிவதற்கு என் எண்ண் ஓட்டங்களெல்லாம் மிகவும் அவசியமென்று. இவற்றையெல்லாம் அறிவதன் மூலமே நீங்கள் என் ஆளுமையினை ஓரளவுக்காகவது அறிய முடியும்.

இவையெல்லாம் யதார்த்தமற்றவையென்று நீங்கள் எள்ளி நகையாடக் கூடும். முடிந்தவரையில் எள்ளி நகையாடுங்கள். செத்த உடலிலுனுள் இருக்கும் வேதாளத்தைப்போல் எள்ளி நகையாடுங்கள். ஆனால் அதற்கெல்லாம் நான் தளர்ந்து போய்விடுபவனல்லன். ஏனென்றால் நான் உள்ளிருந்து எள்ளி நகையாடும் வேதாளம் கண்டு தன் முயற்சியில் தளர்ந்து விடாத விக்கிரமாதித்தன். ஆனால் நவீன விக்கிரமாதித்தன். சரி விடயத்துக்கு மீண்டும் வருவோம்.

சதுரன் மற்றும் வட்டநிலா ஆகியோருடனான உரையாடல்:

சதுரன் - 'வணக்கம் விக்கிரமாதித்தரே. உங்களை நண்பராக நாம் அடைந்தது மிகப்பெரிய பேறு'

வட்டநிலா - 'உண்மைதான். என் கணவர் கூறுவது உண்மையான கூற்று. எம் இருப்பின் உண்மையினை உங்கள் இருப்பின் மூலமே அறிய முடிந்தது. இல்லாவிட்டால் எம் பரிமாணச்சிறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்து மடிந்திருப்போம். எமக்கு வெளியிலும் இப்பிரபஞ்சம் பரந்து விரிந்து கிடக்கின்றது என்பதை எமக்குப் புரிய வைத்தது உங்கள் நட்பு. எங்களால் உங்களை முழுமையாகப் பார்க்க முடியாது. ஆனால் எங்கள் பரிமாண உலகிலிருந்துகொண்டு ஊகிக்க முடியும். '

நான் - உண்மைதான். இதனைத்தான் நான் என் அண்டவெளி நண்பரான பரிமாணச்சித்தனை நினைக்கையில் , அவனுடன் உரையாடுகையில் நானும் எண்ணுகின்றேன். காலவெளியுடன் மேலும் பல பரிமாணங்களைக்கொண்ட நண்பர் அவர். அவரையும் என்னால் ஒருபோதுமே முழுமையாகப் பார்க்க முடியாது. ஆனால் அவரிருப்பு என் இருப்பின் சிறுமையினை வெளிப்படுத்துவதோடு , எம் புரிதல் எவ்விதம் எம் பரிமாணச்சிறை உலகில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் விளக்குகின்றது. '

பரிமாணச்சித்தனை எண்ணி வியக்கையில் சதுரன், வட்டநிலா பற்றி எண்ணிக்கொளவதுமுண்டு. இருப்பு இவைபோல் எத்தனை அடுக்குகளைக்கொண்டவையோ என்று எண்ணி வியப்பதுமுண்டு. இச்சமயங்களில் "உனக்குக் கீழே! உள்ளவர் கோடி! நினைத்துப்பார்த்து நிம்மதி நாடு." என்னும் கண்ணதாசனின் வரிகளை நான் எண்ணுவது தட்டையர்களைப்பற்றி எண்ணுகையில்தாம். எமக்கும் கீழே. தட்டையர் கோடி! நினைத்துப்பார்த்து நிம்மதி நாடுவோம்!

'தனிமை கண்டதுண்டு. அதிலே சாரமிருக்குதம்மா' என்றான் மகாகவி. தனிமைதான் இவ்விதமான எண்ணப்போக்குகளில் என்னை ஈடுபடுத்துகின்றது. மனவெளி நண்பர்களுடன் நட்பைப்பேண வைக்கின்றது. இருப்பு பற்றிய என் புரிதலை அதிகரிக்க வைக்கின்றது.

சிந்தனையில் மூழ்கிக்கிடக்கின்றேன். மனோரஞ்சிதத்தின் குரல் கேட்கின்றது.

'என்ன வழக்கம் போல சதுரனுடனும், வட்டநிலாவுடனுமான சந்திப்பா?"

அவளது குரலில் கேலி தொனிப்பதாக உணர்கின்றேன்.

'உன் கேள்வியின் அர்த்தமென்ன ரஞ்சிதம்? கேலி செய்கின்றாயா?"

'உங்களுக்குச் சதுரனுடன், வட்டநிலாவுடன் , பரிமாணச்சித்தனுடன் உரையாடுவதற்கே நேரம் போய்விடுகிறது. என்னைக் கவனிப்பதற்கு எங்கே நேரம்?"

'ரஞ்சிதம் ஏனப்படிச் சொல்கிறாய். நாளும், பொழுதும் என் நினைவிலூறி இருப்பவளல்லவா நீ. உன்னை நான் மறப்பதேயில்லையே. மறந்தால் தானே நினைப்பதற்கு.'

'கவிஞருக்குப் பேசவா கற்றுக்கொடுக்க வேண்டும். இருந்தாலும் உள்வெளி நண்பர்களுடன் உரையாடுவதற்கு நேரம் ஒதுக்குவதைப்போல் வெளிவெளி

நண்பர்களுடனும் உரையாடுவதற்கும் நேரத்தை அதிகம் ஒதுக்கு விக்கிரமா"

'வெளிவெளி.. ஆ! அற்புதமான விபரிப்பு. புறவெளியை இப்படிக் கூறும்போது இதற்கு வித்தியாசமான தொனி கிடைக்கின்றது. தமிழின் மொழிவளத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. இரு வெளிகளையும் ஈரர்த்ததில் பாவித்திருக்கின்றாய் ரஞ்சிதம்'

மனோரஞ்சிதம் புனனகைக்கின்றாள்.

பயணிப்பது தட்டையர்கள் உலகுக்கு என்
பொழுதுபோக்குகளிலொன்று.
பரிமாண வித்தியாசங்கள்
பயணங்களின் சாதக அம்சங்கள்.
தட்டையர்கள் உலகு எப்பொழுதும்
எனக்கு உவப்பானவை இதனால்தான்
அங்கு அவர்களைவிட உயர்ந்தவன்.

சுற்றியெங்கும் கொட்டிக் கிடக்கின்றன
தட்டையர்கள் உலகங்கள்
சுடர்களைப்போல் கண்களைச் சிமிட்டுகின்றன.
தட்டையர்கள் பரிமாணச்சிறைக்கைதிகள்
எம்மைப்போல்தான்.

எமக்கும் கீழே. தட்டையர் கோடி!
என நினைத்துப்பார்ப்போம்!
நிம்மதி நாடுவோம்!

அத்தியாயம் நான்கு: மின்னலே! நீ மின் பின்னியதொரு பின்னலா ?

'கண்ணம்மா' என்றேன். மனோரஞ்சிதம் பெருங்காதலுடன் திரும்பிப் பார்த்தாள். கண்ணம்மா என்று நான் அழைப்பதைப் பெரிதும் விரும்புபவள். அச்சமயங்களிலெல்லாம் பதிலுக்குக் 'கண்ணா' என்று என்னை அன்பூற மென்மையாக அழைப்பாள். அந்த அன்பு குழைந்த அவளது அழைப்பைக் கேட்பதற்காகவே அவளை நான் கண்ணம்மா என்று விளிப்பதுண்டு. என்னைப்பொறுத்தவரையில் இவ்விருப்புன் அற்புதமாக அவளை நான் காண்பதுண்டு. அவளற்ற இருப்பை கற்பனை செய்வதே எனக்கு மிகவும் சிரமமானது.

'என்ன கண்ணா மௌனமாகிவிட்டாய்?" என்றாள் அவள்.

'எல்லாம் நம் இருப்பு பற்றிய சிந்தனைதான் கண்ணம்மா"

'இருப்பு பற்றி.. வழக்கம்போல் தத்துவவிசாரம்தானா கண்ணா'

'கண்ணம்மா உனக்குத்தானே எனக்கு பாரதி பாடல்கள் பிடிக்குமென்று தெரியும். எனக்குப் பிடித்த அவரது பாட்டைக் கூறு பார்க்கலாம்."

'கண்ணை மூடிக்கொண்டு கூறுவேன் கண்ணா. 'நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே பாடல்தானே'

'சரியாகவே கூறினாய் கண்ணம்மா. நீ என் மனத்தை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறாயடி.'

'இந்தக்கவிதை எனக்கும் பிடித்தது கண்ணா. அதற்குக் காரணமே இருப்பு பற்றிய கவிஞரின் கேள்விகளே."

'நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் சொற்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ? சொற்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ? ஒரு விதத்தில் தர்க்கரீதியாகப் பார்க்கப்போனால் இதுகூடச் சரிதானென்று வாதிடலாம். இல்லையா கண்ணம்மா?'

"எப்படி கண்ணா? எமக்கு வெளியே விரிந்து கிடக்கின்றது நாம் காணும் இப்பிரபஞ்சம். இவ்வுலகம். இப்புற உலகு மாயை என்று எப்படிக் கூறுவது கண்ணா?'

"கண்ணம்மா, நாம் காணும் இந்த உலகம், இப்பிரபஞ்சம் , இவ்வழகிய இயற்கைக் காட்சிகள் இவையெல்லாமே இறுதியாக என் மூளையின் விளைவுகள் தானே. காட்சிகள் மூளையில் நிகழும் மின்னியற் செயற்பாடுகளின் மின்னியல் விளைவுகள் தாமே. மின்னியற் துடிப்புகள் தாமே. இறுதி விளைவாக நாம் உணர்வது, அறிவது எல்லாமே மூளையின் செயற்பாடுகள் தாமே. இந்நிலையில் எப்படி நீ கண்ணம்மா இவையெல்லாம் மூளைக்கு வெளியில் உள்ளன என்று தீர்மானமாக எண்ண முடியும். நாம் பார்ப்பது , கேட்பது, உணர்வது, இருப்பது எல்லாமே மூளையில் செயற்பாடுகளே. எம் மூளைக்கு வெளியில் எவையுமே இல்லை. ஒருவகையில் அவ்வகையில் எல்லாமே மாயையோ என்றும் ஒருவர் வாதிடலாம். இல்லையா கண்ணம்மா?"

இதற்கு மனோரஞ்சிதம் எதுவிதப் பதிலெதனையும் கூறாமல் சிந்தனையில் சிறிது நேரம் மூழ்கியிருந்தாள்.

அவளது மௌனத்தைக் கண்டு நானே தொடர்ந்தேன்.

"இரவில் காணும் விரிந்திருக்கும் வானில் தென்படும் சுடர்கள் ,கிரகங்கள் இவையெல்லாம் வெவ்வேறு ஒளியாண்டுத் தொலைவுகளிலுள்ளன. இங்கிருந்து வரும் ஒளி வெவ்வேறு காலகட்டங்களில் அங்கிருந்து நீங்கியவை. இப்பொழுதுதான் இங்கு வந்தடைந்திருந்க்கின்றன. சூரிய ஒளி கூட எட்டு நிமிடங்களுக்கு முன்னர் புறப்பட்டதுதான். இப்பொழுது காண்கின்றோம். எனக்குத் தென்படும் நீ கூட உன்னிலிருந்து வரும் ஒளி மீதான என் மூளையின் செயற்பாடுதான். உன் குரல், உன் வடிவம் இவையனைத்துமே என் மூளையின் செயற்பாடுகளே."

'சரி கண்ணா, அப்படியென்றால் வெளியில் இந்த உலகு, பிரபஞ்சம் விரிந்து கிடக்கின்றது உண்மைதானே. அவற்றை எம் மூளையின் செயற்பாடுகளாக நாம் கண்டாலும் அவையும் உண்மையாக வெளியில் இருக்கின்றனதானே."

"கண்ணம்மா, உன் அறிவை உண்மையில் பாராட்டுகின்றேன். உன் தர்க்கச்சிறப்பையும் கூடவே பாராட்டுகின்றேன். உன்னுடன் இவ்விதம் உரையாடுவதில் உண்மையிலுள்ளது உவகை."

" ஆ! உண்மையில் உள்ளது உவகை. என்ன வரியிது!"

"கண்ணம்மா, பாரதியாலும் காணும் இவ்வுலகு வெறும் மாயை என்று நிராகரிக்க முடியவில்லை. அதனால்தான் இப்பாடலின் இறுதியில் 'காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்ப மன்றோ?
வீண்படு பொய்யிலே-நித்தம் விதிதொடர்ந் திடுமோ? காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதில்லை காண்பது சக்தியாம்-இந்தக் காட்சி நித்தியமாம்' என்று இந்தக்காட்சி நித்தியமென்கினறார்."

"பாரதியாரின் முடிவுக்குத்தான் நீயும் வருகின்றாயா இல்லை எல்லாமே மூளையின் செயற்பாடு என்றே நீயும் நம்புகின்றாயா?"

"சில சமயங்களில் நான் நினைக்கின்றேன்..."

'என்ன நினைக்கின்றாய் கண்ணா?"

"இருப்பு பற்றிய இந்த விடயத்தில் என்னால் உறுதியான எந்தவொரு நிலைப்பாட்டையும் இதுவரைக்கும் எடுக்க முடியவில்லை என்பதுதான் உண்மை. பார்ப்பது, இருப்பதாக நம்புவது, எல்லாமே எனக்குள் இருக்கும் ஒன்றா? எனக்கு வெளியில் இருப்பதை ஒருபோதுமே தர்க்கரீதியாக நிறுவ முடியாது. அப்படி நிறுவுவதற்கு என் மனத்தை விட்டு நான் வெளியேறி மனத்துக்கு வெளியில் செல்ல வேண்டும். அதுமட்டும் எம்மிருப்பில் நடைமுறைச் சாத்தியமில்லை. இந்நிலையில் எப்படி அவ்வளவு உறுதியாகக் கூற முடியும் வெளியில் உள்ளது உண்மைதானென்று."

"ஆப்படியென்றால் நானும் பொய்யா? உன்னுடன் இக்கணத்தில் உரையாடிக்கொண்டிருக்கின்றேனே அதுவும் பொய்யா?"

'ஏன் அப்படி இருக்கக் கூடாது கண்ணம்மா. நானே உருவாக்கிய உலகமாக, பிரபஞ்சமாக ஏன் காணபவையெல்லாம் இருக்கக் கூடாது."

"ஆப்படியென்றால் நீ யார் கண்ணா? நீயாவது இருக்கின்றாயா சொல் கண்ணா?'

இப்படியாக மனோரஞ்சிதமுக்கும் எனக்குமிடையிலான உரையாடல் மிகவும் சுவாரசியமாக, தத்துவார்த்த ரீதியில் சென்று கொண்டிந்தது. மனோரஞ்சிதம் என் தேடலை நன்கு உணர்ந்தவள். என் ஞானத்தை நன்கு புரிந்துகொண்டவள்.

மனோரஞ்சிதமே தொடர்ந்தாள்:

"உண்மையான நான்!
உறங்கிக்கிடக்கின்றேன்.
பொய்யான நான்!
பேயாட்டம் ஆடுகிறேன்.
உண்மையான நான் யார்?
பொய்யான நான் யார்?

பிறந்த பொழுது பெயரிட்டு, சீராட்டி,
பாராட்டி வளர்த்த இந்த உடம்பு நானா?
கல்வியும் கலைகளும் கற்று
அருமை பெருமையாய் வளர்ந்தது நானா?
அறிந்தோம் எனச் செருக்குற்றது நானா?

பக்தியில் மெய்ம்மறந்து நிற்பது யார்?
நானா?
திக்குத் தெரியாது திகைப்பது யார்?
நானா?
எதையோதொலைத்தது போல் பரிதவிப்பது யார்?
நானா?
இவை பொய்யானால்
உண்மையில் நான் யார்?"

"ரஞ்சிதம் அற்புதமாக உமது உணர்வுகளைக் கவிதையாக வெளிப்படுத்தியிருக்கின்றீர். வாழ்த்துகள்.   இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்ட தேடலைப் பிரதிபலிக்கும் உணர்வுகள். தொடர்ந்து இது போல் சிந்தனையை எழுத்தில் வடிக்கவும். சிறப்பான கவிதைகள் பல பிறக்கும்."

"கண்ணா உன் ஊக்கத்துக்கு நன்றி. உனதூக்கமே என்னையும் இவ்விதம் சிந்திக்க, எழுத வைக்கின்றது. எல்லாம் உன் தயவுதான்."

"ஆப்படி இலகுவாக உன் திறனைக் குறைத்து மதிப்பிட முடியாது கண்ணம்மா. உனக்கு இயற்கையாகவே எழுத்தாற்றல் இருக்கிறது. என் பதின்ம வயதுகளில் இப்படியொரு கவிதை நானும் எழுதியிருக்கின்றேன்.

சிந்தனையின் புயல்கள் வீசி
புழுதி பறக்கையிலே
அடிவயிற்றைக் கீறியொரு
திகில் ஊடுருவிச் செல்லும்.

ஆத்துமாவின் கேள்வியொன்று
சிரித்து நிற்கும்.
நானென்றால் நான் யார்?
நானென்றால் இவ்வுடலோ?
நானென்றாலுடலாயின்
சீழ்ப்பிடித்து நாறுகையில்
இந்த 'நானெ'ங்கே?
நானென்றால் உள்மனமோ?
அன்றி அம்மனத்தே விரவி
நிற்கும்
அவ்வுணர்வோ?
நானென்றாலுடலாயின்
நடையிழந்து, மொழியிழந்து
நிலைகுலைந்து போகையில்
இந்த 'நானெ'ங்கே?
காணுங்கனவெல்லாம்
கனன்றெரியும் சினமெல்லாம்
மெய்சிலிர்க்கும் மயக்கமெல்லாம்
உணர்வெல்லாம், உடலெல்லாம்
'நான்' தானோ?
வெறுமைகள் சிரிக்கும்]
என்னுடலுமோர்
அண்டம் தானோ?
அப்படியாயின்,

'நான்' நான் மட்டும்தானா?
நான் தான் பிரபஞ்சமோ?
பிரபஞ்சம் நான் தானோ?"

'வாவ்.. உனக்கு அந்த வயதிலேயே இவ்வித எண்ணங்கள் வந்திருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது கண்ணா."

'எனக்கும்தான் கண்ணம்மா, உனக்கும் இவ்விடயங்களில் இவ்வித நாட்டங்களிருப்பது வியப்பையும், மகிழ்ச்சியையும் தருகின்றது."

"கத்தி முனையில் நடப்பது போல் இவ்வாழ்வு கண்ணா. எப்போதும் கவனம் வேண்டும் மனமே , சத் பொருளை பற்றிக் கொள், மித்தையை ஆராய்ந்து விலக்கு. நீண்டதோர் கனவென்று சொன்னார்கள் ஆமாம் உண்மை தானே. அழகழகாய் உருவங்கள் வான் வெளியில் மேகங்கள் எத்தனை கதை புனையும். அத்தனையும் பொய்யே. அதுபோலவே இந்த மானிட வாழ்வும்."

'சத் மித் பற்றியெல்லாம் இவ்வளவு விரிவாக அறிந்து வைத்திருக்கின்றீரே கண்ணம்மா. உண்மையில் எனக்கு இவ்வகையான ஆத்மீகக் கோட்பாடுகளிலெல்லாம் நாட்டமிருப்பதில்லை. காரணம் நான் எதனையும் அறிவியலூடு அணுகுபவன்."

மனோரஞ்சிதம் தொடர்ந்தாள்: "விஞ்ஞானமும், மெய்ஞானமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இறுதியில் ஒன்றைத்தான் இரு வேறு பார்வைகளில் அணுகுகின்றன என்றே கருதுவதுண்டு."

கண்ணம்மா,
உண்மையென்று ஏதேனுமொன்றுண்டா ?
நான் பார்ப்பது, நீ இருப்பது இதுவெல்லாம்
உண்மையென்று எவ்விதம் நான் நம்புவது ?
நீயே சொல். நீ சொல்கின்றாய் நீ இருக்கிறாயென்று.உண்மையாக
நீ இருக்கின்றாயென்று.
என்னை விட்டுத் தனியாக எப்பொழுதுமே
இருப்பதாக நீ கூறுகின்றாய்.
எவ்விதம் நம்புவது.

ஆயிரம் மில்லியன் ஒளிவருடங்களிற்கு
அப்பாலிருந்து இருந்து வரும்ஒளிக்கதிர்களுக்கும்
உன்னிலிருந்து வரும் ஒளிக்கதிர்களுக்கும்
இடையிலென்ன வித்தியாசம் ?நேரத்தினைத் தவிர.

உனக்கும்எனக்குமிடையில்எப்பொழுதுமே ஒரு தூரம்
இருக்கத் தானே செய்கிறது. அது எவ்வளவுதான் சிறியதாக
இருந்த போதிலும்.

எப்பொழுதுமே ஒரு நேரம் இருக்கத் தானே செய்கிறது
கணத்தினொரு சிறுபகுதியாக என்றாலும்.

நீ இருப்பதாக நீ சொல்லுவதைக் கூட
நான் அறிவதற்கும் புரிவதற்கும் எப்பொழுதுமே இங்கு
நேரமுண்டு. தூரமுமுண்டு கண்ணே!

காண்பதெதுவென்றாலும் கண்ணே! அதனை அப்பொழுதே
காண்பதற்கு வழியென்றுண்டா ?

காலத்தைக் கடந்தாலன்றி ஞாலத்தில் அது
நம்மால முடியாதன்றோ ?

தூரமென்று ஒன்று உள்ளவரை நேரமொன்று இங்கு
இருந்து தானே தீரும் ? அது எவ்வளவுதான் சிறியதாக
இருந்த போதும்.

வெளிக்குள் காலத்திற்குள் கட்டுண்டதொரு இருப்பு
நம் இருப்பு கண்ணம்மா!

காலத்தினொரு கூறாய்
உன்னை நான் காண்பதெல்லாம் இங்கு
உன்னை நான் அறிவதெல்லாம்
மின்னலே! மின் பின்னியதொரு பின்னலா ?
உன்னிருப்பும் இங்கு மின் பின்னியதொரு
பின்னலா ? என் கண்ணே!
என் கண்ணம்மா!

அத்தியாயம் ஐந்து - ஆனை பார்த்த அந்தகர்கள்!

மனோரஞ்சிதம் அவ்வப்போது தமிழ்க் கலை, இலக்கியம் பற்றியும் கருத்துகளை உதிர்ப்பதுண்டு. அவளது கருத்துகள் எப்பொழுதுமே சிந்தனையைத் தூண்டுபவையாக, ஆழமான தர்க்கத்தை வேண்டுபவையாக இருப்பது கண்டு நான் பெரிதும் ஆச்சரியப்படுவதுண்டு. இவ்விதமாக அவளைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் அவள் ஆழ்ந்த சிந்தனை நிலையினைக் கண்டு "என்ன பலமான சிந்தனை?" என்று கேட்டாள். கேட்டுவிட்டு என் பதிலை எதிர்பார்த்து என்னையே பார்த்து நின்றாள்.

"வேறொன்றுமில்லை கண்ணம்மா, எல்லாம் நம் காலத்து இலக்கியவாதிகளைப்பற்றித்தான். ஆளுக்காள் குழுக்களாகப் பிரிந்து நின்று தாமே சரியென்று வாதிட்டுக்குகொண்டிருக்கும் இவர்களைப் பார்த்தால் சிரிப்பு வராமல் வேறென்ன வரும். நீயே சொல் கண்ணம்மா."

"இலக்கியமோர் யானை" என்றாள் பதிலுக்கு மனோரஞ்சிதம்.

"யானையா?"

'ஓம். யானைதான்" என்று தீர்மானமாகச் சொன்னாள் மனோரஞ்சிதம் மீண்டும். அவளது அந்த உறுதி அவள் தன் தீர்மானத்தில் மிகவும் தெளிவாகவிருக்கின்றாள் என்பதை நன்கு புலப்படுத்தியது.

"ஒரு விதத்தில் நீ சொல்வதும் சரிதான் கண்ணம்மா. இலக்கியத்தில்தான் எத்தனை எத்தனை போக்குகள்."

"கண்ணா, போக்குகள் பல இருப்பது தவறானதொன்றல்ல.அவையெல்லாம் வளர்ச்சியின் அறிகுறிகளே. பிரச்சினை என்னவென்றால்...."

"என்ன பிரச்சினை கண்ணம்மா?"

"இலக்கியத்தின் போக்குகள் அனைத்துமே மனித இருப்பைப் பல்வழிகளில் வெளிப்படுத்துபவை. மனிதரின் அறிவு, புரிதலுக்கேற்ப இவையும் வேறுபடும். மனிதர்கள் எல்லாரும் ஒரே நிலையில் அறிவைப்பொறுத்தவரையில் இருப்பவர்கள் அல்லர். பல்வேறு படிக்கட்டுகளில் இருப்பவர்கள். எல்லாராலும் எல்லாப் போக்குகளையும் இரசிக்க முடியாது. புரிந்துகொள்ள முடியாது. இல்லையா கண்ணா?"

"அம்மாடியோவ்.. என் கண்ணம்மாவுக்குள் இவ்வளவு விசயங்களா? உண்மையிலேயே பிரமிப்பைத் தருகிறாயடி கண்ணம்மா."

"ஏன் ஆணுக்கு நிகராகப் பெண்கள் இருப்பதை நம்ப முடியவில்லையா கண்ணா" இவ்விதம் கேலியாகக் கண்களைச் சிமிட்டிய மனோரஞ்சிதம் தொடர்ந்தாள்:

"ஒருமுறை எழுத்தாளார் சுந்தர ராமசாமி கூறியிருந்தது நினைவுக்கு வருகின்றது."

"என்ன கூறியிருந்தார்?"

"அவர் அவரது பால்ய பருவத்தில் மலையாள மொழியிலேயே படித்ததாகவும், தமிழில் வாசிக்கத்தொடங்கியபோது அவருக்குப் பதினாறு வயதிருக்குமென்றும், தமிழில் வாசிக்கத்தொடங்கியபோதே அவர் தீவிர இலக்கியப் படைப்புகளைப் படிக்க ஆரம்பித்து விட்டதாகவும் அவர் கூறியிருந்தார் கண்ணா."

"மூன்று வயதில் உமையம்மையின் ஞானப்பாலுண்டு தேவாரம் பாடிய சம்பந்தர்போல் எடுத்த எடுப்பிலேயே தீவிர இலக்கியத்துக்குள் குதித்து விட்டார் சு.ரா என்று சொல் கண்ணம்மா. எல்லோரும் சு.ராவைப்போல் எடுத்த எடுப்பிலேயே தீவிர இலக்கியத்துக்குள் காலடி எடுத்து வைக்க முடியாது கண்ணம்மா. குழந்தை இலக்கியம், வெகுசன இலக்கியமென்று படிப்படியாக வாசிப்பில் பரிணாமமடைந்துதான் தீவிர இலக்கியத்துக்குள் பிரவேசிக்க முடியும். நான் அப்படித்தான் நுழைந்தேன் கண்ணம்மா."

"கண்ணா, சு.ரா ஒன்றை மிகவும் இலகுவாக மறைத்து விட்டார். ஆரம்பத்தில் அவர் மலையாள மொழியில்தான் படித்திருக்கின்றார். அப்பொழுது அவர் குழந்தை இலக்கியம், வெகுசன இலக்கியமென்று படித்துப் பரிணாமமடைந்திருக்கலாமல்லவா. அதன் பின்னர் அவர் தமிழில் வாசிக்கத்தொடங்கியபோது அவர் வாசிப்பில் முதிர்ச்சியடைந்த ஒருவராகத்தானேயிருக்கிறார். அப்போது அவரால் தீவிர இலக்கியம் படிப்பதில் சிரமமெதுவுமிருந்திருக்காது. ஆச்சரியப்படவும் அதிலெதுவுமில்லை. என்ன கண்ணா நினைக்கிறாய்?"

மனோரஞ்சதத்தின் பேச்சிலிருந்த தெளிவும், தர்க்க நியாயம் மிக்க ஞானமும் உண்மையிலேயே என்னைப் பிரமிக்கத்தான் வைத்தன. இவளுடன் இவ்விதம் எவ்வளவு நேரமானாலும் பேசிக்கொண்டேயிருக்கலாம்.

"கண்ணம்மா, நான் உண்மையில் இந்தக் கோணத்தில் சிந்தித்திருக்கவேயில்லை. நீ சொல்வதுதான் சரி. நிச்சயம் அவரது வாசிப்புப் பரிணாமமும் குழந்தை இலக்கியம், வெகுசன இலக்கியமென்றுதான் வளர்ந்திருக்கின்றது. ஆனால் அவரது அந்தக் கூற்று தமிழில் வாசிக்கத் தொடங்குகையிலேயே தீவிர இலக்கியத்துக்குள் தான் இறங்கி விட்டதாகக் கூறியது பொருள் மயக்கம் மிக்கது கண்ணம்மா. கண்ணம்மா நீ கூறுவதுதான் எனக்கும் சரியாகப் படுகின்றது."

ஆனை பார்த்த அந்தகர்கள்!

சொன்னார் நண்பர்
"சொல்லப்படாதவரிவர்" என்று.
அதற்கு நான் கூறினேன்
"ஆனை பார்த்த குருடர்களிடம்
அதற்கு விளக்கம் கேட்டிருக்கின்றீர்கள்.
அதனால்தானிந்த குழப்பம்"என்று.
"குழப்பமா? என்ன குழப்பம்?"
என்று தலையில் கை வைத்தார் நண்பர்.
"சொல்லப்படாதவர் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்களே"
"சொல்லியிருக்கின்றேன் சொல்லப்படாதவர் பற்றி.
ஆமாம்! நீங்கள் சொல்லுவது சரியே"
சொன்னார் பதிலுக்கு அவர்.
"அதுதான் கூறினேன் குழப்பமென்று" என்றேன்.
அதற்கும் அவர் "புரியவில்லை" என்று

மீண்டும் தலையில் கை வைத்தார்.
"ஆமாம்! நீங்கள் குழம்பிப் போயிருக்கின்றீர்கள்" என்றேன்.
"ஆமாம். நீங்கள் சொல்லியதால்" என்றார் அவர்.
"சொல்லப்படாதவர் பற்றிச் சொல்லியதால்...."
"சொன்னேன். ஆனால்.."
"சொல்லவந்ததைச் சொல்லி முடிக்கவில்லையே.
சொல்லுவேன் கேளுங்கள். பின் ஏதாவது
சொல்லுங்கள்" என்றேன்.
"சொல்லுங்கள். சொல்லி முடிக்கும்வரை ஏதும்
சொல்லாமலிருப்பேன்" என்றார்.
"சொல்ல வந்ததென்னவென்றால்..
ஆனை பார்த்த குருடர்கள் பற்றி"
என்றேன்.
"ஆமாம்! ஆனை பார்த்த குருடர்களைப்பற்றி.
அவர்களைப்பற்றிச் சொல்லுங்கள்" என்றார்.
"அவர்களைப்பற்றிச் சொல்ல உண்டு.
அவர்கள் ஆனை பார்த்த அந்தகர்கள்" என்றேன்.
"ஆமாம்! அவர்கள் ஆனை பார்த்த அந்தகர்கள்!
அந்தகர்கள் பார்த்த ஆனையில் இல்லாதவர் அவர்.
அவர் சொல்லப்படாதவர்" என்றார் அவர்.
"சொல்லிவிட்டீர்களே! சொல்லப்படாதவரைப்பற்றி" என்றேன்.
"சொல்லிவிட்டேன் சொல்லப்படாதவரைப்பற்றி. ஆமாம்!
சொல்லிவிட்டேன்" என்றார்.
"ஆனை பார்த்தவர் நீங்கள்" என்றேன்.
"ஆனையைப் பார்த்தவன் நானா"
அவர் மீண்டும் தலையில் கை வைத்தார்.
"ஆமாம்! ஆனை பார்த்தவர்தான்.
அந்தகர்களுக்கு மத்தியில்" என்றேன்.
சொல்லப்படாதவரைப்பற்றிச் சொல்லியவர்
சொன்னார்:
:ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்.
ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்"
ஆடினார் அவர். பாடினார். ஆடியே பாடினார்.
ஆடினார் அவர். பாடினார். ஆடியே பாடினார்.
ஆடினார் அவர். பாடினார். ஆடியே பாடினார்.
"ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்.
ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்."

அத்தியாயம் ஆறு: ஒட்டகங்கள்!

என் பதின்ம வயதுகளில் என் வயதுக்கு மீறிய வளர்த்தி கண்டு நண்பர்கள் 'வாடா ஒட்டககச் சிவிங்கி' என்பார்கள். ஏனென்றால் எனக்கு நீண்ட கால்கள். ஓட்டகச் சிவிங்கி என்பதை விட அதிலுள்ள ஒட்டகம் எப்போதும் என்னைக் கவர்வதுண்டு. அதற்குக் காரணம் அதன் இயல்பும், உறுதியுமே. பாலை வனச் சூழலில் தாக்குப்பிடிக்கும் வகையில் அதன் உடலமைப்பு அமைக்கப்பட்டுள்ளது படைப்பின் அற்புதமென்பேன். அதன் முதுகிலுள்ள திமில்களில் கொழுப்பையும் , இரப்பையிலுள்ள அறைகளில் நீரையும் சேமித்து வைக்கும் ஒட்டகங்கள் பத்து மாதங்கள் வரையில் நீரருந்தாமல் வாழக் கூடியவை. குளிர் வெப்ப நிலைகளுக்கு ஈடுகொடுத்து உடல் வெப்பநிலையை மாற்றி வாழும் தன்மை மிக்கவை. பாலையில் வீசும் மணற் புயல்களிலிருந்து பாதுகாக்கும் தன்மை மிக்க மூக்குகள். கண்கள், காதுகளைக் கொண்டவை. கண் இமைகள் மூடியிருக்கும்போதும் பார்வையைத் தடுக்காத வகையில் அமைந்துள்ளதாகவும் அறிந்திருக்கின்றேன். அது மட்டுமல்ல அதிக சுமை தாங்கி, விரைவாக ஓடும் வல்லமையும் மிக்கவை.

ஓட்டகங்கள் என் கவனத்தை ஈர்த்ததற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. இனக்கலவரங்களால் சொந்த மண்ணில் , சர்வதேசப் பந்தின் மூலை முடுக்கெல்லாம் அகதிகளாக அலைந்து திரிந்து , எதிர்ப்படும் சவால்களையெல்லாம் எல்லாம் , புயல்களையெல்லாம் எதிர்கொண்டு செல்லும் ஒட்டகங்களாக எம்மவரை, என்னை நான் இனங்காணபதுண்டு. இவ்வகையில் அகதிகளுக்கொரு குறியீடாக நான் ஓட்டகங்களை எண்ணுவதுண்டு. ஒட்டகம் என்னும் சொல் ஒரு படிமமாக எனக்குத் தோன்றுவதுண்டு.

"என்ன கண்ணா சிந்தனை. அப்படியென்ன தலை போகிற சிந்தனை. கப்பலேதும் கவிழ்ந்து விட்டதா?"

எதிரில் கேலி கொஞ்சும் குரலில் கேட்டபடி வந்தவள் மனோரஞ்சிதம்.

"சரி கண்ணம்மா, நீதானே மிகவும் திறமைசாலியென்று உன்னை அதிகம் மெச்சிக்கொள்வாயே. நீயே சொல்லு பார்க்கலாம் நான் என்ன யோசிக்கிறேனென்று?"

"உன் மனத்திலை இருக்கிறதைக் கண்டு பிடிக்கும் சக்தியெல்லாம் எனக்கில்லை கண்ணா. பேசாமல் நீயே சொல்லிவிடு."

"இல்லை. உனக்கு ஒரு துப்பு தருகின்றேன். அதிலிருந்து கண்டு பிடித்துக்கொள். இது ஒரு மிருகம்."

"மிருகமா? " என்று கூறிவிட்டு ஒருமுறை கலகலவென்று சிரித்தாள் மனோரஞ்சிதம்.

"மிருகமென்றால் மிகவும் இலகுவானதாச்சே. உனக்கு மிகவும் பிடித்த மிருகம், பறவையக் கண்டு பிடிப்பது அவ்வளவின்றும் கஷ்ட்டமானதல்ல கண்ணா."

இவ்விதம் கூறியவள் தொடர்ந்தாள் :" நீ குறிப்பிடும் மிருகம் இந்தியாவில் ராஜஸ்தானில் காணப்படும் ஒன்றா?" கூறியவள் கண்களையும் சிமிட்டினாள்.

"ஏன் கண்ணம்மா சுற்றி வளைப்பு. நீதானே கண்டுபிடித்து விட்டாயே. பேசாமல்

மிருகத்தின் பெயரையே கூறுவதுதானே."

அதற்கு மனோரஞ்சிதம் அருகில் ஓட்டும் வகையில் வந்து "ஓட்டட்டுமா. இந்த ஒட்டகத்துடன் ஒட்டட்டுமா" என்று என் மீது தன் உடலால் பலமாக இடித்தாள்.

அவளது மென்னுடல் பட்டு என்னுடல் ஒரு கணம் சிலிர்த்தது.

"நான் தானே சொன்னேன் நீ திறமைசாலியென்று. அது சரி எனக்குப் பிடித்த பறவையென்றாய். அது எந்தப் பறவை?"

அதற்கவள் "அது புல்லை அதிகம் சாப்பிடும். அதி உயரத்திலும் பறக்கும். நீண்ட நேரமும் களைக்காமல் பறக்கும். கூட்டங் கூட்டமாகப் பறக்கும். பெயரை நீயே கண்டு பிடி கண்ணா."

அவள் கூறுவது சரிதான். அவள் கூறுவது கனடா வாத்துகளைத்தான்.

"கனடா வாத்து, இந்த ஒட்டகம் இரண்டுக்குமிடையில் ஒரு ஒற்றமை இருப்பதைக் கவனித்தாயா?"

"என்ன அப்படியொரு முக்கியமான ஒற்றுமை கண்ணா?"

'இரண்டுமே தாவரபட்சணிகள். மச்சம் சாப்பிவிடுவதில்லை. கண்ணம்மா. ஆனால் அசாத்தியமான உடல் வலி மிக்கவை. இல்லையா"

இதற்குப் பதிலளித்த மனோரஞ்சிதம் "ஓட்டகங்கள் புல்லை மட்டுமே சாப்பிடுவதில்லை. சந்தர்ப்பம் ஏற்பட்டால் மச்சமும் சாப்பிடும்,. சங்கப்புலவர் ஒருவர் கூட இவ்விதம் ஒட்டகங்கள் மச்சம் சாப்பிடுவதைப் பதிவு செய்திருக்கின்றார் தெரியுமா?"

மனோரஞ்சிதம் சங்கத்தமிழ் இலக்கியத்தைக் கரைத்துக் குடித்தவள். நிச்சயம் அவள் கூறுவது பொய்யாயிருக்க முடியாது. அவளே தொடர்ந்தாள்:

"அகநானூறில் மதுரை மருதன் இளநாகனார் எழுதிய கவிதையில்
'
'... குறும்பொறை உணங்கும் தகர் வெள்ளென்பு
கடுங்கால் ஒட்டகத்து அல்கு பசி தீர்க்கும்
கல் நடுங் கவலைய கானம் நீந்தி'

என்று வருகிறது. அதில் ஒட்டகம் எழும்பு தின்னும் என்றிருக்கின்றதே"

"கண்ணம்மா, என்னால் கொஞ்சமும் நம்பவே முடியவில்லை ஒட்டகங்கள் எழும்பைத் தின்னுமென்பதை. ஒட்டகங்கள் தாவரபட்சணிகள் என்றே இதுவரையில் எண்ணி வந்தேன்."

"நானும் தான் கண்ணா, ஆனால் ஒட்டகங்கள் தம் உடலில் பொஸ்பரஸ் குறைபாடு ஏற்படுகையில் இவ்விதம் எழும்பைத் தின்னுமென்று பத்திரிகையொன்றில் வாசித்திருக்கின்றேன். "

"அடேயப்பா, நம் சங்கப்புலவர் மருதன் இளநாகனாரின் மிருக அவதானிப்பு வியப்பைத் தருகிறது. இல்லையா கண்ணம்மா?"

"கண்ணம்மா, இந்த ஒட்டகம் பற்றிய தகவல் மூலம் ஓட்டகம் மீதான என்மதிப்பு இன்னும் அதிகமாக உயர்ந்து விட்டது. ஒட்டகத்தின் இன்னுமொரு திறமையாக இதனைக் கூறலாம். அதன் மருத்துவ அறிவு உண்மையிலேயே ஆச்சரியத்தைத்தான் தருகின்றது."

"கண்ணா , ஒட்டகத்தைப்பற்றிய இந்த உரையாடல் எனக்கு எழுத்தாளர் நாஞ்சில் நாடனின் ஒட்டகம் பற்றிய சிறப்பானதோர் ஆய்வுக் கட்டுரையை நினைவூட்டுகின்றது. 'ஓங்கு நிலை ஒட்டகம்வ் என்பது அக்கட்டுரையின் தலைப்பு. அதில் அவர் ஒட்டகம் என்பது சென்னைப் பல்கலைகழகப் பேரகராதி உஸ்ட்ராகா என்னும் சொல்லே ஒட்டகம் என்னும் சொல் உருவானதற்கு மூலம் என்று குறிப்பிட்டதுடன் நல்லதொரு கேள்வியையும் கேட்டிருக்கின்றார்.'

'என்ன கேள்வி கண்ணம்மா?'

"இவ்விதம் ஒட்டகம் என்னும் சொல்லைத் தமிழ் ஏற்றுள்ளது. சங்கத்தமிழனும் பாவித்துள்ளான. இந்நிலையில் தமிழ் உள்வாங்கும் பிற சொற்களால் தமிழ் அழிந்துவிடத் தமிழ் அவ்வளவு நொய்மையானதா? ..ஒட்டகத்தால் மொழி அழியாது எனில் ஆப்பிளால் அழிந்து விடுமா? என்கின்றார். இவ்விடயத்தில் நான் நாஞ்சில் நாடனின் கட்சி கண்ணா"

"கண்ணம்மா நான் உன் கட்சி" என்று கண் சிமிட்டினேன்.

'இங்கு நாஞ்சில்நாடன் பாவித்துள்ள ஓங்கு நிலை ஒட்டகம் என்னும் சொற்றொடர் ஆற்றுப்படை நூல்களிலொன்றான சிறுபாணாற்றுப்படையில் வருகிறது. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. அதனை நாஞ்சில் நாடன் மேற்படி கட்டுரையிலும் குறித்திருப்பார்.

ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன
 வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்

இதுதான் அவ்வரிகள்."

மனோரஞ்சிதமே மேலும் தொடர்ந்தாள்:

"கண்ணா, மேற்படி கட்டுரையில் நாஞ்சிலார் அகநானூறில் வரும் மருதன் இளநாகனாரின் ஒட்டகம் பற்றிய வரிகளில் வரும் ' தகர் வெள்ளென்பு கடுங்கால் ஒட்டகத்து அல்கு பசி தீர்க்கும்' என்னும் சொற்றொடரில் வரும் என்பு என்பது பற்றியும் சிறப்பானதோர் ஆய்வினைச் செய்திருக்கின்றார். என்பு என்பதைத் திருவாசகம் எலும்பைக் குறிக்கப்பாவிக்கும், திருக்குறள் உடம்பைப் குறிக்கப்பாவிக்கும். சிதம்பர ரேவண சித்தர் தொகுத்த அகராதி நிகண்டு (1921) என்பு புல்லைக் குறிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டும் நாஞ்சில் நாடன் மேற்படி அகநானூறு பாடலில் வரும் என்பு என்பது புல்லாகவும் இருக்கலாமல்லவா என்று கேட்கின்றார். புல்லை ஒட்டகம் தின்னும்தானே. இதனைத் தீர்மானிக்கும் பொறுப்பினை அவர் தமிழறிஞர்களிடம் விட்டு விடுகின்றார்."

'கண்ணம்மா, சிதம்பர ரேவண சித்தரின் அகராதி நிகண்டு எனக்கு நம்நாட்டு மேலைப்புலோலி வித்துவான் நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியை

நினைவூட்டுகின்றது. 1911இல் வெளியான அகராதி. அதில் என்பு என்பதற்கு எலும்பு, புல் என்று ஈர அர்த்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் என்னைப்பொறுத்தவரையில் அகநானூறில் வரும் தகர் வெள்ளென்பு என்பது சுள்ளி போன்ற வெண்மையான எலும்பு என்னும் பொருள் தருவதால் தமிழ் உரையாசிரியர்கள் பலர் கூறுவதுபோல் எலும்பு என்பதையே குறிக்கும் என்பதுதான் என் நிலைப்பாடும். அண்மைய ஆய்வுகளின்படி ஒட்டகங்கள் பொஸ்பரஸ் குறைபாடு ஏற்படுகையில் எலும்பைச் சாப்பிடுமென்பதை எடுத்துக் காட்டுவதாலும், சுள்ளி போல் புல் இருப்பது அவ்வளவு பொருத்தமாகவில்லையென்பதாலும் என் நிலைப்பாடும் இதுதான்."

பதிலுக்கு மனோரஞ்சிதம் "கண்ணா, இவ்விடயத்தில் நான் உன் கட்சி" எனறாள். அவ்விதம் கூறுகையில் அவள் முகத்தில் , குரலில் காதல் உணர்வுகள் பொங்கி வழிந்ததை உணர்ந்தேன். நான் முன்பே கூறினேன் அல்லவா என் மனோரஞ்சிதத்துடன் உரையாடுவதில் எனக்கு மிகுந்த இன்பமென்று. இவ்வுரையாடலைக் கேட்கும் நீங்களும் நிச்சயம் இவ்விதமே உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

இவ்விதமாக என் சிந்தனையோடிக் கொண்டிருக்கையில் மனோரஞ்சிதம் மேலும் கூறினாள்:

'கண்ணா, நீயும் ஒருமுறை நாஞ்சிலாரின் கட்டுரையை வாசித்துப் பார். அதிலவர் தொல்காப்பியம் ஒட்டகம் பற்றிக் குறிப்படுவதையும் சுட்டிக்காட்டியிருப்பார். அத்துடன் ஒட்டகை என்று ஒட்டகத்தை அழைப்பது பற்றியும் கூறியிருப்பார்."

"கண்ணம்மா, போதும் போதும் இன்றைக்கு இந்த ஓட்டகம் பற்றிய புராணம். இன்னுமொரு நாள் மீண்டும் பார்க்கலாம்."

"அப்போ இன்று?" இவ்விதம் கூறிவிட்டு மனோரஞ்சிதம் கேட்கவும் நான் பாடினேன்:

"இந்த ஒட்டகத்தைக் கட்டிக்கோ. கெட்டியாக ஒட்டிக்கோ. வட்டவட்டப் பொட்டுக்காரி."

ஒட்டகங்கள்!

ஒட்டகங்கள் பாலைகளைக் கண்டு
துவண்டு விடுவதில்லை;
தளர்வதில்லை.
வீசும் மணற்காற்றுகளைக் கண்டு
அஞ்சுவதில்லை.
நீர் தேக்கி, நீண்ட தொலைவுகளை நாடிப்
பயணிப்பதில் அதிக பிரியம் கொண்டவை
அவை.
உளப்புயல்கள் வீசியடிக்கையிலெல்லாம்,
நினைவுச் சுழல்களுக்குள் சிக்கும்போதெல்லாம்,
அகக்கடலில் படகுகளையிழந்து
நீச்சலடிக்கையிலெல்லாம்
நான் ஒட்டகங்களை நினைப்பதுண்டு.
ஒட்டகங்களைப்போல் நானிருக்க வேண்டுமென்று
நினைப்பதுண்டு.
எவை கண்டும் தளராத

அவை பற்றி அவ்வேளைகளில் சிந்திப்பதுண்டு.

ஓ! ஒட்டகங்கள்தாம் எத்துணை உடலுறுதி மிக்கவை.
ஓ! ஒட்டகங்கள்தாம் எத்துணை உளவுறுதி மிக்கவை.
ஓ! ஒட்டகங்களைப்போல் நானுமிருக்க வேண்டும்!
ஓ! ஒட்டகங்களைப்போல் வலிமையுடனியங்க வேண்டும்.

அத்தியாயம் ஏழு: ஓரு பழைய புத்தகக்கடை அனுபவமும், எழுத்தாளர் முத்துசிவத்துடனான சந்திப்பும்!

எனக்குப் பிடித்த விடயங்களிலொன்று பழைய புத்தகக் கடைகளில் புத்தகங்கள் வாங்குவது. புதுக் கடைகளில் வாங்குவதை விடப் பழைய புத்தகக் கடைகளில் வாங்குவதிலுள்ள இன்பமே தனி. பழைய புத்தகக் கடைகளில் கிடைப்பதைப்போல் எல்லாவகைப் புத்தகங்களும் புதுப்புத்தகக் கடைகளில் கிடைப்பதில்லை. உதாரணத்துக்கு ஒன்று கூறுவேன். உங்களால் பழைய புத்தகக் கடைகளில் வாங்குவதைப்போல் புதுப்புத்தகக் கடைகளில் பால்ய பருவத்தில் பிடித்தமான இதழொன்றில் தொடராக வெளியான, ஓவியங்களுடன் கூடிய , அழகாக 'பைண்டு' செய்யப்பட்ட நூல்களை ஒருபோதுமே பெற முடியாது. அந்நூல்களைக் கைகளால் அளைகையிலுள்ள சுகம் இருக்கிறதே அதுவொரு பெரும் சுகமென்பேன். அவ்வகையான சுகத்தினை ஒருபோதுமே உங்களால் புதுப்புத்தகக் கடைகளில் பெற முடியாது. அவை மானுட இருப்பின் ஒரு காலத்தின் பதிவுகளை உள்ளடக்கியவை. நான் அவ்வகையாக 'பைண்டு' செய்யப்பட்ட புத்தகங்களைப்பற்றிக் கூறுகின்றேன். நான் இவ்விதம் கூறுவதால் என்னை நீங்கள் நான் புதுப்புத்தகக்கடைகளின் பிரதான எதிரி என்று மட்டும் தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள். ஆயினும் அவ்விதம் நீங்கள் கருதினால் அதை நான் தடுக்கப்போவதில்லை. ஏனெனில் அது உங்களின் சுதந்திரத்தில் நான் தலையிடுவதாக அமைந்து விடும். அதற்காக நான் வருந்தப்போவதுமில்லை.

அண்மையில் கூட வழியில் நானொரு பழைய புத்தகக் கடையினைக் கண்டபோது மனம் கேட்கவில்லை. உள்ளே எட்டிப்பார்த்தாலென்ன என்ற எண்ணமெழுந்தபோது வீடு முழுக்கக் குவிந்துள்ள புத்தகக் குவியல்களை ஒருமுறை எண்ணினேன். அண்மையில்தான் முடிவு செய்திருந்தேன் இனியும் புத்தகங்கள் வாங்குவதில்லையென்று. வாங்கிக்குவித்துள்ளவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக வேண்டியவர்களுக்கு, புத்தகப்பிரியர்களுக்கு, நூலகங்களுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று. இருந்தாலும் மனங் கேட்கவில்லை. இம்முறைமட்டும் கடைசித்தடவையாக இருந்துவிடட்டுமென்று எண்ணினேன். இவ்விதம் முடிவெடுத்தவுடன் அந்தப் பழையப் புத்தகக் கடைக்குள் நுழைவது எளிதாயிற்று.

நானே எதிர்பாராதவாறு, நீண்ட நாட்களாகத் தேடிக்கொண்டிருந்த, என் பால்யகாலத்து விருப்புச் சஞ்சிகைத் தொடரொன்று அழகாக பைண்டு செய்யப்பட்ட நிலையில் கிடைத்தது. எனக்குப் பிடித்த எழுத்தாளரின் வாழ்க்கை அனுபவத்தையொட்டிய உள்ளத்தைத் தொட்டுச் செல்லும் புனைகதை. புத்தகத்தின் முதல் பக்கத்தைப் பார்த்தேன். அழகான கையெழுத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது: "என் பால்ய காலத்துச் சகிக்கு என் பிரிய அன்பளிப்பு" எழுதியவர் பெயரைப்பார்த்தேன். என் பதின்மப் பருவத்தில் என் பால்ய காலத்துச் சகிக்கு நான் அன்பளிப்பாகக் கொடுத்திருந்த புத்தகம் அது.

இப்பொழுது சொல்லுங்கள். உங்களால் இது போன்றதொரு பழைய புத்தகத்தைப் புதுப்புத்தக்கடைகளிலொன்றிலாவது வாங்க முடியுமா? பழைய புத்தகக்கடைகளில் பழைய புத்தகங்கள் மட்டும்தாம் கிடைக்கவேண்டுமென்பதில்லை. பழசாகிவிட்ட இதயங்களும் அங்கு கிடைப்பதுண்டு.

இவ்விதம் பழைய புத்தகக் கடைகளுக்கு நான் செல்கையில் அடையும் இன்பத்தை விபரிக்க வார்த்தைகளில்லை. இன்று அவ்விதம் செல்கையில் மனோரஞ்சிதமும் என்னுடன் கூட வரப்போவதாக அடம் பிடித்தாள். வழக்கமாகச் செல்லும் அந்த, எனக்குப்

பிடித்த பழைய புத்தகசாலைக்கு அவளை அழைத்துச் சென்றேன். குழந்தையைப் போல் குதூகலத்துடனிருந்தாள் மனோரஞ்சிதம். அவளுக்கும் பழைய புத்தக்க கடையொன்றில் பக்கங்களை அலைவதென்றால் மிகவும் பிடிக்கும். என்னைப்போல்தான் அவள் இந்த விடயத்திலும்.

இம்முறை பழைய புத்தகக் கடையில் எமக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. பழைய புத்தகக் கடைக்குப் பழைய புத்தகங்களை நாடிச் சென்ற எம் முன் சற்றும் எதிர்பாராத வகையில் அந்தப் பழைய எழுத்தாளர் எதிர்பட்டார். ஒரு வகையில் பழைய எழுத்தாளரான அவர், பல வருடங்களை உள்ளடக்கிய தனது அஞ்ஞாதவாசத்தினை முடித்துவிட்டுத் தனது வாழ்க்கை அனுபவங்களைச் சுவையாக வெளிப்படுத்தும் வகையில் புது எழுத்தாளராகவும் மாறியிருந்தார். இன்றுள்ள சமுதாயத்துக்கு அவர் புது எழுத்தாளராகப் புலப்பட்டாலும், எனக்கு அவர் இன்னும் பழைய எழுத்தாளராகவே திகழ்ந்தார். பழைய எழுத்தாளராக அவர் எவ்விதம் எனக்கு அறிமுகமானாரோ அவ்விதமே இன்னும் தென்பட்டார். ஒரேயொரு மாற்றம் உரையாடலில் ஆரம்பத்தில் வட்டார வழக்கினைப் பெரிதும் பாவித்திருந்தார். புதிய எழுத்தாளரான பின்பு அதனை அனைவரையும் சென்றடையும் வகையில் பொதுவானதாக, சுவை மிகுந்ததாக ஆக்கியிருந்தார். இதுதவிர அவரது எழுத்தில் தத்யயேவ்ஸ்கியின், டால்ஸ்டாயின் ஆழம் கிடையாது. இருப்பு பற்றிய தேடல் கிடையாது. மானுட உணர்வுகளைத் தட்டையாக வெளிப்படுத்தியிருப்பார். இருந்தும் இன்றுள்ள மொழிச்சித்தர்கள் எல்லாரும் அவரது தட்டையான , ஆழமற்ற் எழுத்தைத் தூக்கிப்பிடித்து மெய்ம்மறப்பதைப் பார்க்கையில் நான் அடிக்கடி பிரமித்துப் போவதுண்டு.

இவ்வளவு தூரம் விபரிக்கப்படும் எழுத்தாளரின் பெயரை அறிய ஆவலாகவிருக்கின்றீர்களா? அப்படித்தான் நான் உணர்கின்றேன். மனோரஞ்சிதமும் அவரைப்பற்றி நான் அறிமுகப்படுத்துகையில் மிகவும் ஆவலுடனிருந்தாள்.

"வணக்கம் முத்துசிவம். கண்ணம்மா இவர்தான் எழுத்தாளர் முத்துசிவம். நவகாலத் தமிழில் தமிழகத்தில் நன்கறியப்பட்ட நம்மூர் எழுத்தாளர். சுவையாகச் சம்பவங்களை விபரிப்பதில் , அவற்றை அடுக்குவதில் வல்லவர். "

'வணக்கம் விக்கிரமாதித்தன். என்ன உங்களை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அழைக்கும்படி கூறியிருந்தேனே மறந்து விட்டீர்களே" என்று சிறிது உரிமையுடன் கூறிக் கடிந்து கொண்டார்.

மனோரஞ்சிதத்துக்கு வியப்பாகவிருந்தது.

"அது என்ன ஆறுமாதத்துக்கொரு தடவையான அழைப்பு, சந்திப்பு"

'கண்ணம்மா அது வேறு ஒன்றுமில்லை. முத்துசிவம் அவர்கள் இலக்கிய உலகில் மிகவும் பிரபலமானவர். நேர்காணல், எழுத்து என்று ஓய்வு ஒழிச்சலற்று இயங்கிக் கொண்டிருப்பவர். அவரை எல்லா நேரத்திலும் பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. இவ்விதமான சூழலில் அவர் சக எழுத்தாளர்களுடன் குறைந்தது ஆறு மாதத்துக்கொரு தடவையாவது தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகின்றார். அதுதான் விடயமே தவிர பெரிதாக வேறொன்றுமில்லை."

"ஓ! கிரேட். பழைய எழுத்தாளர் புதிய எழுத்தாளர்களுடன் தனது நட்பை இப்படிப்புதுப்பிப்பது எவ்வளவு நல்ல விடயம்."

மனோரஞ்சிதம் பழைய எழுத்தாளர் என்று கூறியபோது ஒரு கணம் எழுத்தாளர் முத்துசிவத்தின் முகத்திலோடி மறைந்த ரேகையின் தன்மையினை அறிவதில் சிறிது நேரம் கவனத்தைத் திருப்பி மீண்டேன். அக்கவனத்திருப்பல் தந்த புரிதலின் அடிப்படையில் கூறினேன்:

"கண்ணம்மா, இவர் பழைய எழுத்தாளரல்லர் இப்போது. காலத்துக்குத் தகுந்தபடி உருமாறிய இலக்கிய டைனசோர். புதிய எழுத்தாளர்"

தற்போது குறுகிய கணத்தில் எழுத்தாளர் முத்துசிவத்தின் முகத்திலோடிய ரேகைகளை அவதானித்து புரிதலொன்றினை ஏற்படுத்துக்கொண்டேன். அப்புரிதலில் புதிய எழுத்தாளர் என்னும் சொற்பதம் தந்த குறுகிய நேரத்துத் திருப்தியும், மகிழ்ச்சியும் கலந்த அவரது முகரேகைகளை அவதானித்தேன்.

"இலக்கிய டைனசோர். வாவ்! சரியான விளக்கம். அறிமுகம் கண்ணா" என்ற மனோரஞ்சிதம் எழுத்தாளர் முத்துசிவத்தைப் பார்த்து "வணக்கம், இலக்கிய டைனசோரான உங்களை இந்தப் பழைய புத்தகக் கடையில் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி." என்றாள்.

இதற்கு எழுத்தாளர் முத்துசிவம் "நன்றி உங்கள் கனிவான கருத்துகளுக்கு. நல்லது நீங்கள் பழைய புத்தகம் நாடி வந்திருப்பீர்கள். உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. உங்களிருவரையும் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி. மீண்டும் சந்திப்போம். இன்னுமோர் ஆறு மாதத்தின் பின் சந்திப்போம் விக்கிரமாதித்தா."

அவர் போனபின் மனோரஞ்சிதம் கூறினாள் : "உங்கள் பழைய எழுத்தாளர் விநோதமான பேர்வழி கண்ணா"

பதிலுக்கு நான் கூறினேன் : "கண்ணம்மா பெரிய பெரிய எழுத்தாளர்களில் பலர் இவ்விதமான விநோதப்பேர்வழிகள்தாம். வியப்பதற்கு ஏதுமில்லை."

"கண்ணா, அப்படியா சொல்லுகிறாய். ஆனால் நீ சொன்னாயே இலக்கிய டைனசோர் என்று. அற்புதமான, சிறப்பான படிமம். எப்படி இப்படியெல்லாம் உடனடியாக சிந்தித்து முடிவெடுக்க உன்னால் முடிகிறது. அதுதான் என்னைப் பிரமிக்க வைக்கின்றது."

"உன் சிந்தனை வீச்சும்தான் கண்ணம்மா"

"இருந்தாலும் நீ பலே பேர்வழி கண்ணா!"

'ஏன் அப்படிச் சொல்லுகிறாய் கண்ணம்மா"

'நீ டைனசோர் என்று குறிப்பிட்டது எந்தக் காலத்து டைனசோரைப் பற்றி கண்ணா"

" கண்ணம்மா, டைனசோர் குறைந்தது அறுபது மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இப்பூமியை ஆட்டிப்படைத்த விலங்கினம். பேருருவ விலங்கினம். மில்லியன் கணக்கான வருடங்கள் கோலோச்சிய விலங்கினம்."

" நீ சொல்லுவது சரிதான் கண்ணா, ஆனால்.."

'ஆனால்.. என்ன சொல்ல வருகிறாய் கண்ணம்மா"

"எரிகல் அழிவுக்குப் பின்னரும் டைனசோர் தப்பிப் பிழைத்துள்ளது. இல்லையா கண்ணா?'

"டைனசோர் தப்பிப் பிழைத்துள்ளதா.. நான் அறியவில்லையே கண்ணம்மா"

"கண்ணா, டைனசோர்கள் தப்பிப்பிழைத்துள்ளன. ஆனால் அவை இராட்சச உருவம் கொண்டவையல்ல. பல்லி, அறணை எல்லாம் என்னவென்று நினைத்தாய். அவை உருவத்தில் சிறுத்த தப்பிப்பிழைத்த டைனசோர்கள்தாமே கண்ணா"

"ஓ. நீ அப்படி வருகிறாயா கண்ணம்மா. நீ சரியான குறும்புக்காரிதான் கண்ணம்மா"

எனக்குப் பிடித்த விடயங்களிலொன்று
பழைய புத்தகக் கடைகளில்
பழைய புத்தகங்களை வாங்குவது.
பழைய புத்தகங்கள் எப்பொழுதுமே என்னைப்
பிரமிப்பிலாழ்த்துபவை.
புதுப்புத்தகக் கடைகளில் கிடைக்காத
புத்தகங்கள்
பழைய புத்தகக் கடைகளில்
கிடைக்கின்றன.

பால்ய பருவத்தில் பிடித்த
பைண்டு' செய்யப்பட்ட தொடர்கதைகளைப்
பழைய புத்தகக் கடைகளில் மட்டுமே
பார்க்க முடியும்.
பார்த்துப் பெரும் சுகமடைய முடியும்.
பக்கங்களை, ஓவியங்களைப்
பார்த்துக் கைகளால் அளைகையிலுள்ள
சுக மே தனி.
புதுப்புத்தகக் கடைகளில் அதனைப்
பெற முடியாது.
ஒரு காலத்து மானுட இருப்பின
பதிவுகள் அவை.
நான் இவ்விதம் கூறுவதால்
புதுப்புத்தகக்கடைகளின் பிரதான எதிரி
என்று மட்டும் எண்ணி விடாதீர்கள். அவ்விதம்
எண்ணினால் அதை
நான் தடுக்கப்போவதில்லை.
அதற்காக நான் வருந்தப்போவதுமில்லை.
அது உங்களின் சுதந்திரத்தில்
நான் தலையிடுவதாக
அமைந்து விடும்.

அத்தியாயம் எட்டு - காலக்கப்பற் பயணமும் 'எதிர்காலச்சித்தன் பாடல்' கவிதையும்!

அந்த உலகம் எனக்குப் பலவிதங்களிலும் பிடித்த உலகம் என்பேன். என் மனத்தில் சஞ்சலங்கள் அலையடிக்கத்தொடங்குகையில், என் மனத்தில் சஞ்சலப்புயல்கள் வீசத்தொடங்குகையில், என் மனத்தின் அமைதி சீர்குலையத்தொடங்குகையில், நான் அந்த உலகை நோக்கிப் பயணமாகத் தொடங்குகின்றேன். அந்த உலகப்பயணம் தரும் திருப்தியை எனக்கு வேறெந்தப் பயணமும் தருவதில்லை. அந்த உலகில் நானும் காட்சிகள் அற்புதமானவை. பறவைகளைப் பற்றிய புரிதல்களை, அறிவியற் சாதனைகளை வெளிப்படுத்தும் அந்த உலகில் நான் எவ்வளவு நேரமானாலும் என்னை மறந்து பயணிப்பேன்.

அந்த உலகின் மிகச்சிறப்புகளிலொன்று காலக்கப்பல். அந்த உலகின் காலக்கப்பலைப்போல் இன்னுமொரு காலக்கப்பலை நான் வெறெங்கும் கண்டதில்லை. அந்தக் காலக்கப்பற் பயணத்துக்காகவே நான் அடிக்கடி அங்கு செல்வதுண்டு. அந்தக்கப்பலிலேறி ஆதியில் இங்கு ஆட்டம்போட்ட இராட்சதப்பறவைகள், மிருகங்களின் காலகட்டத்துக்கு என்னால் மிகவும் இலகுவாகச் சென்று விட முடிகின்றது. ஆனால் அக்காலக்கப்பல் என்னை அவற்றிடமிருந்து திறமையாக பாதுகாக்கவும் செய்கின்றது. என்னால் அம்மிருகங்கள்,பட்சிகளின் அபாயங்களைப்பற்றிய சிந்தனைகளை நீக்கி அங்கு அக்கப்பலில் பயணிக்க முடிகின்றது.என்னால் உலகின் மகா சர்வாதிகாரிகளின் ஆட்டங்களை , ஏற்படுத்திய பேரழிவுகளை அவர்களுக்கருகில் நின்று அவதானிக்க அக்கப்பல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருகின்றது. கிளியோபட்ராவின் பேரழகில் எனை மறக்க முடிகின்றது.
இராஜஇராஜ சோழனின் கப்பற் படையில் தென்கிழக்காசியாவை நோக்கி அல்லது இலங்கையை நோக்கிப் பயணிக்கவும் முடிகின்றது.

சர்வாதிகாரிகளும், கொடுங்கோலர்களும், அமைதியின் காவலர்களும், மகான்களும் அருகருகாக வாழும் அற்புத உலகம் அது. அவ்வுலகுக்கு அடிக்கடி பயணிக்கின்றேன். விரும்பினால் நீங்களும்
என்னுடன் இணைந்துகொள்ளலாம். நான் பெற்ற இன்பத்தை நீங்களும் பெற்றுக்கொள்ளலாம். என்ன நீங்கள் பயணத்துக்குத் தயாரா நண்பர்களே! போர்களாலும், பேரழிவுகளாலும், வர்க்க, வர்ண வேறுபாடுகளாலும்
பற்றியெரியும் இவ்வுலகின் கனலிலிருந்து உங்களை என்னால் காப்பாற்ற முடியும் நீங்களும் என்னுடன் அவ்வுலகுக்குப் பயணிக்க முடிந்தால் நண்பர்களே!

"என்ன கண்ணா ஆழ்ந்த சிந்தனை?"

எதிரில் மந்தகாசப் புன்னகையுடன் நின்றிருந்தவள் என் கண்ணம்மா; மனோரஞ்சிதம்தான்.

"கண்ணம்மா, நான் அடிக்கடி காலக்கப்பலில் பயணிப்பதை நீ அறிவாய் அல்லவா? அந்தக் காலக்கப்பல் நிலையத்தில் நான் இருப்பதாக எண்ணுகின்றேன்."

"கண்ணா, எனக்கும் அந்தக் காலக்கப்பலில் பயணிப்பதென்றால் உன்னைப் போல்தான் மிகவும் பிடிக்கும்."

"கண்ணம்மா, காலக்கப்பல் என்றதும்தான் எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகின்றது. நவீனத்தமிழ்க் கவிதையுலகில் எழுதப்பட்ட முதலாவது அறிவியற் கவிதையாக அதனை நான் இனங்காண்பேன்."

'எந்தக் கவிதையைப் பற்றிக் கூறுகிறாய் கண்ணா?"

'எழுத்தாளர் சுஜாதா நவீனத்தமிழிலக்கியத்தின் முதலாவது அறிவியற் கவிதையாக மீராவின் கவிதையைக் குறிப்பிடுவார் கண்ணம்மா. ஆனால் அது சரியான கூற்றல்ல கண்ணம்மா"

"பின் எதுதான் சரியான கூற்று கண்ணா?'

"ஈழத்துக் கவீந்திரனின் (அ.ந.கந்தசாமி) 'எதிர்காலச் சித்தன் பாடல்' நவீனத் தமிழ்க் கவிதையுலகில் வெளியான முதலாவது அறிவியற் கவிதையாக நான் கருதுவேன் கண்ணம்மா. அக்கவிதையை ஒரு தடவை நீ படித்துப் பார்த்தாயென்றால் நீயும் அப்படியே கூறுவாயடி."

'நீ சொல்வதைப் பார்த்தால் எனக்கும் அக்கவிதையை வாசிக்க வேண்டுமென்ற ஆசை ஏற்படுகின்றது கண்ணா."

"கண்ணம்மா, என் குறிப்புப் புத்தகத்தில் நான் இக்கவிதையைச் சிறுகதையாக்கி எழுதி வைத்துள்ளேன். அதனை உனக்கு வாசிக்கத் தருவேன். நேரம் கிடைக்கும்போது வாசித்துப்பார். இலங்கையிலிருந்து கவிதைக்காக வெளியான 'தேன்மொழி' சஞ்சிகையின் முதலாவது இதழில் (புரட்டாதி, 1955) வெளியான கவிதை. எனக்கு மிகவும் இக்கவிதை பிடித்துப் போனதற்குக் காரணம் இக்கவிதை காலத்தினூடு பயணிப்பதைக் கூறுகின்றது. கவிஞர் காலத்தினூடு பயணித்து அங்கொரு எதிர்கால மனிதனைக் காண்கின்றார். அவனுடன் உரையாடுகின்றார். அங்குள்ள இன, மத, மொழி, வர்க்கப் பேதங்களற்ற சமுதாய அமைப்பு பற்றி அந்தச் சந்தித்த எதிர்கால மனிதன் நிகழ்கால மனிதனுக்கு எடுத்துரைக்கின்றான்."

'கண்ணா, கேட்பதற்கே எவ்வளவு மகிழ்ச்சியாகவிருக்கிறது. அப்படியானதோர் உலகு இப்போதிருந்தால் எப்படியிருக்கும்? போர்களற்ற சமுதாயத்தில் இன்பமாக வாழலாம் அல்லவா."

"கண்ணம்மா, நீ எண்ணுவது சரிதான். அதனைத்தான் நானும் நினைத்தேன். இக்கவிதையின் நிகழ்கால மனிதனும் அவ்வாறே நினைத்தான். அதனால் அவன் அந்த எதிர்கால மனிதனிடன் கேட்டான்.."

" என்ன கேட்டான் கண்ணா" மனோரஞ்சித்திதத்தின் குரல் அந்த எதிர்கால மனிதனின் பதிலை அறியும் ஆவல் மிகுந்திருந்தது.

'கண்ணம்மா, அவன் அந்த எதிர்கால மனிதனிடம் பின்வருமாறு இறைஞ்சி நின்றான் : 'எதிர்காலச் சித்தா உன் இனியமொழி கேட்டேன். எண்ணங்கள் விரிவடையும் என்னுடன் நீவந்து மதி கெட்டார் வாழ்கின்ற வையகத்தில் புதிய
வாழ்வேற்றிச்செல்வாயோ'"

"அதற்கு அந்த எதிர்கால மனிதன் என்ன கூறினான். நிகழ்கால மனிதனின் கோரிக்கைக்குச் செவிசாய்த்தானா கண்ணா?"

"கண்ணம்மா அதற்கவன் என்ன கூறினான் தெரியுமா? இதைத்தான் கூறினான்.இவ்வாறுதான் கூறினான் :

'காலத்தின் கடல் தாவி நீயிங்கு வந்த
காரணத்தால் ஏதறிவு என்பதை நீ கண்டாய்
ஞாலத்தில் நிகழ்கால மயக்கத்தி லுள்ளோர்.
ஞானத்தைக் காண்பாரோ? காணார்களப்பா
காலத்தை யான்தாண்டிக் காசினிக்கு வந்தால்
கட்டாயம் எனையவர்கள் ஏற்றிமிதித்திடுவார்
ஆலத்தைத் தந்தன்று சோக்கிரதரைக் கொன்ற
அன்பர்களுன் மனிதச் சோதரர்களன்றோ'

இதற்கு மனோரஞ்சிதம் கூறினாள்: "கண்ணா, அவன் கூறுவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. நம்மவர் இன்னும் அம்மனிதன் வாழும் சமுதாய அமைப்பில் வாழும் நிலைக்கு உயர்ந்து விடவில்லை. இந்நிலையில் அவன் இங்கு வந்து போதித்தால் அவன் கூறுவதுபோல் அவனைக் கொன்றிருப்பார்கள் நம்மவர்கள். நல்ல காலம் இக்காலத்துக்கு வராமல் இருந்தது."

"கண்ணம்மா, அவன் கூற்றிலுள்ள நியாயத்தை நம்மவனும் உணர்ந்திருந்தான். அதனால்தான் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தான். ஆனால் அவ்விதம் வந்தவன் தன் அனுபவத்தைக் கவிதையாக்கி வைக்கவும் தவறவில்லை. இவ்வகையில் மிகவும் முக்கியத்துவம் மிக்க கவிதையிது. "

"கண்ணா, ஒரு கேள்வி."

" என்ன கண்ணம்மா? என்ன கேள்வி. கேள் கண்ணம்மா. என்னைப் பொறுத்தவரையில் அறிவியலில் ஞானம் பெற்ற கவிஞர் இ.முருகையன் மட்டுமே இக்கவிதையின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஒருவராக இனங்காண்பேன் கண்ணம்மா"

'கண்ணா, ஏன் நம் விமர்சகப் பெருந்தகைகள் எவரும் இக்கவிதை பற்றிப் பெரிதாக எழுதுவதில்லை?'

"கண்ணம்மா, இவர்களில் பலரும் தமது திறமையினை, புலமையினைப் பறை சாற்றுவதற்காக எழுதுபவர்கள். பலருக்குப் போதிய தேடல் இருப்பதில்லை. அதனால் பல படைப்புகளின் முக்கியத்துவத்தை அவர்கள் அறிவதில்லை. ஏற்கனவே வெளியான படைப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று, அவற்றின் அடிப்படையில் தம் எண்ணம் , கோட்பாடு சார்ந்து எழுதுபவர்கள். இன்னும் சிலரோ இவ்விதம் கிடைக்கப்பெறும் தகவல்களைத் தாங்களே தேடிக்க கண்டுபிடித்ததுபோல் எவ்விதம் உசாத்துணைப் பட்டியலுமில்லாமல் எழுதுவார்கள்."

'இவர்கள் ஓசியில் பலகாரம் சுடுபவர்கள் கண்ணா"

'சரியாகச் சொன்னாய் கண்ணம்மா. இவர்கள் நிச்சயம் ஓசியில் பலகாரம் சுடுபவர்கள்தாம்."

'கண்ணா, கவிஞர் முருகையன் இக்கவிதையைப் பற்றி ஏதோ கூறியுள்ளதாகக் கூறினாயே. என்ன கூறினார்? நினைவிலுள்ளதா?"

"எதிர்காலச்சித்தன் பாடலைவிடக் கருத்தும் சிந்தனையும் பொதிந்த கவிதைகள் தமிழகத்தில் உள்ளனவா? இருந்தால் எடுத்துக் காட்டட்டும் இவ்விதம் அவர் கற்பகம் சஞ்சிகையில் வெளியான கட்டுரையொன்றில் கேட்டிருந்ததாக நினைவு. அவர் 'கருத்தும் சிந்தனையும் பொதிந்த அறிவியற் கவிதைகள்" என்று குறிப்பிட்டிருந்தால் இன்னும் பொருத்தமாகவிருந்திருக்கும் என்பது என் நிலைப்பாடு."

'எனக்கும் அப்படித்தான் தோன்றுகின்றது கண்ணா."

எதிர்காலச் சித்தன் பாடல்! - அ.ந.கந்தசாமி

* நன்றி - தேன்மொழி*,* புரட்டாசி *,* இதழ் *1, 1955 -*

எதிர்காலத் திரைநீக்கி அதற்கப் பால்யான்
ஏகிட்டேன் ஏகிட்ட போதில் என்முன்
கதிர்போலும் ஒளிமுகத்தான் கருணையூறும்
கமலம்போற் கண்ணினையான் ஒருவன் வந்தான்
*"*எதிர்கால உலகமிஃது மனிதா நீயிங்
கேன்வந்தாய் இவண்காணும் பலவுமுன்னை
அதிர்வெடி போல் அலைக்கழிக்கும் ஆதலாலே
அப்பனே நிகழ்காலம் செல்க*"* என்றான்*.*

அறிவினிலே அடங்காத தாகம் கொண்டேன்
அவ்வுரையால் அடங்கவில்லை அவனை நோக்கிச்
*'*செறிவுற்ற பேரறிவின் சேர்க்கை வேண்டும்
செந்தமிழன் யானொருவன் ஆதலாலே
மறுவற்ற பேராண்மைக்கோட்டை என்னை
மலைவுறுத்தா தெதிர்காலம்*"* என்று கூறிக்
குறுகுறுத்த விழியுடையான் குழுத வியான்
குணமென்ன பெயரென்ன என்று கேட்டேன்*.*

*"*எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தா ரப்பா
எதிர்காலச் சித்தன்யான் நிகழ்காலத்தர்
உனக்குமுன்னர் வாழ்ந்திட்ட சித்த ரல்லால்
உன்காலச் சித்தரையும் ஏற்கா ரப்பா
மனக்குறைவால் கூறவில்லை மகிதலத்தில்
மடமையொரு மயக்கத்தின் ஆட்சி என்றும்
கனத்துளதிங் கென்பதையே கருதிச் சொன்னேன்
காசினியின் பண்பிதனைக் காணப்பா நீ*.*

வருங்காலச் சித்தனுரை செய்த வார்த்தை
வையகத்தார் அறிதற்காய் இங்கு சொல்வேன்
*"*பெரும்போர்கள் விளைகின்ற நிகழ்காலத்தில்
பிளவுறுத்தும் பலவகையாம் பேதமுண்டு
ஒருமைபெறும் மனிதர்களை ஒன்றா வண்ணம்
ஊடமைத்த சுவரனைய பேதம் யாவும்
நொருங்கிவிழும் உலகெல்லாம் ஒன்றேயாகும்
நோக்கிடுவாய் தூரஎதிர் காலமீதே*"*

அண்டுபவர் அண்டாது செய்வதேது
அநியாய பேதங்கள் பெயரைச் சொல்வேன்
துண்டுபட்டுத் தேசங்கள் என்றிருத்தல்
தூய்மையாம் இனம்மொழிகள் மதங்க ளென்று
அன்றுதொட்டிங் கின்றுவரை இருக்குமந்த
அர்த்தமிலாப் பிரிவினைகள் எல்லாம் சாகும்.
ஒன்றுபட்டிவ் வுலகெல்லாம் ஒற்றையாகும்
ஒருமொழியில் ஓரரசு பிறக்குமப்பா.

அரசெல்லாம் ஒழிந்துலகில் ஓரரசே யுண்டாம்
அறங்கூறும் ஒருமதமே உலகெல்லாம் ஆகும்
விரசமொடு விகற்பங்கள் வளர்க்குமொழி எல்லாம்
வீழ்ந்துவிடும் ஒருமொழியே இவ்வுலகில் உண்டாம்
சரசமொடு உலகத்து மககளெல்லாம் தம்மைச்
சமானர்கள் மனித்குலம் என்ற இன மென்பார்
அரசர்கள் ஏழைபணக்காரனென்ற பேதம்
அத்தனையும் ஒழிந்து விடும் எதிர்கால உலகில்.

செந்தமிழும் சாமீழச் சிங்களமும் சாகும்
செகமெல்லாம் ஒருமொழியே தலை தூக்கி நிற்கும்.
நந்தமிழர் இனஞ்சாகும் பிற இனமும் சாகும்
நாடெல்லாம் மனித இனம் ஒன்றுதலை தூக்கும்.
எந்தமொழி இவ்வுலகில் நிலவுமெனக் கேட்பில்
எண்ணிக்கை கொண்டமொழி எம்மொழியோ இங்கு
அந்த மொழி தானப்பா அரசாளும் உண்மை
அதுநன்று தானப்பா பிரிவினைகள் ஒழிதல்.

நிகழ்காலச் செந்தமிழர் இது கேட்டுச் சீறி
நீசனுரை நிகழ்த்தாதே செந்தமிழே உலகின்
புகழ்மொழியாய் உலகத்தின் பொது மொழியும் ஆகும்
புதுமைதனை காண்பீர்கள் என்றுபுகன் றிடுவார்.
இகழ்ந்திடுவார் எதிர்காலச் சித்தனுரை தன்னை
இம்மியள வேணும் மானமில்லா மூர்க்கன்
நிகழ்காலத் திருந்திருந்தால் செய்வதறிந்திடுவோம்.
நெஞ்சுபிளந் தெறிந்திருப்போம் என்றிகழ்த்திடுவார்.

பிறப்பாலே யானுயர்வு தாழ்வுரைக்க மாட்டேன்
பிறப்பாலே என்மொழியே சிறந்ததெனச் சொல்லேன்.
பிறப்பென்றன் வசமாமோ? பிரமத்தின் வசமாம்.
பீருவில் பிறந்திருந்தால் பீருமொழி பீடே
வெறிமிகுந்த நிகழ்காலத் தீதுணரமாட்டார்
விழமுக்கே பெருங்கலகம் விளக்கின்றார் அன்னார்
அறிவற்றே துன்பங்கள் அனவர்க்கும் விளைப்பவர்
ஐய்யய்யோ இவர்மடமை என்னென்று சொல்வேன்.

புதுயுகத்தின் குரல்போல் எதிர்காலச் சித்தன்
புகன்றமொழி கேட்டபின்னர் யானவனைப் பார்த்து
"எதிர்காலச் சித்தா உன் இனியமொழி கேட்டேன்.
எண்ணங்கள் விரிவடையும் என்னுடன் நீவந்து

மதி கெட்டார் வாழ்கின்ற வையகத்தில் புதிய
வாழ்வேற்றிச்செல்வாயோ என்றிறைஞ்சி நிற்க
மெதுவாகச் செவ்விதழ்கள் திறந்ததையுமங்கே
மென்னிலவுக் குஞ்சிரிப்புப் பிறந்ததையும் கண்டேன்.

காலத்தின் கடல் தாவி நீயிங்கு வந்த
காரணத்தால் ஏதறிவு என்பதை நீ கண்டாய்
ஞாலத்தில் நிகழ்கால மயக்கத்தி லுள்ளோர்.
ஞானத்தைக் காண்பாரோ? காணார்களப்பா
காலத்தை யான்தாண்டிக் காசினிக்கு வந்தால்
கட்டாயம் எனையவர்கள் ஏற்றிமிதித்திடுவார்
ஆலத்தைத் தந்தன்று சோக்கிரதரைக் கொன்ற
அன்பர்களுன் மனிதச் சோதரர்களன்றோ?

ஆதலினால் நிகழ்கால மனிதா அங்கு
யான்வரேன் நீபோவாய் என்றான் ஐயன்
காதலினால் கால்களென்னும் கமலம் தொட்டுக்
கண்ணொற்றி விடைபெற்றேன் திரை நீங்கிற்று.
பாதகர்கள் முழுமடைமைப் போர்கள் சூழும்
பாருக்கு நிகழ்காலம் வந்தேன் எங்கும்
தீதுகளே நடம்புரியும் நிலைமை கண்டு
திடுக்கிட்டேன் என்றிவர்கள் உண்மைகாண்டல்?

அத்தியாயம் ஒன்பது - மின்காந்தமணி என்னுமென் சகி!

வழக்கம்போல் முடிவற்று விரிந்திருக்கும் இரவு வானை, நட்சத்திரங்கள் கொட்டிக்கிடக்கும் இரவும் வானைப் பார்த்தபடியிருக்கின்றேன். இரவு வான் எப்பொழுதும் புதிர்களை அடுக்கி வைத்துள்ள நூலைப்போல் என்னைப் பிரமிக்க வைக்குமொன்று. காலத்தின் அடுக்குகளுக்குள் விரிந்து கிடக்கும் இரவு வான் இருப்பின் புதிர்களின் விடைகளைத் தாங்கி நிற்கும் ஞானப்பெட்டகமாக எப்பொழுதும் எனக்குத் தெரிவதுண்டு. அதனால் அதனை எத்தனை தடவைகள் பார்த்துக்கொண்டிருந்தாலும் எனக்கு அலுப்பதேயில்லை.

"என்ன எவளைப்பற்றி யோசனை?"

எதிரில் மந்தகாசப் புன்னகையுடன் மனோரஞ்சிதம் நிற்கின்றாள்.

"வேறு யாரைப்பற்றி? எல்லாம் என் சகியைப்பற்றித்தான். இருப்பில் என்னுடன் எப்பொழுதுமிருக்கும் என் இன்பச் சகியைப்பற்றித்தான் கண்ணம்மா"

"கண்ணா, இந்தக் கண்ணம்மாவை விட்டால் உனக்கு வேறு யார் சகி இருக்க முடியும்?"

"யார் சொன்னது இருக்க முடியாது என்று. இவள் என்னை எப்பொழுதும் வியப்பிலாழ்த்தும் என் சகி. மின்காந்தமணி. இவளது ஆளுமை எப்பொழுதும் என்னைப் பிரமிக்க வைக்குமொன்று."

'அதென்ன மின்காந்தமணி. வித்தியாசமான பெயராகவிருக்கிறதே. கண்ணா யாரிவள்? உண்மையா இல்லை இதுவும் உன் வேடிக்கைப்பேச்சுத்தானா?"

"கண்ணம்மா, நான் ஏனுனக்கு வேடிக்கை காட்ட வேண்டும். காந்தமணியைப்பற்றி நீ மட்டும் விரிவாக அறிந்திருந்தால் இவ்விதம் கூற மாட்டாய்."

"கண்ணா, நிச்சயமாக இவளும் உன் அகவெளி நண்பர்களிலொருத்திதான், இல்லையா? அவ்விதமிருக்கும் பட்சத்தில் எனக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை. நீ தாராளமாக எவ்வளவு நேரமானாலும் உரையாடு. நினைத்து நினைத்து மாய்ந்து போ. கவலையில்லை."

"கண்ணம்மா, உண்மையில் காந்தமணியின் இருப்பு என்னைப் பிரமிக்க வைப்பது. இவளை மிஞ்சி இப்பிரபஞ்சத்தில் யாரும் இயங்க முடியாது. இவளைத் தொலைவுகளோ , வெற்றிடங்களோ தடுப்பதில்லை. நெடிய பயணங்கள், காலம் தாண்டிய நெடும் பயணங்கள் கண்டு இவள் ஒருபோதுமே தயங்குவதில்லை. அஞ்சுவதில்லை. தன் பயணத்தை நிறுத்துவதுமில்லை. அதற்கும் மேலாக இவளது இன்னுமோர் இயல்புதான் என்னை இன்னும் அதிகமாகப் பிரமிக்க வைக்கின்றது."

"அது என்ன கண்ணா. அப்படியென்ன அப்படியோர் இயல்பு இவளிடமுண்டென்று பிரமிக்கின்றாய்?"

'பொருள்முதல்வாதிகள், கருத்துமுதல்வாதிகளை ஆட்டிப்படைக்கின்றாள் இவள் இயல்பால். பொருள் உண்மையென்பவர்களையும் திகைக்க வைக்கின்றாள். சக்தி

உண்மையென்பதையும் பிரமிக்க வைக்கின்றாள். ஏனென்றால்..."

"ஏனென்றால்.. என்ன கண்ணா? மேலே சொல்லு. ஏன் நிறுத்தி விட்டாயடா?"

"கண்ணம்மா, காந்தமணி பொருளாகவுமிருப்பாள். சக்தியாகவுமிருப்பாள்."

"அதிலென்ன வியப்பு! ஏன் நாங்கள் கூட அப்படித்தானே இருக்கிறோம் கண்ணா."

"நாங்கள் கூடவா கண்ணம்மா? நீ என்ன கூற வருகிறாயடி என் செல்லம்மா."

"கண்ணா நம் முன் காணும் பொருளெல்லாம் அடிப்படையில் பொருளல்லதானே. இலக்ட்ரோன் நுணுக்குக் காட்டிகொண்டு பார்த்தால் நாமனைவரும் பொருளாகவா தெரிவோம் கண்ணா?"

"கண்ணம்மா, உன்னைத் தர்க்கத்தால் ஒருபோதுமே என்னால் வெல்ல முடியாதடி. உன் ஞானத்தெளிவு என்னை எப்பொழுதும் பிரமிக்க வைக்கிறதடி."

"கண்ணா, அலையாயும், துகளாயும் அண்டத்தே பயணித்து உனை மயக்கும் உன் காந்தமணியைப்போல் தான் அண்டத்திலுள்ள நாம் அனைவருமுள்ளோம். அதனைத்தான் கூற வந்தேன்."

"கண்ணம்மா, உன் தர்க்கத்தின் முன் நான் தலை வணங்குகின்றேன். அதிலொரு பெருமையும் எனக்குண்டு."

"அப்படியென்ன பெருமை கண்ணா?"

'நான் எப்பொழுதும் அறிவுக்குத் தலை வணங்குபவன் கண்ணம்மா. அறிவுக்கு அடிபணிபவன் செல்லம்மா"

'கண்ணா, உன் மின்காந்தமணியைப்போலொரு சகியாக நானும் இருப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான்."

"அகமோ புறமோ சகிகள் இருவருமே என் பிரிய சகிகள்தாம்."

மீண்டும் என் பார்வை விரிந்திருக்கும் இரவு வானை நோக்கிப் படர்கின்றது. அங்கு பில்லியன் கணக்கில் கொட்டிக்கிடக்கும் சுடர்களை, அவற்றிலிருந்து வெற்றிடங்களை ஊடறுத்துப் பயணிக்கும் ஒளிக்கதிர்களின் விளையாட்டுகளில் மனதொன்றிட நோக்குகின்றேன். என்னருகில் என்னுடன் இணைந்து பிரபஞ்சத்தின் பெரு நடனத்தில் தன்னை மறந்து இலயித்துக் கிடக்கின்றாள் மனோரஞ்சிதம். என் கண்ணம்மா.

சுடர்ப்பெண்கள் சொல்லும் இரகசியம்?

இருண்ட அடிவானை நோக்குவீர். ஆங்கு
இலங்கிடும் சுடர்ப்பெண்கள் உரைத்திடும்
இரகசியம் தானென்ன?
புரிந்ததா? புரிந்திடினோ, பின்னேன் நீவிர்
புழுதியில் கிடந்துருள்கின்றீர்?
சாக்கடையில் புழுத்துளம் வேகுகின்றீர்?

சூன்யத்தைத் துளைத்து வருமொளிக்கதிர்கள்.
நோக்குங்கள்! நோக்குங்கள்! நோக்கம் தான்
தெரிந்ததுவோ? தெரிந்துவிடின்
போக்கற்ற பிறவியெனப் புவியில்
தாக்குண்டலைகின்றீரே? ஏன்?

'அஞ்சுதலற்ற கதிர்கள். அட,
அண்டத்தே யார்க்கும் அஞ்சுவமோ?
ஓராயிரம் கோடி கோடியாண்டுகள்
ஓடியே வந்தோம். வருகின்றோம். வருவோம்.
காலப் பரிமாணங்களை வெளியினிலே
காவியே வந்தோம்.
சூன்யங்கள் கண்டு சிறிதேனும்
துவண்டுதான் போனோமோ?
அஞ்சுதலற்ற நெஞ்சினர் எம்முன்னே
மிஞ்சி நிற்பவர் தானுண்டோ?
தெரிந்ததா? விளக்கம் புரிந்ததா?
தெரிந்திடினோ? அன்றி புரிந்திடினோ?
உரிமையற்ற புள்ளெனவே உழல்கின்றீரே யிவ்வுலகில்.
அட,
துள்ளியெழத் தான் மாட்டீரோ?
புத்துலகம் சமைத்திடத்தான் மாட்டீரோ?
புரிந்ததா? சுடர்ப்பெண்கள் பகரும் இரகசியம்
புரிந்ததா?

அத்தியாயம் பத்து - ஏ! அதிமானுடரே! நீர் எங்கு போயொளிந்தீர்?

எதிரே விரிந்து கிடக்கின்றது கட்டடக்காடு. எங்கு நோக்கினும் கட்டடங்கள்! கட்டடங்கள்! கட்டடங்கள்! கனல் உமிழ்ந்திடும் பரப்புகள் சிரித்துக்கொண்டிருக்கின்றன. ஒரு காலத்தில் என் பிரியத்துக்குகந்த இடங்களாக விளங்கிய இடங்களிலெல்லாம் புதிதாகக் கட்டட விருட்சங்கள் வளர்ந்து, உயர்ந்து நிற்கின்றன. ஒரு காலத்தில் பசுமை பூத்துக்கொழித்த ஆதிமானுட சமுதாயத்தில் இவ்வுலகு எப்படியிருந்திருக்குமென்று எண்ணம் சென்றது.

"என்ன கண்ணா யோசனை?"

எதிரில் அதே மந்தகாசப் புன்னகையுடன் நிற்பவள் என் மனோரஞ்சிதமேதான். என் கண்ணம்மாவேதான்.

"எதிரே விரிந்து கிடக்கும் கட்டடக்காட்டைப் பற்றிச் சிந்தித்தேன். வேறொன்றுமில்லை கண்ணம்மா!"

"கட்டடக்காடு. அற்புதமானதொரு படிமம். இப்படிமம் எனக்கு மானுடவியலாளர் டெஸ்ட்மன் மொறிஸ் நினைவை ஏற்படுத்துகிறது கண்ணா."

"உண்மைதான் கண்ணம்மா, நானும் அவரைப்பற்றிக் கேட்டிருக்கின்றேன். அவரது "Human zoo ('மனித மிருகக்காட்சிசாலை') வாசித்திருக்கின்றேன். அதிலவர் Concrete Jungle ('காங்ரீட் காடு') என்ற சொல்லைப் பாவித்திருக்கின்றார். அதுவே நான் முதன் முதலில் அறிந்த கட்டடக்காடு என்னும் பொருள்தரும் சொல். என்றாலும் உன்னை நினைத்தால் எனக்குச் சில வேளைகளில் பிரமிப்புத்தான் ஏற்படுகின்றது. நீயும் என்னைப்போல் கண்டதையெல்லாம் வாசித்துத் தொலைக்கின்றாய். அதுதான் எனக்கு உன்னில் மிகவும் பிடித்த விடயமடி."

"அப்போ, இந்த முறுவல், உடம்பு இவற்றிலெல்லாம் உனக்குப் பிடிப்பேயில்லையா கண்ணா?" இவ்விதம் பொய்க்கோபத்துடன் கேட்டுவிட்டு நகைத்தாள் மனோரஞ்சிதம்.

"கண்ணம்மா, உன் உடலழகு வேறு. உளத்தினழகு வேறு. ஆனால்.."

"ஆனால் .. என்ன கண்ணா?"

'கண்ணம்மா, உடலழகு நிலையற்றது. ஆனால் உளத்தினழகோ இருக்கும் வரையில் நிரந்தரமானது."

"உண்மைதான் கண்ணா, சரியாகத்தான் சொன்னாய். "

"உடலழகு பற்றிய மயக்கம் ஒரு காலகட்டம் வரைக்கும்தான். ஆனால் உளத்தினழகோ அதனை மீறியது. இருப்புக்கு அர்த்தம் , நிறைவு தருவதே இந்த உள்ளத்தினழகுதான் கண்ணம்மா. உனக்கு அந்த அழகு தேவைக்கு அதிகமாகவே உண்டடி."

"போதும் கண்ணா, அது சரி இருந்தாற்போலுனக்கு எதற்காக இந்தக் கட்டடக்காடு பற்றிய

விசாரம்?"

"வழக்கம்போல் நீ வருவதற்கு முன் சிறிது நேரம் ஆதி மனிதனுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். எனக்கு அவனை நினைத்தால் ஒருவிதத்தில் ஒரே பொறாமையாகவுள்ளது. அவனுடனான உரையாடல்தான் கட்டடக்காடு பற்றிய விசாரத்தைத் தோற்றி விட்டது கண்ணம்மா"

"அப்படியேன் உனக்கு ஆதியின் மேல் அவ்வளவு பொறாமை கண்ணா?"

'அதுவா.. அதற்குக் காரணமே அவனது இயற்கையுடனான இருப்புத்தான். அதுதான் முக்கிய காரணம். அவன் வாழ்ந்த காலத்தில் நகரங்கள் இல்லை. கட்டடக்காடுகள் இல்லை. தூய்மை மிகுந்த இயற்கையுடன் அவனது இருப்பு அமைந்திருந்தது கண்ணம்மா. அதுதான் முக்கிய காரணம் கண்ணம்மா. அதுதான் முக்கிய காரணம்."

" கண்ணா நீ சொல்வது ஒரு விதத்தில் சரிதான். அப்படித்தான் தோன்றினாலும் மறுபுறத்தில் சரியில்லையே.."

"ஒரு புறத்தில் சரி. மறுபுறத்தில் சரியில்லையா? என்ன புதிர் போடுகிறாய் கண்ணம்மா? நம்ம வடிவேலு நகைச்சுவை போலல்லவா இருக்கிறது உன் வார்த்தைப் பிரயோகம். சரி, ஆனால் சரியில்லை."

இவ்விதம் கூறிவிட்டு இலேசாகச் சிரிக்கின்றேன். ஆனால் அச்சிரிப்பை அலட்சியம் செய்தவளாக மனோரஞ்சிதம் கூறினாள்:

"கண்ணா, நீ பொறாமைப்படும் ஆதி மனிதன் இயற்கையுடன் வாழ்ந்தாலும், அவன் குகைகளில் வாழ்ந்த தாய் வழிக் குழுச்சமுதாயச் சூழலில் வாழ்ந்தவன். இன்றுள்ள மனிதருடன் ஒப்பிடுகையில் அறிவியலில் அரிச்சுவடியாகவிருந்தவன்."

"இருந்தாலென்ன கண்ணம்மா, அவ்விதமே இருந்து விட்டுப் போகட்டுமே. இயற்கையை மாசு படுத்தி, போர்கள் நிறைந்த உலகத்தில் வாழும் இன்றுள்ள மாந்தருடன் ஒப்பிடுகையில் ஆது மானுடர் எவ்வளவோ மேலென்றுதான் தோன்றுகின்றது. எதிர்பார்ப்புகள் குறைந்த இயற்கையுடன் அரவணைத்த வாழ்க்கை. நல்லதுதானே கண்ணம்மா?"

"கண்ணா, மானுடரின் முக்கிய அம்சமே ஆறாவது அறிவுதான். பகுதறியும் ஆறாவது அறிவுதான் மானுடரை மிருகங்களிடமிருந்து வேறுபடுத்துவது. அந்த ஆறாவது அறிவு இன்றுள்ள மானுடரில் பல நூறு மடங்கி அபிவிருத்தியடைந்துள்ளது. நீ பொறாமைப்படும் ஆதிமானுடர் ஒரு விதத்தில் மிருகங்களைப்போல் வாழ்ந்தவர்கள். நான் அவர்களைப்பார்த்துப் பரிதாப்படுகின்றேன் கண்ணா."

இவ்விதம் கூறிவிட்டு மனோரஞ்சிதமே தொடர்ந்தாள்:

'கண்ணா, ஆதிமனிதர் காலத்து இயற்கை மாசற்ற நிலையில் இருந்ததற்கு முக்கிய காரணம் அவர்களது அறியாமை. அறிவு வளர வளரத்தானே தொழில் நுட்பமும் வளர்ந்தது. தொழில் நுட்பத்தின் வளர்ச்சிதானே மனித சமுதாயத்தின் வளர்ச்சி. ஆனால் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி நேர்மறை விளைவுகளுடன் பல எதிர்மறை விளைவுகளயும் கூடவே கொண்டு வந்தது. அதுதான் இன்றுள்ள பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் கண்ணா"

நான் என் மனோரஞ்சிதத்தின் தெளிந்த நீரோடைபோன்ற , சிக்கல்களற்ற தர்க்கத்தில் , ஞானச்செழிப்பில் ஒரு கணம் என்னை மறந்திருந்தேன்.

அதனைப் பார்த்து அவள் தனக்கேயுரிய மந்தகாசப் புன்னகையுடன் கேட்டாள்:

"என்ன கண்ணா, அப்படியே பிரமித்துப் போய் விட்டாய்."

"கண்ணம்மா, உன் தர்க்கம் என்னைக் கட்டிப்போட்டு விட்டதடி. உன் சிந்தனையின் வீச்சு என்னைப் பிரமிக்க வைக்கிறதடி. எப்படி உன்னால் இப்படியெல்லாம் சிந்திக்க முடிகிறதடி. அதுதான் என் பிரமிப்புக்குக் காரணமடி என் செல்லம்மா."

நானே தொடர்ந்தேன்:

"அதுசரி கண்ணம்மா, மனிதரின் இன்றைய ஞானத்தின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்கின்றேன். அப்படியென்றால் நவகாலப்பிரச்சினைகளுக்கெல்லாம் என்ன தீர்வு?'

"கண்ணா, தீர்வு அதிமானுடரின் வரவிலுள்ளது. இன்று நாம் வாழும் இந்நிலவுலகை நாசமாக்கிக்கொண்டிருக்கின்றோம். இது மாற வேண்டுமானால் நம் சிந்தனையில் பரிணாம வளர்ச்சி ஏற்பட வேண்டும். வயிற்றுப் பசியைப் போக்கச் செயற்படும் அதே சமயம் சிந்தனை வளர்ச்சியை அதிகரிக்கும் வகையிலான செயற்பாடுகளையும், விழிப்புணர்வையும் அதிகரித்துக்கொண்டே செல்ல வேண்டும். சென்றால்..."

"சென்றால்.. மேலே கூறு கண்ணம்மா. சென்றால் என்ன... கண்ணம்மா."

'கண்ணா, நாம் வாழும் இவ்வுலகில் வாழும் மானுடர்கள் மட்டுமே முக்கியமானவர்கள் அல்லர். 'யாதும் ஊரே. யாவரும் கேளிர்' என்றான் ஒரு கவிஞன் அன்று. பண்டைத்தமிழ்க் கவிஞன் அவன். கண்ணா, அவன் கூறும் 'யாவரும்' மனிதரை மட்டும் குறிப்பதாக நான் கருதவில்லை. இந்நிலவுலகில் வசிக்கும் அனைத்து வகை உயிர்களையும் குறிப்பதாகவே நான் கருதுகின்றேன். இவ்வுலகின் நிம்மதிக்கு, தூய்மைக்கு முதலில் நாம் உருவாக்கும் கட்டடக்காடுகளை நிறுத்த வேண்டும். கட்டடக்காடு என்னும் பெயரில் நிஜ மரங்களை அழித்துக்கொண்டிருக்கின்றோம். என் புவிக்குடும்பத்து உறவுகளை, பறக்கும் , ஊரும், நீந்தும் உறவுகளை எம் நலன்களுக்காகக் கொன்ரூ குவித்துக்கொண்டேயிருக்கின்றோம். இதனை நாம் முதலில் நிறத்த வேண்டும். அதற்குத்தான் அதிமானுடரின் வருகை முக்கியம் கண்ணா."

'கண்ணம்மா, உன் கூற்று எனக்கு என் அபிமானக் கவி பாரதியின் கவிதை வரிகள் சிலவற்றை நினைவூட்டுகிறதடி."

"என்ன வரிகள் கண்ணா?"

"பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்.
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்.
மண்மீ துள்ள , மக்கள், பறவைகள்;
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்
யாவுமென் வினையா லிடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புட னிணங்கிவாழ்ந் திடவே

செய்தல் வேண்டும், தேவ தேவா!
ஞானா காசத்து நடுவே நின்றுநான்
பூமண் டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு மிடிமையு நோவுஞ்
சாவு நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க என்பேன்..."

பாரதியாரின் இக்கவிதை வரிகளைக் கேட்டதும் மனோரஞ்சிதம் ஓடி வந்து என்னை வாரியணைத்துக் கொண்டாள். அத்துடன் "அற்புதமான கவிதை வரிகள் கண்ணா" என்று கூறியவாறே ஒரு தடவை என் இடது கன்னத்தில் பலமாக முத்தமிட்டாள். என் மனோரஞ்சிதத்துக்கு இன்பம் அளவு மீறி விட்டால் இப்படி நடந்து கொள்வதொன்றும் புதியதல்ல. அவள் அணைப்பும் , இதழ்களின் மென்முத்தமும் தந்த உன்மத்தத்தில் நான் கூறினேன்:

"கண்ணம்மா, ஆதி மானுடரின் வாழ்க்கையில் அழகிருந்தது. இனிமையிருந்த்து. கூடவே அறியாமையுமிருந்தது. நவ மனிதரின் வாழ்க்கையில் அறிவு மயக்கத்தில் ஆழ்ந்துள்ளது. இந்நிலை மாறவேண்டுமானால் அதிமானுடரின் அறிவுத் தெளிவின் அவசியம் முக்கியம். அதிமானுடர் பற்றி நம்மூர் எழுத்தாளர் மு.தளையசிங்கமும் தன் தர்க்கத்துக்குரிய வகையில் பிரபஞ்ச யதார்த்தவாதம் பேசினார். கவிஞர் நுஃமானும் அதிமானுடர் பற்றி தன் கோணத்தில் சிந்தித்தார். மேனாட்டு எழுத்தாளர்கள் பலரும் அவ்வப்போது சிந்தித்திருக்கின்றார்கள். எழுதியிருக்கின்றார்கள். ஒரு விதத்தில் இற்றைய மானுடரின் பிரச்சினைகளுக்கான தீர்வு அதிமானுடரின் வருகையில்தான் தங்கியுள்ளதாகத் தோன்றுகின்றது."

அதி மானுடரே! நீர் எங்கு போயொளிந்தீர்?

'காங்ரீட் '! காங்ரீட் '! காங்ரீட் '
சுவர்கள்! கதிருறிஞ்சிக் கனலுதிர்த்திடுங்
கள்ளங்கரவற்ற வெண்பரப்புகள்.

'சீமெந்து' சிரிக்கும் நடைபாதைகள்.

அஞ்சா நெஞ்சத் தூண்களின்
அரவணைப்பில் மயங்கிக்
கிடக்கும் இட வெளிகள்.

வாயுப் படைகளின் வடிகட்டலில்
வடியுமுஷ்ணக் கதிர்கள்.
பனித் துளிகளின் குமிண் சிரிப்பினில்
சிலிர்த்திடும்
புல்வெளிகள் பற்றிய கற்பனைகளின்
இனிமையில், நீலப்படுதாவின் கீழ்
குளிர்ந்து கிடக்கும் நிலமடந்தை
பற்றிய சோக நினைவுகள்.

தலைகவிழ்ந்து அரவணைக்கும்
விருட்ஷக் கன்னியர்தம் மென்தழுவல்
ஸ்பரிசக் கனவுகள்.

செயற்கையின தாக்கங்கள்
படர்ந்திட்ட
இயற்கையின் தேக்கங்கள்.

மரங்களில் புல்வெளிகளில் மந்தைகளாகக்
குழுக்களாகக் குகைகளில்
நடுங்கடிக்குமிருண்ட இராவினில்
நடுங்கி மின்னிடுமொளியினில்
மருண்டு கொட்டிடும் மழையினுள்
சுருண்டு
புரியாத பொழுதுகளில்
பதுங்கிக் குடங்கித் தொடர்ந்திட்ட
ஆதிப்பயணங்கள்.

இயற்கையின் தாக்கத்தினுள்
சுழன்றிட்ட வட்டங்களில்
மயங்கிக் கிடந்திட்ட வாழ்வு
வட்டங்கள். இன்
அதிகாலைப் பொழுதுகளா ?
எழில் கொட்டிய இன்பப் பொழில்களா ?

ஞானத்தினிறுமாப்பில்
ஆகாசக் கோட்டை கட்டும்
நெஞ்சினிலோ....
ஆ....அந்த அமைதி! அந்த இனிமை!
எங்கே ? எங்கே ? அவையெல்லாம்
எங்கே ? ஐயோ..அவையெல்லாம்
எங்கே போய் அடியோடு தொலைந்தனவோ ?
பொறி கக்கும் புகையினில் சுவாசம் முட்டி
புகைந்திட்ட வர்க்கப் போர்களால்
நிலைகுலையும் ககனத்தில்
குண்டுகளின் தாண்டவம்.

அச்சமின்றிப் பறந்த ஆருயிர் நண்பர்களே!
நகை தவள நீந்திச் சுகித்த என்னருமைத் தோழர்களே!
தென்றலணைப்பில் தூங்கிக் கிடந்திட்ட
விருட்சத்துக் குழந்தைகளே!
ஆறறிவால் நிலைகுலைந்து
நிற்கும் பிரிய சிநேகிதர்களே!
வளர்ச்சி தந்த வளர்ச்சியிலோ... ?

விரக்தி! அமைதியின்மை! ஆங்காரம்!
போர்! போர்!போர்!
போரென்றால்..போர்!போர்!போர்!

ஆ....

வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?
வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன ?

வளர்ச்சியில் விட்ட வழுதானென்ன *?*
வழுதானென்ன *?* வழுதானென்ன *?*
வழுதானென்ன *?*

ஆ*..*அந்த

அமைதி*!*அமைதி*!*அமைதி*!*
அன்பு*!*அன்பு*!*அன்பு*!*\இனிமை*!*இனிமை*!*இனிமை*!*
அதி மானுடரே*!*

எங்கு போயொளிந்தீர்*?*
நீர்*!* எங்கு போயொளிந்தீர்*?*
நீர்*!* எங்கு போயொளிந்தீர்*?*

அத்தியாயம் பதினொன்று - இயற்கை பற்றிய கண்ணம்மாவுடனான உரையாடலொன்று.

"கண்ணம்மா, இயற்கை எவ்வளவு அழகானது. படைப்புத்திறன் மிக்கது." என்றேன்.

அதற்கு அவள் இவ்விதம் பதிலிறுத்தாள்:

"கண்ணா, நீ கூறுவது மிகவும் சரியான கூற்று. உண்மையில் நானும் இவ்விதம் அடிக்கடி எண்ணுவதுண்டு. உண்மையில் இயற்கையின் அழகு, நேர்த்தி, படைப்புத்திறன் என்னை எப்பொழுதும் பிரமிக்க வைப்பவை. இவை பற்றி அறிய, புரிய என் இருப்பு முழுவதையும் அர்ப்பணித்தாலும் நான் மகிழ்வேன் கண்ணா."

'கண்ணம்மா, உண்மையில் இயற்கையின் படைப்புத்திறனே என்னைப் பெரிதும் வியக்க வைக்கின்றது."

"கண்ணா, வெளியில் விரிந்திருக்கும் இப்பிரமாண்டமான பிரபஞ்சம் மட்டுமல்ல, கண்ணுக்கே புலப்படாத குவாண்டம் உலகிலும்தான் எவ்வளவு நேர்த்தியாக எல்லாமே படைக்கப்பட்டுள்ளன. உள்ளும் , வெளியும் காணும் அனைத்திலுமே படைப்புத்திறன் வெளிப்பட்டு என்னை வியக்க வைக்கின்றது."

அருகிலமர்ந்து என் தோளுடன் சாய்ந்து உரையாடிக்கொண்டிருக்கும் மனோரஞ்சிதத்தை, என் கண்ணம்மாவை, ஒரு கணம் நோக்குகின்றேன். பொட்டும் , இரட்டைப்பின்னலுமாக பதின்ம வயதுப்பிராயத்தில் காட்சி தந்ததுபோலவே இன்றுமிருக்கின்றாள். நான் அவளையே வைத்த கண் வாங்காது உற்றுப்பார்க்கவே அப்பார்வையின் வீச்சு தாங்காமல் ஒரு கணம் வெட்கம் கவிழ முகம் தாழ்த்தினாள். மறுகணமே தன்னைச் சுதாரித்துகொண்டாள். அத்துடன் கேட்டாள்:

"என்ன பார்க்கிறாய் கண்ணா?"

"இல்லை, இந்த அழகு, இந்தச் சிரிப்பு, இந்தக் குறும்பு இவையெல்லாம் உண்மையா? இங்கு நான் படைப்புத்திறனை , இயற்கையின் படைப்புத்திறனை வியக்கின்றேன் கண்ணம்மா. 'கண்ணம்மா, நான் இயற்கையை, இந்தப் பிரபஞ்சத்தையும் உள்ளடக்கித்தான் கூறுகின்றேனடி, அனைத்தையும் படைத்ததாகக் காண்கின்றேன். நாம் எம் புலன்களைக் கொண்டு இயற்கையை நூறு வீதம் அறிய முடியாது. இல்லையா? அதுவரை , அவ்விதமானதொரு அறியும் நிலை வரும்வரை , இயற்கையே என் கடவுள். நாம் அனைவரும் இயற்கை அன்னையின் குழந்தைகள். இதுதான் என் நிலைப்பாடு."

"கண்ணா , ஒருபோதுமே அந்த நிலை வரப்போவதில்லை. ஒருபோதுமே எம்மால் எம் பரிமாணங்களை மீறி அவற்றுக்கு வெளியில் செல்லும் நிலை வரப்போவதில்லை. இவ்விதமானதொரு சூழலில் இருப்பதை ஏற்று, இருப்பதைக் கொண்டு திருப்தியடைய வேண்டியதுதான். இருப்பை, இப்படியே வாழ்ந்து கடக்க வேண்டியதுதான்."

"கண்ணம்மா, நான் அவ்விதம் நினைக்கவில்லையா. ஒரு தடவை எம்மை ஆதி மானுடருடன் ஒப்பிட்டுப் பார். அவர்கள் எம்மை இன்று பார்த்தால் நாம் அவர்களுக்குக் கடவுள். அவ்விதமான பல செயல்களை நாம் சாதாரணமாகவே செய்து கொண்டிருக்கின்றோம். இல்லையா?"

"கண்ணா, நீ சொல்லுவதிலும் ஒரு வித நியாயம் இருக்கத்தான் செய்கிறது."

"கண்ணம்மா, எதிர்காலத்தில் நம் அறிவியலின் வளர்ச்சி நம்மை இதுவரை நாம் நினைத்துப்பார்க்காத பல தளங்களுக்குக் காவிச் செல்லப்போகின்றது என்பதில் எனக்கு மிகவும் நம்பிக்கையுண்டு. தொலைகாவுதல் அன்றாடம் நாம் பாவிக்குமொரு தொழில் நுட்பமாக வளர்ச்சியடையுமொரு காலம் நிச்சயம் வருமென்று நம்புகின்றேன். தற்போது அறிவியல் புதினங்களில் மட்டுமே இடம்பெறும் தொலைக்காவுதல் மனிதர் அன்றாடம் பயணிக்கப் பாவிக்குமொரு போக்குவரத்துச் சாதனமாக இருக்குமொரு சூழல் நிச்சயம் வரத்தான் போகின்றது."

"ஆது மட்டும் சாத்தியமென்றால், காதலர்கள் ஹனிமூனுக்கு நிச்சயமாக மூனுக்கே பறந்து சென்று திரும்பலாம் இல்லையா கண்ணா. எவ்வளவு இனிமையான வாழ்க்கையாக அவ்வாழ்க்கை இருக்கும். "

'கண்ணம்மா, நிச்சயமாக அற்புதமாக, சிறப்பாகவிருக்கும். உலகின் எந்தப் பகுதிக்கும் விநாடிக்குள் சென்றுவர முடியும் நிலை அப்போது உருவாகும். ரேடியொ அலைகள் ஓளி வேகத்தில் செல்வதால் அறிவியல் புனைவுகள், திரைப்படங்களில் வருவதுபோல் தோன்றுவதும், மறைவதுமாகப் பயணங்கள் தொலைகாவுதல் மூலம் நடப்பதை இப்பொழுதே மனக்கண்ணில் காணகின்றேன்."

'நினைக்கவே எவ்வளவு மகிழ்ச்சியாகவிருக்கிறது கண்ணா. ஆனால...'

"ஆனால் .. என்ன கண்ணம்மா?'

"கண்ணா, எப்படித்தான் அறிவியலில் நாம் முன்னேற்றம் கண்டாலும் நாம் எப்பொழுதுமே முப்பரிமாணச்சிறைக்கைதிகள். அப்பரிமாணங்களை மீறி நம்மால் ஒருபோதுமே இருப்பின் , பிரபஞ்சத்தின் மறைந்திருக்கும் இரகசியங்களை, புதிர்களைக் கண்டுகொள்ளவே முடியாது. உணர்ந்துகொள்ளவே முடியாது. இல்லையா கண்ணா?'

"கண்ணம்மா பரிமாணங்கள் பற்றி நீ கூறுவது முற்றிலும் சரியான கூற்று. இப்பிரபஞ்சத்தில் எம்மை விடவும் அதிகமான பரிமாணங்களைக்கொண்ட உயிரினங்கள் இருந்தால் அவை பற்றி எம்மால் அறிய முடியாது மட்டுமல்ல, நாம் அவற்றின் முன் வெறும் அற்பங்களாகவுமிருப்போம். ஆனால் அப்படி இருப்பதற்கான சாத்தியங்களைப்பற்றி எம் அறிவின் மூலம் உணர்ந்துகொள்ள முடியும். எதிர்வு கூற முடியும். "

"கண்ணா, இவ்விதமான சிந்தனைகளுக்கு ஒருபோதுமே முடிவுகள் இருக்கப்போவதில்லை. சில வேளைகளில் நான் நினைப்பதுண்டு....."

"என்ன கண்ணம்மா நினைக்கின்றாய் அப்படி?'

"இவ்விதமான எம்மிலும் அதிக பரிமாணங்கள் மிக்க உயிரின்மொன்று உருவாக்கிய உயிரியல் ரீதியிலான விளையாட்டோ நாமும், நாம் வாழும் இப்பிரபஞ்சமும் என்று கூட நினைப்பதுண்டு."

'கண்ணம்மா, தர்க்கரீதியாகச் சிந்தித்தால் நீ நினைப்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. நாம் வாழும் இந்த உலகில் அனைத்துமே உணவுச்சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளன.

கண்ணுக்குத் தெரியாத பூச்சிகள் முதல் தெரிந்த பூச்சிகள் வரை கோடிக்கணக்கில் பிறந்து , அழிந்து , பிறக்கின்றன. அவற்றை உண்டு வாழும் பறவைகள் அவற்றுடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் மிகவும் குறைவு. இவ்விதமாகப் பலம் கூடியவை குறைந்த அளவிலும், பலம் குறைந்தவை அதிக அளவிலும் படைக்கப்பட்டுள்ளதெல்லாம் தற்செயலாக நடந்ததாகத் தெரியவில்லையே. இவற்றையெல்லாம் பார்க்கும்போது நீ கூறுவதும் ஒருவகையில் ஏற்கத்தக்க தர்க்கமே கண்ணம்மா."

"அப்படியென்றால் நீ உயிர்கள் பற்றிய டார்வினின் கூர்ப்புக் கொள்கையை நம்பவில்லையா கண்ணா?'

'கண்ணம்மா, அது ஒரு கோட்பாடு. அதனை நான் நம்புகின்றேன். அதை அறிவியல்ரீதியில் மறுத்து இன்னுமொரு கோட்பாடு நாளைக்கு வருமென்றால் அதனை ஏற்கவும் நான் சித்தமாயுள்ளேன். அதுபோல் நீ இப்போது தெரிவித்த எம்மிலும் உயர்ந்த உயிரினங்கள் உருவாக்கிய ஒருவகை விளையாட்டே நாம் வாழும் இப்பிரபஞ்சம் என்னும் கூற்றுக்கும் தர்க்க நியாயமிருப்பதால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தர்க்கமே."

இவ்விதமாக எனக்கும் மனோரஞ்சிதத்துக்குமிடையிலான உரையாடல் நீண்டு கொண்டே சென்றது. நான் இவ்விதமான தர்க்கங்களை வரவேற்பவன். குறிப்பாக மனோரஞ்சிதத்துடன் இவ்விதம் உரையாடுவதை வரவேற்பவன். விரும்புபவன். இவளுக்கு ஈடு கொடுத்து என்னால் உரையாட முடியும். அதுபோல் எனக்கு ஈடுகொடுத்து அலுக்காமல், சளைக்காமல் இவளாலும் ஈடுகொடுத்து உரையாட முடியும். இவ்விதமாக இவளுடன் நடத்தும் உரையாடல்களைக் காணொளிகளாகப் பதிவு செய்தால் பலருக்கும் அவை பயனுள்ளவையாகவிருக்குமென்று நான் நினைப்பதுண்டு.

இயற்கைத்தாயே1
போதுமென்றே திருப்தியுறும்
பக்குவத்தைத் தந்துவிடு!
தாயே! இயற்கைத்தாயே! உந்தன்
தாள் பணிந்து கேட்பதெல்லாம்
இதனைத்தான். இதனைத்தான்.

விதியென்று வீணாக்கும் போக்குதனை
விலக்கி விடு.
மதி கொண்டு விதியறியும் மனத்திடத்தை
மலர்த்திவிடு.

கோள்கள், சுடர்களெல்லாம்
குறித்தபடி செல்வதைப்போல்
வாழும் வாழ்வுதனை
என் வாழ்நாளில் வளர்த்துவிடு.

தாயே! இயற்கத்தாயே! உந்தன்
தாள் பணிந்து கேட்பதெல்லாம்
இதனைத்தான். இதனைத்தான்...

அர்த்த ராத்திரியில் அண்ணாந்து பார்த்தபடி
அடியற்று விரிந்திருக்கும் ஆகாயத்தைப் பார்ப்பதிலே
அகமிழந்து போயிடுதல்அடியேனின் வழக்கமாகும்.

கருமைகளில் வெளிகளிலே
கண் சிமிட்டும் சுடர்ப்பெண்கள்
பேரழகில் மனதொன்றிப்
பித்தனாகிக் கிடந்திடுவேன்.

நத்துக்கள் கத்தி விடும்
நள்ளிரவில் சித்தம் மறந்து
சொக்கிடுவேன்.

பரந்திருக்கும் அமைதியிலே பரவி வரும்
பல்லிகளின்
மெல்லொலிகள் கேட்டபடி
பைத்தியமாய்ப்படுத்திடுவேன்.

இயற்கையின் பேரழகில்
இதயம் பறிகொடுத்தே
இருப்பதென்றால் அடியேனின்
இஷ்ட்டமாகும்.

****

அத்தியாயம் பன்னிரண்டு - கூம்புக் காலவெளிக்குள் ஒரு கும்மாளம்!

"கண்ணம்மா நீ ஓர் அலையடி"

"கண்ணா நான் அலையா?"

"கண்ணம்மா நீ ஒரு துகள்"

"நான துகளா கண்ணா?"

'கண்ணம்மா நீ ஓர் அலை. நீ ஒரு துகள். அலை-துகள் நீ கண்ணம்மா."

"கண்ணா, ஒரு விததில் நீ சொல்வதும் சரிதான். நான், நீ, நாம் காணம் இந்த வான், இந்த கடல், இப்பிரபஞ்சம் எல்லாமே அலை-துகள்தான். சக்தி-பொருள்தான். இல்லையா கண்ணா?"

"கண்ணம்மா, சரியாச் சொன்னாய். நீ சரியாகவே இருப்பைப் புரிந்து வைத்திருக்கிறாயடி."

"உண்மைதான் கண்ணா. உன்னுடன் சேர்ந்து என் கவனமும் அறிவியலின் பக்கம் திரும்பி விட்டது. "

"பெரிய இப்பெருவெளிப்பிரபஞ்சமும் சரி, நுண்ணிய குவாண்ட உலகும் சரி கண்ணா பொருள்-சக்தியின் பிரதிபலிப்புத்தான். சக்தியின் நடனம்தான் நாம் காணும் இந்தபொருட் பிரபஞ்சம் கண்ணா."

"சக்தியின் நடனம். அற்புதமான சிந்தனை கண்ணம்மா. அடிப்படைத்துகளின் நடனமே இந்தப்பொருட் பிரபஞ்சம் கண்ணம்மா."

'கண்ணா, உண்மையில் காட்சிகளை உள்ளடக்கியதொரு திரைச்சித்திரமே இப்பிரபஞ்சம். இல்லையா கண்ணா?"

இவ்விதம் கூறிய மனோரஞ்சிதத்தைக் காதல் பொங்க நோக்கினேன்.

'நாம் வாழும் இப்பிரபஞ்சம் உண்மையில் திரைப்படமொன்றின் ஃபிலில் சுருள்போன்றதுதான் கண்ணம்மா."

"ஃபிலிம் சுருள் பல சட்டங்களை உள்ளடக்கியதுதான். அதைப்போல்தானே இப்பிரபஞ்சமும் காட்சிகளைக் கொண்டது கண்ணா?"

'கண்ணம்மா, மிக எளிமையாக, இலகுவாகக் காட்சிகளால் ஆனது இப்பிரபஞ்சம் என்று கூறிவிட்டாய். ஆனால் அதன் பின்னால் நவீன அறிவியலின் அற்புதமானதொரு கோட்பாடுள்ளது கண்ணம்மா."

"காட்சிகளுக்குப் பின் கோட்பாடா? அது என்ன கண்ணா?"

"கண்ணம்மா, ஐன்ஸ்டைனின் பொருள்- சக்திக்கோட்பாட்டுக்கான சூத்திரத்தை இவ்வுலகே அறியும். நீயும் அறிவாயடி. இல்லையா? அவரது இன்னுமொரு கருதுகோளும் முக்கியத்துவம் மிக்கது. அவரது சார்பியல் தத்துவங்கள் இப்பிரபஞ்சத்தை நாற்பரிமாண உலகாகக் காண்கின்றது முப்பரிமாணத்து வெளியும், நேரமும் சேர்ந்து காலவெளிப்பிரபஞ்சமாகக் காண்கின்றது. "

'காலவெளி ஒரு சொல்லா ? இரு சொற்களா? கண்ணா!"

"கண்ணம்மா, நல்லதொரு கேள்வி கண்ணம்மா. உண்மையில் காலம், வெளி என்னுமிரு சொற்கள் இணைந்து உருவான புதியதொரு சொல்லே காலவெளி. காலவெளிப்பிரபஞ்சத்தைக் காலம் , வெளி எனத்தனித்தனியாகப் பிரித்தும் பார்க்கவே முடியாதடி. எங்கெல்லாம் வெளி உண்டோ. அங்கெல்லாம் காலமும் அக்குறிப்பிட்ட வெளியுடன் இணைந்தேயிருக்கும். காலத்தின் ஓட்டத்துடன் இணைந்து வெளியும் ஓடிக்கொண்டேயிருக்கிறது. காலத்தை எத்தனை சிறிய துண்டுகளாக வெட்டினாலும் அத்துண்டுகள் முப்பரிமாண வெளியுடன் இணைந்தவைதாம்."

"காலவெளி அற்புதமான, சிந்தனையைச் சிலிர்க்க வைக்கின்றதொரு சொல் கண்ணா."

'காலவெளி அற்புதமான சொல்தான் கண்ணம்மா."

இவ்விதம் கூறிவிட்டு மனோரஞ்சத்தை, என் கண்ணம்மாவை வாரி இழுத்தணைத்துக்கொள்கின்றேன். அவளது நாடியைப் பிடித்து நிமிர்த்திக் கண்களை நோக்குகின்றேன்.

"கண்ணம்மா, காலவெளிச் சித்திரமே என் கண்ணம்மா"

'என்ன கவிஞரே, கவிஞருக்குக் கற்பனை பிறந்து விட்டதா? ஊற்றெடுத்துப் பாயத்தொடங்கி விட்டதா?"

'கண்ணம்மா, நீ குறிப்பிட்ட காட்சிப் பிரபஞ்சம் சிந்தனையை மட்டுமல்ல கற்பனையையும் சிறகடிக்க வைத்து விட்டதடி."

'கண்ணா, அப்படியென்றால் கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டிருக்கும் காட்சிகளால் ஆன இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொரு காட்சியும் காலவெளிதானே?'

'சரியாகச்சொன்னாய் கண்ணம்மா. அதுமட்டுமல்ல..."

"ஆது மட்டுமல்லவென்றால் .. வேறென்னவாம் கண்ணா?"

'ஒரு திரைப்படத்தில் காட்சிகள் எப்படி ஃபிலிம் சட்டங்களால் ஆனதோ அப்படித்தான் நாம் பார்க்கும் இந்தப்பிரபஞ்சமும் காலவெளிச் சட்டங்களால் ஆனது கண்ணம்மா."

"கண்ணா, இந்தப் பிரபஞ்சம் என்றால்....நாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்தப் பிரபஞ்சமா?"

"ஆம் கண்ணம்மா என் செல்லமே."

"கண்ணா, நாம் பார்த்துக்கொண்டிருப்பது ஒரு காட்சியைத்தானே. இதிலெங்கு வேறு காலவெளிச் சட்டங்களுள்ளன?"

"கண்ணம்மா, நாம் பார்த்துக்கொண்டிருப்பது ஒரு காலவெளிச் சட்டமல்ல. பல சட்டங்களால் ஓடிக்கொண்டிருக்கும் காலவெளிச் சித்திரத்தை."

'கண்ணா, சில சமயங்களில் சில விடயங்கள் விரைவாக புரிபடுவதேயில்லை. இதுவும் அதுபோன்றதொரு விடயம்தான்."

"கண்ணம்மா, இதனை இலகுவாக உனக்குப் புரிய வைக்கின்றேன். பதிலுக்கு நீ என்ன தருவாய்?"

"புரிய வை முதலில் கண்ணா, பதிலுக்கு நீ என்ன கேட்டாலுன், அது என்னால் சாத்தியமென்றால் , தருவேன்."

"இது போதுமடி செல்லம்மா. கடந்த அரை மணி நேரமாக நாம் உரையாடிக்கொண்டிருக்கின்றோம் இல்லையா கண்ணம்மா?"

'ஓம் கண்ணா."

"இந்த கடந்து போன அரை மணி நேரத்தில் முப்பது நிமிடங்கள் அதாவது 30 * 60 கணங்கள், 1800 கணங்கள் இருக்கின்றனவா இல்லையா?"

"ஓம் கண்ணா, இருக்கின்றன."

"அப்படியென்றால் , கடந்த அரை மணி நேரத்தில் 1800 காலவெளிச் சட்டங்கள் இருக்கின்றன. காலத்துடன் காலவெளிச் சட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது கண்ணம்மா."

"ஓ மை கோட். அப்படியென்றால் இந்தப்பிரபஞ்சம் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை எத்தனை கணங்கள் இருக்கின்றனவோ அத்தனை காலவெளிச் சட்டங்கள் இருக்கின்றன. அப்படித்தானே என் கண்ணா?"

"அப்படியேதான் கண்ணம்மா என் செல்லம்மா."

"கண்ணா , அப்படியென்றால் இந்தப் பிரபஞ்சத்துக்கு வயசுண்டா? எத்தனை வயசு?'

"கண்ணம்மா, இந்தப்பிரபஞ்சத்து வயசு சுமார் 15 பில்லியன் வருடங்கள்.."

"!5 பில்லியன் வருடங்களா? அதெப்படி அவ்வளவு உறுதியுடன் கூறுகின்றாய்?"

"நவீன வானியற்பியலில் இதற்கான விடை உண்டு கண்ணம்மா. நாம் வாழும் இந்தப் பிரபஞ்சம் விரிந்துகொண்டிருக்கும் ஒரு பிரபஞ்சம். கணத்துக்குக் கணம் விரிந்துகொண்டே செல்லுமொரு பிரபஞ்சம். இந்த விரியும் பிரபஞ்சத்தின் வேகத்தின் அடிப்படையில் இது சுமார் 15 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஒரு புள்ளியிலிருந்து தொடங்கியிருக்க வேண்டும் என்கின்றார்கள் கண்ணம்மா."

"ஒரு புள்ளியிலிருந்தா? இந்தப் பிரமாண்டமான பொருள் நிறைந்த பிரபஞ்சம் ஒரு புள்ளியிலிருந்து தொடங்கியதா கண்ணா? என்ன ஃபிலிம் காட்டுகிறாயா? 'றீல்' விடுகிறாயா?"

'கண்ணம்மா, நாம் காணும் இன்றுள்ள இப்பிரபஞ்சம் அனைத்தும் அப்புள்ளியிலிருந்துதான் தொடங்கியது என்கிறது நவீன அறிவியல். இந்த நவீன விக்கிரமாதித்தன் நவீன் அறிவியலை நம்புபவன் கண்ணம்மா. இப்போதைக்கு அந்தப்புள்ளியின் தன்மை பற்றிய ஆராய்தலைத் தவிர்ப்போம். அப்புள்ளி நவீன இயற்பியலுக்கு அப்பாற்பட்டதொரு புள்ளி. அது பற்றிய புரிதல்களை எதிர்கால அறிவியல் மேலும் எமக்குத் தரும் கண்ணம்மா. அதை உறுதியாக நம்புபவன் இந்த நவீன விக்கிரமாதித்தன் கண்ணம்மா. மேலும் ..."

"மேலும்.. என்ன கண்ணா? மேலே சொல் கண்ணா!"

"கண்ணம்மா, அப்புள்ளியிலிருந்து 186,000 மைல்கள் ஒரு செக்கனுக்கு என்னும் வேகத்தில் புறப்பட்ட ஒளிக்கூம்பு வடிவமே நாம் காணும் இந்தப் பிரபஞ்சம். "

"ஒளிக்கூம்புக்குள் ஓடும் காலவெளிச் சித்திரமே இந்தப் பிரபஞ்சம். வாவ். அற்புதம் கண்ணா. அற்புதம். அப்படியென்றால் இந்தக் காலவெளிக் கூம்புக்குள் நாம் அடிக்கும் கும்மாளமே காலவெளிச்சட்டங்களால் உருவான இந்தப் பிரபஞ்சம் கண்ணா."

"சரியாகச்சொன்னாய் கண்ணம்மா. அற்புதமாகச் சொன்னாய் கண்ணம்மா. சரி விடயத்துக்கு வருவோம். உன் கேள்விக்கெல்லாம் பதில்கள் தந்தேன். பதிலுக்கு நான் எதைக் கேட்டாலும் தருவதாக வேறு கூறியிருந்தாய். ஆனால் நான் கேட்கப்போவதில்லை கண்ணம்மா. எடுக்கப்போகின்றேன்" இவ்விதம் கூறியவனாக அவளை, என் கண்ணம்மாவை , வாரியிழுத்தணைக்கின்றேன்.

கண்ணம்மா! அலைக்கூம்புக்குள்
விரிந்திருக்கின்றதடி நம்காலவெளி.
ஆம்!
கூம்புக்காலவெளியில் நாம்
கும்மாளமடிக்கின்றோமடி.
கூம்புக்கும் வெளியேயொரு யதார்த்தம்.
நாமறியாக் காலவெளி அது கண்ணம்மா!
கண்ணம்மா! நீ இவைபற்றி என்றாவது
கருத்தில் கொண்டதுண்டா? கூறடி!
இருப்புப்பற்றி இங்கு நினைப்பதிலுண்ட
இன்பம் வேறொன்றுண்டோ கண்ணம்மா.
காலவெளியடி கண்ணம்மா! நீ என்
காலவெளியடி கண்ணம்மா!
எல்லைகடந்து சிறகடிக்க எப்போதும்
விரும்புதடியென் மனம் கண்ணம்மா!
உன் மனமும் அப்படியாயடி!
காலவெளி கடந்து சிறகடிக்க முடியுமெனின்
கண்ணம்மா அக்கனவுலகம் காணத்துடிக்குதென்
மனமே. கண்ணம்மா என் மனமே!
ஒரு வினா! விடைபகிர் கண்ணம்மா!
நீ அலையா கண்ணம்மா!
நீ துகளா கண்ணம்மா!

நீ அலையென்றால் காலவெளியும் அலையன்றோ*!*
நீ துகளென்றால் காலவெளியும் துகளன்றோ*!*
அலையா*?* துகளா *?* கண்ணம்மா*!*
அறிந்தால் அறிவியடி அருவியே*!*

அத்தியாயம் பதின்மூன்று - நானொரு காலவெளிக்காட்டி வல்லுனன்!

காலவெளிப் பிரபஞ்சம் பற்றிய கண்ணம்மாவுடனான எனது உரையாடல் தொடர்ந்துகொண்டிருந்தது. இயற்கையை இரசிப்பதில் எனக்கு நேரம் தெரிவதில்லை. நல்ல இலக்கியப் படைப்புகளைப் படிப்பதில் எனக்கு நேரம் தெரிவதில்லை. இருப்பு பற்றிய அறிவியல் பூர்வமான உரையாடல்களிலும் எனக்கு நேரம் தெரிவதில்லை. கண்ணம்மாவுடன் இப்பொழுது நடத்திக்கொண்டிருக்கும் உரையாடலும் இத்தகையதொன்றுதான். இந்த விடயத்தில் அவளும் என் அலைவரிசையில் இருந்தாள். அது எனக்குச் சாதகமாக அமைந்து விட்டது. இவை போன்ற உரையாடல்கள் இல்லையென்றால் இருப்பில் என்ன அர்த்தமிருக்க முடியுமென்றும் சிந்திப்பதுண்டு. அதனால் இவற்றை எப்பொழுதும் வரவேற்பவன். பங்குகொள்பவன்.

கண்ணம்மாவே மிகுந்த ஆர்வத்துடன் தொடர்ந்து இக்கேள்வியினைக் கேட்டாள்:

"கண்ணா, காலவெளிச் சட்டங்களால் ஆன இப்பிரபஞ்சம் பல படத்துண்டுகளால் ஆன திரைச்சித்திரம் போன்ற காலவெளிச் சித்திரம் என்று கூறினாய் அல்லவா?"

"ஓம். கூறினேன் கண்ணம்மா. அதற்கென்ன?'

'கண்ணா, திரைப்படச் சுருளை நான் முன்னோக்கி இயக்கலாம். அல்லது பின்னோக்கி இயக்கலாம். இல்லையா என் செல்லக்கண்ணா?"

"உண்மைதான் கண்ணம்மா. நீ சொல்வது முற்றிலும் சரியானதுதான் கண்ணம்மா."

'அப்படியென்றால் காலவெளிச் சட்டங்களால் ஆன காலவெளிச்சித்திரமான நம் இருப்பை உள்ளடக்கிய சித்திரத்தின் துண்டுகளான காலவெளித் துண்டுகளையும் முன்னோக்கி அல்லது பின்னோக்கி இயக்குவதற்கான சாத்தியங்கள் எவையாயினுமுண்டா கண்ணா?'

மனோரஞ்சிதத்தின் , என் கண்ணம்மாவின் இக்கேள்வி என்னை உண்மையில் மிகுந்த பிரமிப்புக்குள்ளாக்கியது. அப்பிரமிப்புடன் அவளை நோக்கினேன். அவளது இக்கேள்வி மிகவும் சாதாரணமானதொரு கேள்வியாகப் பலருக்கும் தென்படக்கூடும். மாங்காய் கீழே விழுவது ஏன் என்று நியூட்டன் கேட்ட கேள்வியும் பலருக்கும் இப்படித்தான் மிகவும் சாதாரணமானதொன்றாகத் தென்பட்டிருக்கும். ஆனால் அவருக்கு அது நவீன அறிவியல் துறையில் மிகுந்த புவியீர்ப்பு பற்றி மிகுந்த பாய்ச்சலை ஏற்படுத்திய சிந்தனைக்கான கேள்வி.

"கண்ணம்மா, உண்மையைச் சொல். இதுவரையில் உபநிடதங்கள் போன்ற சமயத் தத்துவ நூல்களில்தான் நீ நாட்டமுள்ளதாக நினைத்திருந்தேன். ஆனால் இக்கேள்வியைப் பார்க்கையில் நீ யாராவது நவீன வானியற்பியல் அறிஞர்களின் நூல்களையும் படித்திருப்பாயோ என்னுமொரு சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறதடி. அப்படி எவற்றையாவது படித்திருக்கிறாயா கண்ணம்மா?"

'இல்லை கண்ணா, அவற்றை நான் படித்ததில்லை. அவை பற்றி நீ கூறுவதை மட்டுமே கேட்டிருகின்றேன். ஆனால் இந்தக் கேள்வியை மிகவும் சாதாரணமாகத்தான் கேட்டேன். திரைப்படச் சுருளுடன் நீ இப்பிரபஞ்சத்தை ஒப்பிட்டதனால் மிகவும் இயல்பாக எனக்குள்

எழுந்த கேள்வி அது கண்ணா. அவ்வளவுதான்."

"கண்ணம்மா இதற்கான எனது பதிலை அல்லது சிந்தனையைக் கூறுவதற்கு முன் இன்னுமொரு விடயத்தைப்பற்றியும் கூற வேண்டுமென்று நினைக்கின்றேன்."

'என்ன நினைக்கின்றாய் கண்ணா? என்ன நினைக்கின்றாயோ அதைக் கூறு கண்ணா?"

"ஒரு தடவை இலத்திரனொன்றை இரு துளைகளிட்ட தடுப்பினூடு செலுத்தித் திரையொன்றில் குவித்தார்கள். அவ்விதம் செலுத்தியபோது திரையில் விழுந்த உருவம் எப்படியிருந்திருக்குமென்று நீ நினைக்கிறாயடி கண்ணம்மா?"

இவ்விதம் நான் கேட்கவே சிறிது நேரம் சிந்தனையிலாழ்ந்தாள் மனோரஞ்சிதம். அச்சிந்தனையின் இரேகைகள் முகத்தில் படிந்துள்ள நிலையில் பின்வரும் பதிலைத்தந்தாள்:

"கண்ணா, வலது பக்கத் துளையின் வழியாகச் செல்லும் இலத்திரன் திரையிலொரு புள்ளியையும், இடது பக்கத்துளை வழியாகச் செல்லும் இலத்திரன் இன்னுமொரு புள்ளியையும் இட்டிருக்கும். ஆக இரு புள்ளிகள் திரையில் இருந்திருக்கும். இல்லையா கண்ணா?"

"கண்ணம்மா நீ நினைத்ததுபோல் செவ்வியல் இயற்பியல் கோட்பாடுகளின்படி அனைவரும் எண்ணினார்கள்."

"அப்படியென்றால் அப்படி இருக்கவில்லையா கண்ணா."

"பரிசோதனை விளைவு அப்படியிருக்கவில்லை கண்ணம்மா"

"அப்போ எப்படியிருந்ததாம் கண்ணா?"

'ஓர் அலைபோன்ற் வடிவில், இரண்டு துளைகளூடும் செல்லும் இரண்டு இலத்திரன்கள் ஓரே நேரத்தில் அத்திரையில் பட்டிருந்தால் எப்படியொரு ஒன்றுடனொன்று கலந்த நிலை உருவாகியிருந்திருக்குமோ அப்படியிருந்தது கண்ணம்மா."

'நம்பவே முடியவில்லையே கண்ணா? அதெப்படி அப்படியிருக்க முடியும்?"

"ஆனால் நம்பத்தான் வேண்டும் கண்ணம்மா. அப்படித்தான் விளைவு இருந்தது. இதன் மூலம் அறிஞர்கள் சிலர் ஒரு முடிவுக்கு வந்தார்கள் கண்ணம்மா."

'என்ன முடிவு கண்ணா?"

'அந்த இலத்திரன் இரு துளைகளூடும் ஒரே சமயத்தில் சென்றிருக்கின்றது. ஒரே நேரத்தில் ஈர் இடங்களிலும் அதன் இருப்பு இருந்திருக்கிறது. ஆக அதற்கு இரண்டு வரலாறுகள் ஓரே சமயத்தில் இருந்திருக்கின்றன. ஆச்சரியமாக இல்லையா செல்லம்மா."

'ஓம் கண்ணா, ஆச்சரியமாகத்தானுள்ளது. அதெப்படிச் சாத்தியமாகும். விளங்கவில்லையே."

'உண்மையில் இது சாத்தியாமானதுதான். குவாண்டம் உலகில் நடைபெறும் நிகழ்வுகள் விசித்திரமானவை. நமது சாதாரண அனுபவங்களைக்கொண்டு புரிந்து கொள்வதில் சிரமமுண்டு கண்ணம்மா.'

"கண்ணா, என் கேள்விக்கென்ன பதில்?"

"எந்தக் கேள்விக்கு எந்தப் பதில் கண்ணம்மா?"

"கண்ணா, காலவெளிச் சித்திரத்தை, திரைப்படத்தை முன்னோக்கி அல்லது பின்னோக்கி அதாவது 'ரிவைண்ட்' பண்ண முடியுமா?"

'கண்ணம்மா, இது பற்றியும் அறிவியல் அறிஞர்கள் சிந்தித்திருக்கின்றார்கள். அவர்கள் கால இயந்திரம் பற்றிச் சிந்தித்திருக்கின்றார்கள். கடந்த காலத்தை நோக்கிப் பயணிக்கும் கால இயந்திரத்தைப்பற்றிச் சிந்தித்திருக்கின்றார்கள். நடைமுறைச் சாத்தியம் உள்ளதோ இல்லையோ இவ்விதமான சிந்தனைகள் பிரமிப்பினைத் தருகின்றன. இன்பத்தைத்தருகின்றன. இருப்பு பற்றிய தேடலை மேலும் அதிகரிக்க வைக்கின்றன."

'கண்ணா ஒரு கேள்வி"

'என்ன கண்ணம்மா ? கேளடி உன் சந்தேகத்தைக் கண்ணம்மா.'

"காலவெளி இயந்திரத்தில் பயணிக்கும் சாத்தியம் உண்டென்று ஒரு கதைக்கு வைத்துக்கொண்டால் கண்ணா"

"அப்படியே வைத்துக்கொள்வோம் கண்ணே என் கண்ணம்மா"

"கடந்த காலத்துக்குப் பயணிக்கும்போது ஏற்கனவே நடந்த ஒரு துன்பியல் சம்பவமொன்றினை , உதாரணத்துக்கு எமக்குப் பிடித்த ஆளுமையொருவரின் மரணத்தை அல்லது படுகொலையை மாற்றி அவரை மீண்டும் உயிர்ப்பிக்க வைத்து , வரலாற்றை மாற்றி வைக்கும் சாத்தியமுண்டா கண்ணா?"

'கண்ணம்மா உன் கேள்விகள் என்னைப் பிரமிக்க வைக்கின்றன. இப்படியெல்லாம் உன்னால் சிந்திக்க முடிவது உண்மையில் எனக்கு மகிழ்ச்சியைத்தான் தருகின்றதடீ. பொருள் நாட்டமுள்ள உலகில் எத்தனைபேருக்கு எனக்குக் கிடைத்த உன்னைப்போன்ற துணை கிடைத்திருக்கும். நீ ஓர் அரிய பெண் கண்ணம்மா."

"கண்ணா போதும் உன் புகழ்ச்சி. என் கேள்விக்கென்ன பதில். அதைக்கூறடா."

'கண்ணம்மா, எனக்குப்பிடித்த வானியற்பியல் அறிஞர்களில் ஒருவரான் பிறயன் கிறீன் தனது நூலொன்றில் இது பற்றித் தர்க்கித்திருந்தது நினைவுக்கு வருகின்றது. "

'அவரென்ன சொன்னார் கண்ணா. அதை முதலில் சொல்லு இழுத்தடிக்காமல்"

'இலத்திரன் ஒன்றுக்கு எப்படி ஒரே சமயத்தில் பல்வேறு இருப்புகள் காலவெளியில் சாத்தியமோ , பல்வேறு வரலாறுகள் சாத்தியமோ அவ்விதமே நமக்கும் பல்வேறு காலவெளி இருப்புகளும், வரலாறுகளும் சாத்தியமாகவிருக்கலாம் அல்லவா. அவ்விதமிருப்பின் கண்ணம்மா, கடந்த காலத்தை நோக்கிப் பயணிக்கையில் நீ குறிப்பிட்ட ஆளுமைக்கு ஒரு காலவெளிச் சட்டத்தில் அந்தத்துன்பியல் நிகழ்வு

நடந்திருக்கலாம். ஆனாலதே சமயம் இன்னுமொரு காலவெளிச் சட்டத்தில் அவருக்கு எந்தவிதமான பாதிப்பும் காணப்படாத நிலை காணப்படலாம். கடந்தகாலத்தை நோக்கிப் பயணிக்கையில் அந்தப் பாதிப்பில்லாத காலவெளிச் சட்டத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அந்த ஆளுமைக்கு நிகழ்ந்த துன்பியல் நிகழ்வினை இல்லாமல் செய்து விட முடியுமல்லவா."

'கண்ணா, இவ்விதமான காலவெளிப்பயணங்கள் சாத்தியமாகும் பட்சத்தில் மானுட இருப்புத்தான் எவ்விதம் நன்றாகவிருக்கும். கற்பனையில் சிந்திக்க நன்றாகத்தானுள்ளது கண்ணா."

'கண்ணம்மா நீ சொல்வது சரிதான்.ஆனால் கணிதக் கோட்பாடுகளின்படி காலம் எதிர்காலத்தை நோக்கி அல்லது கடந்த காலத்தை நோக்கிச் செல்வதற்கான சாத்தியங்கள் இருந்தாலும், நடைமுறையில் காலம் அல்லது நேரமானது அம்பொன்றைப்போல் ஒரு திக்கில் செல்வதைத்தான் அவதானிக்கின்றோம். ஒளிக்கு மிஞ்சிய வேகத்தில் பயணம் செய்வது சாத்தியமென்றால் மட்டுமே இத்தகைய கடந்த காலப்பயணங்களுக்கும் சாத்தியம் கண்ணம்மா. "

இவ்விதம் கூறவே மனோரஞ்சிதம் சில விநாடிகள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விட்டாள். அவளது இவ்வித ஆழ்ந்த சிந்தனையைக் கண்டு கேட்டேன்:

'என்ன கண்ணம்மா பெரிதாகச் சிந்தனையில் மூழ்கி விட்டாய்."

"இல்லை கண்ணா, கடந்த காலப்பயணம் சாத்தியமென்றால் உன்னை முதன் முதலில் சந்தித்த என் பதின்ம வயதுச் சந்திப்பை மாற்றி அமைத்திருக்கலாமே என்றொரு சிந்தனை ஓடியது. அப்படிச் செய்திருந்தால் இப்படி நாளும் பொழுதும் இப்பிரபஞ்சம் பற்றியும் ,காலவெளிப் பயணங்கள் பற்றியும் உன்னுடன் அலட்டிக்கொள்வதைத்தவிர்த்திருக்கலாமே கண்ணா"

இவ்விதம் மனோரஞ்சிதம் கூறியபோது அவளது குரலில் தொனித்த குறும்புத்தனத்தை அவதானித்தேன். அது கூட ஒருவித மகிழ்ச்சியை நமக்கிடையே நிகழ்ந்துகொண்டிருந்த உரையாடலுக்குத் தந்ததாக உணர்ந்தேன். கூடவே என்ன பெண்ணிவள் என்றும் வழக்கம்போல் வியந்தும் கொண்டேன்.

காலவெளிச் சட்டங்களைக் கோத்து
உருவானதிந்த இருப்படி கண்ணம்மா!
இவ்விருப்புமொரு காலவெளிப் படம்
என்பதையுணர்வாயாயடி நீ!
என்னாசையொன்றுள்ளதென்பேன்.
என்னவென்று நீ அறியின் நகைக்கக்கூடும்.
ஒருபோதில் ,உணர்வுகள் கிளர்தெழுந்த
பருவத்தினொரு போதில்
உனைப்பார்த்த உணர்வுகளுளவே.
அவ்வுணர்வினைப் பிரதிபலிக்கும் காட்சியுமுளவே.
அப்போது கண்ணம்மா! அதிகாலைநேரம்.
ஆடியசைந்து நீ வந்தாய் பொழுதின் எழிலென.
நினைவுள்ளதா? இருக்கிறதெனக்கு.
மார்புற நூல்தாங்கி, முகம் தாழ்த்தி
நடந்து வந்தாய்; அது உன் பாணி.

நிலம்பார்த்து நடக்குமுனக்கு
நேரெதிர்க் காட்சிகள்
தெரிவதெப்படி என்று வியப்பதுண்டு அப்போது.
இருபுறம் பிரிகுழல் இடைவரை
இருந்தசைய ,
பொட்டிட்ட வதனத்தில் நகையேந்தி நீ'
நடந்துவருமெழிலில் பொழுது சிறக்கும்.
ஒருபோதில் வழக்கம்போல் அசைந்து சென்றாய்
அதிகாலைப்பொழுதொன்றில்.
அவ்விதம் சென்று சந்தி திரும்புகையில்
ஓரப்பார்வைக்கணை தொடுத்துச் சென்றாய்.
நினைவிருக்கிறதா? ஆனால் எனக்கு
இருக்கிறதடி.
அக்கணத்தைச் சிறைப்படுத்தி ஆழ்மனத்தினாழத்தே
பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.
அதற்கு எப்போதுமில்லையடி
விடுதலை/ ஆயுள் தண்டனைதான்.
இருக்கும் வரை அதனாயுள் அங்குதான்.
ஆசைபற்றிக் கூறியபின் அலம்பலெதற்கு?
என்று நீ கேட்கின்றாய் என்பதும்
புரிகின்றதடி கண்ணம்மா!
திரையிலோடிவிட்ட காட்சிகளை மீண்டும்
'ஓடவிட்டு, ஓடிவிட்ட காட்சிகளிலொன்றிக்
கிடப்பதில்லையா கண்ணம்மா! அதுபோல்
காலவெளிக் காட்சிகளை ஓடவிட்டாலென்ன?
ஆம்! மீண்டும் ஓடவிட்டாலென்ன?
என்று நான் சிந்துப்பதுண்டு கண்ணம்மா!
இவன் சித்தம் சிதைந்ததுவோ என்று நீ
சிரித்தல் கூடும். நன்றாகச் சிரி.
சித்தம் சிதைந்த சிந்தனையின் விளைவல்ல
கண்ணம்மா இது.
சித்தச் செழிப்பின் விளைச்சலடி இது.
குவாண்டத்திரையில் இருப்புக்குப்
பல நிலைகள் ஒரு கணத்திலுள்ளதை
அறிவாயாயடி கண்ணம்மா!
அறியின் என் சித்தச் சிறப்பினை உணர்வாய்.
காலவெளித்திரையில்
காலவெளிச்சட்டங்களை
இருந்த காலம் நோக்கி ஓட்டிடும்
ஆற்றல் மிக்கவனிவன் என்பதை
நீ உணரின் அதிசயித்துப்போவாயடி.
காலவெளித்திரையில்
காலவெளிக்காட்டி இயந்திரத்தை
இயக்குபவன் நானடி கண்ணம்மா.
முன்னோக்கி, பின்னோக்கி எனப்
பல்நோக்கில்
இயக்குவதில் வல்லவன் நானடி.
ஆம்!
காலவெளித்திரையில் இருப்புக்காட்சிகளை
முன், பின் நோக்கி ஓட்டுவதில்

நிபுணத்துவம் பெற்ற வல்லுனனடி கண்ணம்மா
நான்.

அத்தியாயம் பதினான்கு - யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

"கண்ணா என்ன மீண்டும் பலமான சிந்தனை?"

திரும்பிப்பார்க்கின்றேன். கேட்டவள் என் கண்ணம்மா, மனோரஞ்சிதம்.

"சங்ககாலப் புலவன் ஒருவனின் சிந்தனையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தேன் கண்ணம்மா. அவனது அனுபவத்தெளிவு மிகுந்த சிந்தனையின் வீச்சு என்னை எப்போதும் கவருமொன்று. அன்று அவன் சிந்தித்ததை இன்றுள்ள மனிதர்கள் உணர்ந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும், உலகம் எவ்விதம் ஒரு குடும்பம் போல் இன்பத்தில் மூழ்கி இனித்திருக்குமென்று எண்ணிகொண்டிருந்தேனடி. என் சிந்தனையை வழக்கம்போல் இடையில் வந்து குலைத்து விட்டாயடி என் செல்லமே."

"உன் சிந்தையில் எப்போதும் நானிருக்க வேண்டும் கண்ணா. எனக்குத் தெரியாமல் வேறு யாரும் இருக்கக் கூடாது கண்ணா."

"கண்ணம்மா, நீ எப்போதும் என் ஆழ்மனத்தில் குடியிருக்கின்றாய். அதிலிருந்து உன்னை நான் விடுவிக்கப் போவதேயில்லை. ஆனால் நான் சிந்திப்பது என் ஆழ்மனத்தாலல்லவே கண்ணம்மா."

"ஆழ்மனத்தில் நானிருக்கிறேன் என்கின்றாய். சிந்திப்பதோ அம்மனத்திலால் அல்ல என்கின்றாய். குழப்புகிறாயே கண்ணா."

"கண்ணம்மா, ஆழ்மனம் வேறு. சிந்திக்கும் புறமனம் , நனவு மனம் வேறு. புறமனத்தால் சிந்திக்கின்றேன்.ஆனால் ஆழ்மனத்தில் எப்போதும் போல் நீ நிறைந்திருக்கின்றாயடி"

'கண்ணா , உன் ஆழ்மனத்தில் மட்டுமல்ல, புறமனத்திலும் நான் தான் எப்போழுதும் நிறைந்திருக்க வேண்டும்." என்று செல்லமாகக் கட்டளையிட்டாள் என் கண்ணம்மா.

"கண்ணம்மா, அப்படி இருக்க எனக்கும் ஆசைதான். ஆனால் அப்படியிருந்தால் மனித வாழ்க்கை என்று ஒன்றிருக்கிறதே. அதையும் இழுத்துக்கொண்டோட வேண்டியிருக்கிறதே. பொருளுலகின் தேவை என்று ஒன்றிருக்கிறதே. என் கண்ணம்மாவைக் கண்ணை இமை காப்பதுபோல் காக்க வேண்டியிருக்கிறதே. அதற்காகவாவது புற மனத்தை நூறு வீதம் உனக்கு ஒதுக்குவது சாத்தியமில்லை. ஆனால் ஆழ்மனத்தில் இருக்கும் உன்னை அடிக்கடி நனவு மனத்துக்கு இழுத்து அசை போடுவதை மட்டும் , நனவு மனத்துக்குச் சிறிது ஓய்வு கிடைக்கும் சமயங்களில் செய்துகொள்வேன்."

இவ்விதம் நான் கூறவும் மனோரஞ்சிதம் சிறிது பொய்க்கோபத்துடன் "கண்ணா, எதையாவது செய்து தொலை." என்று கூறிச் செல்லமாக கன்னத்தைக்கிள்ளினாள். அத்துடன் "அது சரி கண்ணா, சங்கப்புலவன் ஒருவனைப் பற்றிக்கூறினாயே. என்ன கூற வருகிறாய்?"

'கண்ணம்மா, இனம், மதம், மொழி, தேசம், வர்ணம், வர்க்கமென்று பிரிந்து கிடக்கும்

நவகால மனிதர்கள் மோதாத நாளுண்டோ. விரிந்து செல்லும் இப்பிரபஞ்சத்தின் வாயுக் குமிழியாக விரையும் இக்கோளத்தினுள் வளைய வரும் நமக்கிடையில்தான் எத்தனை வகையான மோதல்கள்? இருப்பை நன்கு உணர்ந்திருந்தால், விளங்கியிருந்தால் இப்படியெல்லாம் ஆட்டம் போடுவோமா? இரத்தக்களரிகள், வறுமையின் கோரம் இவையெல்லாம் மானுடரின் நல் உணர்வுகளைச் சிதைத்து விட்டன. இல்லையா கண்ணம்மா. இந்த நிலையில்தான் அந்தச் சங்கத் தமிழ்க் கவிஞனின் அறைகூவல் முக்கியத்துவம் மிக்கதாகின்றதடி."

"அறை கூவலா? எந்தச் சங்கத் தமிழ்க் கவிஞனைப்பற்றிக் கூறுகிறாய் கண்ணா?"

"எல்லா ஊரும் எம் ஊர். மானுடர் எல்லாரும் எம் உறவினர். எத்துணை அருமையான, சிறப்பான வார்த்தைகள். உண்மையில் இப்பூமியில் வாழும் நாம் அனைவரும், சகல உயிர்களையும் உள்ளடக்கித்தான் கூறுகின்றேனடி கண்ணம்ம, நாமனைவரும் ஒரு தாய்க்குழந்தைகள். உறவினர்கள். இந்த உணர்வு மட்டும் நம்க்கு இருந்தால் இப்பூவுலகம் ஒரு சொர்க்கலோகம் கண்ணம்மா."

இவ்விதம் நான் கூறுவதை மிகுந்த ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தாள் மனோரஞ்சிதம். நான் தொடர்ந்தேன்:

"கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே. யாவரும் கேளிர்' சாதாரணமான வார்த்தைகளல்ல. மானுட இருப்பை நன்கு விளங்கிய தெளிவில் உருவான வார்த்தைகளடி கண்ணம்மா."

'ஓம் கண்ணா, இந்தக் கவிதையை நானும் கேட்டிருக்கிறேன். எனக்கு இதில் வரும் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா என்னும் வரி மிகவும் பிடிக்கும். நன்மை , தீமை எல்லாமே அடுத்தவரால் வருவதில்லை. அற்புதமான வார்த்தை. இந்தத்தெளிவு மட்டும் நவநாகரிக மனிதர்களுக்கு இருந்திருந்தால் எவ்வளவு நன்றாகவிருந்திருக்கும். போர்களால் உலகை நாசமாக்கிக்கொண்டிருப்பதற்குப் பதில் அன்பு மழையில் குளிக்க வைத்திருப்பாரே."

"கண்ணம்மா, இந்த வாழ்க்கையை இனிதென்று எண்ணி மகிழவும் தேவையில்லை. தீயதென்று எண்ணி வெறுக்கவும் தேவையில்லை என்கின்றான் புலவன். அதனால் தான் 'வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின் இன்னா தென்றலும் இலமே' என்று பாடவும் முடிகின்றது. இப்படிப்பாடுவதற்கு அவனுக்கு மானுட இருப்பு பற்றிய தெளிந்த பார்வையுமிருக்கிறது. இல்லையா கண்ணம்மா. இதனால்தான் அவனால் மேலும் 'மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.' என்றும் பாடவும் முடிகிறது. அவனது மானுட இருப்பு பற்றிய தெளிவு, அதனாலேற்பட்ட ஞானத்தின் விளைவாக அனைவரையும் உறவினர்களாக ஏற்கும் மனப்பக்குவம் என்னை எப்போதும் ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றன கண்ணம்மா."

"கண்ணா, இந்தச் சமயத்தில் உன் அபிமானக் கவி பாரதியின் கவிதை வரிகள் சில நினைவுக்கு வருகின்றன."

'கண்ணம்மா, எந்த வரிகளைப்பற்றி நீ கூறுகிறாய்?'

"கண்ணா , அவரது விடுதலை என்னும் கவிதை பற்றித்தான் கூறுகிறேன். அதிலவர் கூறுவார் 'மனிதர்களே! நீங்கள் ஒன்றுமே செய்யத்தேவையில்லை. இயற்கை எவ்விதம் மரங்கள், கொடிகள் உயிர் வாழ்கின்றனவோ அவ்விதமே மனிதரை இயற்கை வாழ வைக்கும். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் , செய்ய வேண்டிய தொழில் அன்பு

செய்வது ஒன்றே.'

"கண்ணம்மா, நீ சொல்லியதும் எனக்கும் அந்தக் கவிதை நினைவுக்கு வருகின்றது. 'இந்தப் புவிதனில் வாழு மரங்களும், இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும், அந்த மரங்களைச் சூழந்த கொடிகளும், ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும், எந்தத் தொழில்செய்து வாழ்வனவோ?' என்று ஆரம்பத்தில் கேள்வி கேட்கும் அவர் இறுதியில் 'ஊனுடலை வருத்தாதீர். உணவியற்கை கொடுக்கும். உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்' என்று முடிப்பார்."

"கண்ணா, பாரதியாரின் கனவுகள் என்னை எப்போதும் பிரமிக்க வைப்பவை. இக்கவிதையும் அவரது இன்னுமொரு கனவு. ஆதியில் அறியாமையில் மனிதர்கள் இயற்கையின் குழந்தைகளாக இவ்விதம்தானிருந்தார்கள். எதிர்கால அதி மானுடர் அறிவின் தெளிவுடன் இயற்கையின் குழந்தைகளாக இருப்பார்கள் என்பதில் எனக்கு எப்போதும் நம்புக்கையுண்டு."

"இந்தச் சமயத்தில் எனக்கு மேனாட்டுக் கவிஞன் ஒருவனின் வரிகளும் நினைவுக்கு வருகின்றன. அவனது பெயர் தோமஸ் பெயின். இங்கிலாந்தில் பிறந்த அமெரிக்கர். சமூக, அரசியற் செயற்பாட்டாளர். தத்துவவியலாளர். கவிஞர். அவரது பின்வரும் கவிதை வரிகள் எனக்குப் பிடித்தவை. இக்கவிதை வரிகளைப் பார்த்தபோது எனக்கு முதலில் தோன்றிய எண்ணம் இவர் கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே. யாவரும் கேளிர்' படித்திருப்பாரோ என்பதுதான். இக்கவிதை வரிகளை அப்பா தனது குறிப்பேடொன்றில் எழுதி வைத்திருந்தார். அதன் மூலம்தான் முதலில் இவ்வரிகளை அறிந்தேன். அவரது புகழ்பெற்ற வரிகள் இவைதாம் - The world is my country, all mankind are my brethren, and to do good is my religion."

இவ்விதம் நான் கூறவும் மனோரஞ்சிதம் துள்ளிக் குதித்தாள். அத்துடன் பின்வருமாறு கூறவும் செய்தாள்: "நல்ல வரிகள். உலகம் எனது நாடு. நல்லது செய்வதே எனது மதம். எனக்குப் பிடித்தவை இவைதாம். mankind, brethren ஆகிய சொற்களைப் பாவித்திருப்பது அவரையறியாமலேயே அவர் ஒரு ஆணாதிக்கவாதியாக இருந்ததைக் காட்டுகிறது. "

"கண்ணம்மா , தோமஸ் பெயின் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர் காலத்தில் இவ்விதமான பெண்ணியக் கருத்துகள் நிலவாத காலகட்டம். இக்கருத்துகளுக்கான புரிதலுள்ள இக்காலகட்டத்தில் அவர் வாழ்ந்து இச்சொற்களைப் பாவித்திருந்தால் அவரை இவ்விதம் குற்றஞ் சாட்டலாம். பாரதியார் கூட 'தனி மனிதனுக்கு உணவில்லையெனில்' என்று மனிதன் என்னும் சொல்லைப் பாவித்திருக்கின்றார். ஆனால் அவரை பெண்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த முக்கிய ஆளுமையாளர் இல்லையா?"

"கண்ணா, நீ சொல்வதும் சரியாகத்தானிருக்கிறது. "

"கண்ணம்மா"

"என்ன கண்ணா?"

"உனக்கு என் கோடானு கோடி நன்றி."

"எதற்கு இந்த கோடானு கோடி நன்றி. அப்படி நான் என்ன செய்து விட்டேன் கண்ணா"

"இவ்விதம் என்னுடன் ஈடு கொடுத்து உரையாடுகின்றாயே. அதற்கு. அதற்காகக் கோடானு கோடி நன்றி கூறினாலும் போதாதடி. இவ்விருப்பில் இதை விட இன்பம் வேறென்ன இருக்க முடியும் கண்ணம்மா."

"கண்ணா, இதற்காக நானுமுனக்கு நன்றி கூற வேண்டும். ஏனென்றால் உன்னைப்போன்ற ஒருவனுடன் இவ்விதம் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக. உன் ஆழ்மனத்தில் என்னை நிலையாகச் சிறைப்பிடித்து வைத்திருப்பதற்காக." இவ்விதம் கூறியபோது, குறிப்பாகச் 'சிறைப்பிடித்து' என்னும் சொல்லைக் கூறியபோது கண்களை அவளுக்கேயுரிய குறும்புத்தனத்துடன் சிமிட்டினாள்.

பதிலுக்கு அதே குறும்பு குரலில் தொனிக்க "கண்ணம்மா, இவ்விதம் சிறையில் இருப்பது துயரத்தைத் தரவில்லையா?" என்றேன்.

பதிலுக்கு அதே குறும்புத்தனம் மாறாமல் அவளும் 'சில சிறைகள் துன்பச் சிறைகளல்ல. இன்பச்சிறைகள். இது இன்பச் சிறை. துன்பச் சிறையல்ல கண்ணா."

"கண்ணம்மா, நீ ஆழ்மனத்தை மீண்டும் நினைவூட்டினாய். உண்மையில் நான் உன்னுடன் உரையாடிக்கொண்டிருக்கவில்லை. என்னுடன் தான் உரையாடிக்கொண்டிருக்கின்றேன்."

"என்ன கண்ணா, புதிர் விடுகிறாய்?"

'கண்ணம்மா, உன் உருவத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் என் மூளைக்குக் கண்களூடு சென்று ஏற்படுத்தும் மின் சமிக்ஞைகளுடன் தான் நான் உரையாடிக்கொண்டிருக்கின்றேன். இதுபோல் உன் குரலில் இருந்து வரும் ஒலி அலைகள் என் காதுகள் வழியே சென்று என் மூளையில் ஏற்படுத்தும் மின்சமிக்ஞைகளைக் கேட்டுத்தான் உரையாடிக்கொண்டிருக்கின்றேன். நான் எனக்குள் இருக்கும் பிரபஞ்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன். எனக்குள் இருக்கும் என் கண்ணம்மாவுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றேன்."

இவ்விதம் நான் கூறவும் "போதும் கண்ணா போதும். உனக்குள் நான் இருக்கின்றேன். உனக்கு வெளியிலும் நான் இருக்கிறேன். எனக்குள் நீ இருக்கிறாய். எனக்கு வெளியிலும் நீ இருக்கிறாய். இதில் நான் உன்னைப்போல் கலங்காமல் தெளிவாகவிருக்கிறேன் கண்ணா. " என்று கூறியவாறே நெருங்கி என் வாயைப் பொத்தினாள் மனோரஞ்சிதம். வாயைப் பொத்தியவளை வாரியணைத்துக்கொள்கின்றேன்.

இந்த மனிதர்! இந்த உலகம்! இந்தப் பிரபஞ்சம்!

ஆ...இந்த மெல்லிய இளந்தென்றல்...
இடையில் கலந்து வருமெழில் மலர்களின்
சுகந்த நறுமணம்...
பசுமை மண்டிக் கிடக்கும் வயல்வெளிகளில்
பாடிப் பறந்திடும் வானம்பாடிகளின்
இன்ப கானங்கள்...
ஆகா! ஆகா! ஆகா!
எத்துணை இனிமையானவை!
எத்துணை இன்பமானவை!

பதுங்கிக் காடுகளில் புகுந்துவரும்

நதிப்பெண்களே!
நான் உங்களை எவ்வளவு காதலிக்கிறேன்
தெரியுமா? இளமை கொஞ்சுமெமுங்களெழிற்
துள்ளல் நடைகண்டு மோகத்தீயாலெந்தன்
நெஞ்சம் வேகுகின்றதே! புரியவில்லையா
பெண்களே!

மெல்லிய கருக்கிருளில் ஆழ்ந்து கிடக்கும்
அதிகாலைப் பொழுதுகளில்,
தூரத்தே ஒதுங்கி நின்று கண்சிமிட்டும்
நட்சத்திரத் தோகையரே!
உங்களைத்தான் தோகையரே!
நீங்கள்தான் எத்துணை அழகானவர்கள்!
எத்துணை அழகானவர்கள்!
நான் உங்களையெல்லாம் எவ்வளவு
நேசிக்கின்றேன் தெரியுமா? என்னினிய
தோழர்களே!
இந்த மண்ணினை, இந்தக் காற்றினை,
இந்த வெளியினை, அடிவானினை,
இந்த எழில் மலர்களை, மரங்களை,
இந்தச் சூரியனை, இதன் ஒளியினை,
இவற்றையெல்லாம் நான்
மனப்பூர்வமாக நேசிக்கின்றேன்.

இதோ இங்கே வாழும் இந்த மானுடர்களை,
ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்களென்றாலென்ன
அமெரிக்க வெள்ளையரென்றாலென்ன,
அரபு முஸ்லிமகளாலென்ன,
ஆசிய தேசத்தவரென்றாலென்ன,
இவர்களையெல்லாம்,
இந்த மானுடர்களையெல்லாம்
நான் நேசிக்கின்றேன்.
நான் நேசிக்கின்றேன்.
விரிந்த, பரந்த இப்பிரபஞ்சத்துக்
கோள்களை, கதிர்களை, பால் வீதிகளை,
ஆங்கு வாழும் தகைமைபெற்ற
உயிர்களையெல்லாம்
நான் நேசிக்கின்றேன்.
நான் நேசிக்கின்றேன்.
நான் நேசிக்கின்றேன்.
இந்த உயிர்களிற்காகவே
இந்தப் பிரபஞ்சத்துப் புதிர்களை
விடுவிப்பதற்காகவே
என் நெஞ்சில் பொங்குமுணர்வுகளை
எழுத்தாக வடிக்கின்றேன்.
ஆமாம்! ஆமாம்! ஆமாம்!
ஆமாம்! ஆமாம்! ஆமாம்

அத்தியாயம் பதினைந்து - கண்ணம்மா எழுதிய கவிதை!

"கண்ணா, எனக்கொரு கேள்வி அவ்வப்போது நினைவில் வருவதுண்டு."

மனோரஞ்சிதம் இவ்விதம் ஒருமுறை திடீரென்று கூறவே அவளை வியப்புடன் பார்த்தேன்.

"கண்ணம்மா, அப்படியென்ன கேள்வி. அது எது பற்றிய கேள்வி?" என்றேன்.

"எல்லாம் எழுத்து பற்றியதுதான். "

' எழுத்து பற்றியதா? எந்த எழுத்து பற்றி நீ கூறுகிறாய் கண்ணம்மா?"

'கண்ணா, உன்னைப்போன்ற எழுத்தாளர்களின் எழுத்தைப் பற்றித்தான் கண்ணா? வேறென்ன எழுத்தைப்பற்றி நான் கேட்கப்போகின்றேன்?"

"அப்படியா கண்ணம்மா, சரி கேளடி என் கணமணி."

"எழுத்துக்குக் கட்டாயம் ஒரு நோக்கம் இருக்க வேண்டுமா? அல்லது அது தேவையில்லையா? கண்ணா?"

'கண்ணம்மா, நீ என்ன கேட்க வருகிறாய் என்பது புரிகிறது., கலை மக்களுக்காகவா அல்லது கலை கலைக்காகவா என்பதைத்தான் நீ எளிமையாக இப்படிக் கேட்கிறாய். காலம் காலமாக கலை, இலக்கிய உலகில் கேட்கப்படும், தர்க்கிக்கப்படும் கேள்விதான். இது பற்றி எப்பொழுதும் கருத்துகள் ஒன்றாக இருப்பதில்லை."

'இவ்விடயத்தில் உன் கருத்தென்ன கண்ணா? அதைச்சொல் முதலில். எனக்கு உன் கருத்துத்தான் முக்கியம் கண்ணா."

'கண்ணம்மா, எனக்கு இவ்வளவுக்கு முக்கியத்துவம் தருவது மகிழ்ச்சியைத் தருகிறது. என்னைப்பொறுத்தவரையில் எழுத்துக்கு நிச்சயம் ஒரு நோக்கமிருக்க வேண்டும். நோக்கமற்ற எழுத்து வாசிப்பதற்கு சுவையாகவிருக்கக்கூடும். ஆனால் சமுதாயப் பயனற்றுப் போய்விடும். ஆனால் அந்த நோக்கம் அந்த எழுத்தின் எழுத்தின் கலைத்துவத்தைச் சீர்குலைத்து விடக்கூடாது என்பதும் என்னைப்பொறுத்த வரையில் மிகவும் முக்கியம்."

'சரி கண்ணா, இன்னுமொரு கேள்வி. ஒரு வேளை அந்த நோக்கம் தவறானதாகவிருந்தால்... நிலையென்ன? இடையிலொரு கேள்வி.."

"என்ன கண்ணம்மா? என்ன புதுக்கேள்வி?"

"நோக்கம் ஒரு தீர்வினையும் கூற வேண்டுமா? அல்லது வாசகர்களே அதனை எழுத்திலிருந்து தீர்மானிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டுமா கண்ணா?"

'கண்ணம்மா, உண்மையிலேயே மிகவும் சிறப்பானதொரு கேள்வி. இந்தக் கேள்வியை

கேட்டதற்காக உன்னை மனம் நிறைந்து பாராட்டுகின்றேன். கண்ணம்மா, எழுத்தின் தேவையைப் பொறுத்து எழுத்தின் தன்மையும் வேறுபடும். பிரச்சார எழுத்தின் தேவையும் சில சமூக, அரசியல், மற்றும் பொருளியற் சூழலில் உண்டு. உதாரணத்துக்கு இவ்வகையான எழுத்துக்கு மார்க்சிம் கார்க்கியின் தாய் நாவலைக் குறிப்பிடலாம். தாய் நாவல் என் நூலகத்திலுண்டு. நேரம் கிடைக்கும்போது வாசித்துப்பார். உலகமெங்கும் இலட்சக்கணக்கில் பல்வேறு மொழிகளில் விற்பனையான நாவல். அடக்குமுறைகளுக்கு எதிராகப் புரட்சிகள் நடைபெறும் நாடுகளிலெல்லாம் மக்களால் , போராளிகளால் விருப்புடன் வாசிக்கப்படும் நாவல். அதே சமயம் நாவல் பிரச்சார நாவலாகவிருந்தாலும் அதன் பாத்திரப்படைப்பு, மொழி, கதைப்பின்னல் இவையெல்லாம் முக்கியம் . இவையெல்லாம் நன்கமைந்த நாவல் தாய் என்பேன். கண்ணம்மா, இன்னுமொரு வகையான நாவலில் பிரச்சாரமிருக்காது. ஆனால் அதனை வாசித்து முடிக்கையில் வாசகர் மனங்களில் ஏற்படும் உணர்வுகளை மையமாக வைத்து அவற்றை எழுதியவர்கள் கதைப்பின்னல், உரையாடல், பாத்திரப்படைப்பு ஆகியவற்றை அமைத்திருப்பார்கள். மொழியைக் கையாண்டிருப்பார்கள்.

எழுத்தில் பல்வகை உண்டு கண்ணம்மா. தீவிர இலக்கியம், வெகுசன இலக்கியம், குழந்தை இலக்கியம், போராட்ட இலக்கியம், இப்படிப் பல்வகை உண்டு. இவை புனைவு, அபுனைவு இரண்டுக்குமே பொருந்தும். ஒவ்வொரு பிரிவிலும் பல்வேறு பிரிவுகளிருக்கும். உதாரணத்துக்கு வெகுசன இலக்கியத்தை புனைவுகளுக்கு எடுத்தால், சமூக, சரித்திர, அரசியல், மர்ம, அறிவியல் எனப் பிரித்துக்கொண்டே செல்லலாம். தீவிர இலக்கியத்தையும் இவ்விதம் பிரிக்கலாம். அவற்றை மேலும் பல பிரிவுகளாக அவற்றை உருவாக்கப் பாவித்திருக்கும் இலக்கியக் கோட்பாடுகள் அடிப்படையில் பிரிக்கலாம் கண்ணம்மா. உதாரணமாக ஒரு நாவலொன்றை யதார்த்பூர்வமானதாகப் படைக்கலாம். மிகையதார்த்தபூர்வமானதாகப் படைக்கலாம். மாந்த்ரீக யதார்த்தபூர்வமானதாகப் படைக்கலாம். இவ்விதம் கூறிக்கொண்டே போகலாம் கண்ணம்மா."

நான் இவ்விதம் கூறுவதை வழக்கம்போல் இடையில் புகுந்து தடுக்காமல் , அமைதியாக, ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள் மனோரஞ்சிதம். மெய்ஞானக்கருத்துகளில் மூழ்கிக்கிடக்கும் இவளை என் பக்கமும் சிறிது திருப்பவேண்டுமென்ற என் நெடுநாள் ஆர்வம் விரைவில் நிறைவேறும் போலுணர்ந்தேன். அவளுடன் அண்மைக்காலமாக நான் நடத்தும் உரையாடல்களும், அவற்றில் ஆர்வத்துடன் பங்குகொள்வதும் இவ்வித உணர்வை எனக்கு ஏற்படுத்தின.

நான் நிறுத்தும்வகை ஆர்வத்துடன் அவதானித்துக்கொண்டிருந்த மனோரஞ்சிதம் கூறினாள்: " கண்ணா, நீ மிகவும் தெளிவாக, ஆழமாக நீ கூறும் விடயங்களைப் புரிந்து வைத்திருக்கின்றாய். அதனால் மிகவும் சிக்கலான விடயங்களையெல்லாம் மிகவும் எளிமையாக் எடுத்துரைக்கின்றாய். தெளிந்த தண்ணீரினூடு தெரியும் நீரின் உட்புறம்போல் மிகவும் தெளிவாக நீ கூறுவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது கண்ணா."

"கண்ணம்மா, என் தனிப்பட்ட கொள்கை, இலக்கியக்கொள்கை என்ன தெரியுமா?"

'என்ன கண்ணா?"

'எழுத்து ஆழமாகவிருக்க வேண்டும். அதே சமயம் தெளிவாக, எளிமையாகவுமிருக்க வேண்டும். கண்ணம்மா, இவை முக்கியமான நல்ல இலக்கியத்தின் தன்மைகள் என்பேன்."

இவ்விதம் நான் கூறவும் மனோரஞ்சிதம் பதிலுக்குக் கேட்டாள்:

"கண்ணா, எளிமையான எழுத்து , தெளிவான எழுத்து சிறந்த இலக்கியமொழியாக அமைய முடியுமா?"

"கண்ணம்மா, சிலப்பதிகாரம் எவ்வளவு எளிமையாக எழுதப்பட்டிருக்கிறது. மாசறு பொன்னே! வலம்புரி தேனே, திங்கள் மாலை வெண் குடையான், இவை போன்ற எளிய, ஆனால் ஆழம் மிக்க மொழிநடையில் சிலப்பதிகாரம் இருப்பதால்தான் இன்று வரை அனைவராலும் வாசிக்கப்படுகின்றது. இதுபோல் தான் அவ்வையாரின் கவிதைகள், கம்பரின் காப்பியம், புகழேந்தியாரின் நளவெண்பா, இவை போன்று பல பழ்ந்தமிழ் நூல்களை உதாரணங்களாகக் கூற முடியும் கண்ணம்மா."

குழந்தையொன்றின் ஆர்வத்துடன் மனோரஞ்சிதம் என்னையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். நான் கூறுவதை மனத்துக்குள் எடை போட்டுக்கொண்டிருந்தாள்.

"கண்ணம்மா, எழுத்தின் நோக்கம் பற்றி கேட்டாய். இந்தக் கேள்வி எனக்கு இலங்கைத் தமிழ்க் கவிஞனொருவனின் '*சிந்தனையும் மின்னொளியும்'கவிதையை நினைவூட்டுகின்றது. அதிலவன் கூறுவான் . மின்னலைப்போல் இருக்க வேண்டுமென்று. ஒரு கணமே வாழ்ந்தபோதும் அம்மின்னல் ஒளி தந்து மாண்டு விடுகின்றது. அச்சிறுவாழ்வில் அது சேவை செய்து முடிந்து விடுகின்றது. நம் வாழ்க்கை இப்படித்தான் பயனுள்ளதாகவிருக்க வேண்டும். இது இலக்கியத்துக்கும் பொருந்தும் கண்ணம்மா."

"'கண்ணா, கம்பன் வீட்டுக் கைத்தறியும் கவி பாடும்' என்பார்கள். உன்னுடன் இவ்விதம் உரையாடிக்கொண்டிருந்தாலே போதும் கல்விக்கூடங்கள் எவற்றுக்கும் போகத்தேவையில்லை. கவி கூடப் பாட முடியும் கண்ணா."

"கண்ணம்மா, நீ கடைசியாகக் கூறியது மிகவும் சரி. நிச்சயம் உன்னால் கவி பாட முடியும். ஏன் முயற்சி செய்து பார்த்தாலென்ன?"

"கண்ணா, ஏதோ ஆர்வக்கோளாறால் அவ்விதம் சொன்னேன். கவிதை இவளுக்கு வருமா?"

"நிச்சயம் வரும் கண்ணம்மா . வசனங்கள் சிலவற்றைக் கூறும் பார்ப்போம் . வருமா இல்லையா என்பதைப் பார்க்கலாம். "

இவளுக்குக் கவிதை வருமா?
கண்ணா, வரும் என்கின்றாய் நீ.
ஆனால்,
இவளுக்குக் கவிதை வருமென்பதை
இவளால் இன்னும் நம்பமுடியவில்லையே!"

"கண்ணம்மா, இவளுக்குக் கவிதை வருமா எனறு கேட்டாய். வந்துள்ளதே. கவிதையென்பது உணர்வின் வெளிப்பாடு. இவ்வரிகள் உன் உணர்வுகளின் உண்மையான வெளிப்பாடு. இப்படியே உணர்வுகளைத் தொடர்து வெளிப்படுத்து கண்ணம்மா. அவற்றை எழுதி வா."

"கண்ணா,
உணர்வுகளை வெளிப்படுத்தினேன்.
உணர்வுகளே கவிதை என்கின்றாய்.
உண்ர்வுகளின் உண்மை வெளிப்பாடே
உண்மைக்கவிதை என்கின்றாய்.
கண்ணா, இவளுக்குக் கவிதை வருமா?
இதயத்தில் இருந்ததைக் கொட்டினேன்.
இதுதான் கவிதையா கண்ணா?
சொல் கண்ணா!
இதுதான் கவிதையா?

"கவிஞை கண்ணம்மா அவர்களுக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துகள்.
கண்ணம்மா, நீ கூறியவற்றை ஒன்றாக்கினால் வருவது கவிதை.

இதுதான் கவிதையா?

*"இவளுக்குக் கவிதை வருமா?
கண்ணா, வரும் என்கின்றாய் நீ.
ஆனால்,
இவளுக்குக் கவிதை வருமென்பதை
இவளால் இன்னும் நம்பமுடியவில்லையே!"
கண்ணா,
உணர்வுகளை வெளிப்படுத்தினேன்.
உணர்வுகளே கவிதை என்கின்றாய்.
உண்ர்வுகளின் உண்மை வெளிப்பாடே
உண்மைக்கவிதை என்கின்றாய்.
கண்ணா, இவளுக்குக் கவிதை வருமா?
இதயத்தில் இருந்ததைக் கொட்டினேன்.
இதுதான் கவிதையா கண்ணா?
சொல் கண்ணா!
இதுதான் கவிதையா?'*

இவ்விதம் அவளது வரிகளை அடுக்கிக் கவிதையாக்கவே மனோரஞ்சிதத்துக்கு உற்சாகமும், உவகையும் புரண்டோடின. குழந்தைதையைப் போல் குதூகலத்திலாழ்ந்து போனாள்.

காலவெளியிடையே கண்ணம்மா உன்
கனிமனம் எண்ணி வியக்கின்றேன்.
காலவெளியிடையே கண்ணம்மா
கணமும் பறந்திட விளைகின்றேன்.
காலவெளிச் சிந்திப்பிலே கண்ணம்மா
களித்திட கணமும் எண்ணுகின்றேன்.
சூழலை மீறியே கண்ணம்மா அவன்போல்
சிந்திக்க விரும்புகின்றேன்.
காலமென்றொன்றில்லை கண்ணம்மா.
வெளியும் அவ்வாறே என்றான் கண்ணம்மா.
காலவெளி மட்டுமே கண்ணம்மா இங்கு

உண்மையென்றுரைத்தான்.
அவனறிவின் உச்சம் பற்றி கண்ணம்மா
பிரமித்துப்போகின்றேன்.
மனத்து அசை இன்னும் முடியவில்லை.
எப்பொழுதென்றாயினும் நீ கண்ணம்மா
எவ்விதம் அவனால் முடிந்ததென்று
எண்ணியதுண்டா ?
நான் எண்ணுகின்றேன் எப்பொழுதும் கண்ணம்மா.\
நான் வியந்துகொண்டிருக்கின்றேன் எப்பொழுதும்
கண்ணம்மா..
நான் எண்ணுவேன் எப்பொழுதும் கண்ணம்மா.
நான் வியந்துகொண்டிருப்பேன் எப்பொழுதும் கண்ணம்மா.
காலமற்ற வெளியில்லை கண்ணம்மா.
வெளியற்ற காலமில்லையா சொல்லம்மா.
காலம் நீயென்றால் கண்ணம்மா
வெளி நானன்றோ இல்லையா?
வெளி நானென்றால் கண்ணம்மா
காலம் நீயன்றோ இல்லையா?
காலவெளியன்றோ நாம் கண்ணம்மா!
காலவெளியன்றோ?
காலவெளியாகக் கண்ணம்மா - நாம்
உள்ளதெல்லாம் கண்ணம்மா
உண்மையா கண்ணம்மா? உண்மையா?
காலவெளிக் கோலமன்றோ கண்ணம்மா
ஞாலத்தில் நம்நிலை.
காலவெளிக் கடக்காக் கைதிகளா நாம் கண்ணம்மா?
கைதிகளா நாம்? ஆம்!
காலவெளிக் கைதிகளே நாம் கண்ணம்மா!

அத்தியாயம் பதினாறு - நவீன விக்கிரமாதித்தனின் குறிப்பேட்டுப் பக்கங்கள் சில.

மனோரஞ்சிதம் எதனையெடுத்து வாசித்துக்கொண்டிருந்தாள். அவ்வாசிப்பில் தன்னை முழுமையாக மூழ்கடிக்க வைத்து வாசித்துக்கொண்டிருந்தாள். அப்படியெதைத்தான் அவள் இவ்விதம் வாசித்துக்கொண்டிருக்கின்றாள் என்பதை அறியும் ஆவல் மேலிட்டது. மேலிட்ட ஆவலுடன் அவளை நெருங்கி அவள் வாசித்துக்கொண்டிருந்த நூலைப் பார்த்தேன். உண்மையில் அது நூலல்ல. ஒரு குறிப்பேடு. அது என் குறிப்பேடுகளிலொன்று. அவ்வப்போது என் எண்ணங்களை எழுத்துகளாக அக்குறிப்பேட்டில் பதிவு செய்வது என் பொழுது போக்குகளிலொன்று. கவிதைகளாக, கட்டுரைகளாக எனப் பல் வடிவங்களில் அவை இருக்கும். அக்குறிப்பேடுகளிலொன்றினைத்தான் அவளெடுத்து வாசித்துக்கொண்டிருந்தாள்.

"கண்ணம்மா, ஒருத்தரின் குறிப்பேட்டை அவரது அனுமதியின்றி இன்னொருவர் வாசிப்பது தவறில்லையா?"

"கண்ணா, என் கண்ணனின் குறிப்பேட்டை நான் வாசிக்காமல் வேறு யார் வாசிப்பது? உன் கண்ணம்மா வாசிப்பதில் தவறேதுமில்லை. பேசாமல் மனத்தைக் குழப்பிக்கொள்ளாதே கண்ணா."

சிறிது நேரம் வாசித்துவிட்டுக் கூறினாள்:

"கண்ணா இவையெல்லாம் உன் 'டீன் ஏஜ்' பருவத்தில் எழுதியவை. ஒவ்வொரு கவிதைக்கும், கட்டுரைக்கும் மேல் எழுதின திகதி, மாதம், ஆண்டைக் குறிப்பிட்டிருக்கிறாய்."

"உண்மைதான் கண்ணம்மா. அவ்வப்போது என் சிந்தையிலேற்பட்ட உணர்வுகளை வடிப்பதற்காக எழுதியவை இவை. உண்மையில் என் எண்ணங்களின் வடிகால்கள் இவை. இவ்வடிவால்கள் இல்லாவிட்டால் அவை என் நெஞ்சைப் போட்டு வாட்டு வதக்கியெடுத்திருக்கும்."

"கண்ணா, உன் குறிப்புகளை வாசிக்கையில் உண்மையில் எனக்கு ஆச்சரியமாகத்தானிருக்கறது."

"கண்ணம்மா, அப்படி ஆச்சரியத்தைத் தருவதற்கு அப்படியென்ன இருக்கு அவற்றில். ஒரு சாதாரண 'டீன் ஏஜ்' இளைஞனின் எண்ணங்கள் அவை."

"கண்ணா, நீ அந்த வயதிலேயே இருப்பு பற்றிச் சிந்தித்திருக்கிறாய். சமூக, அரசியல் நிகழ்வுகள் பற்றி ஆழமாகச் சிந்தித்திருக்கிறாய். மனித உணர்வுகள் பற்றியெல்லாம் சிந்தித்திருக்கிறாய். அக உலகத்து, புற உலகத்துத் தளைகள் பற்றிச் சிந்தித்திருக்கிறாய்."

நான் மௌனமாக அவள கூறுவதைக்கேட்டுக்கொண்டிருந்தேன். அவளே தொடர்ந்தாள்:

"கண்ணா, உன் சிந்தனைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஏனென்றால் உன்னைப்போல் தான் நானும் வாசிப்பில், சிந்திப்பதில், இயற்கையைச் சுகிப்பதில், இருப்பின் மூலம் பற்றிய தேடலில் மூழ்கிக்கிடப்பதில் என்னை மறப்பவள். ஈடுபத்துபவள்."

"அதனால்தான் கண்ணம்மா, எனக்கும் உன்னைப் பிடித்திருக்கின்றது. நம்மை இணைத்த இயற்கை அன்னைக்குத்தான் நன்றி கூற வேண்டும்."

"கண்ணா, உன் குறிப்பேட்டில் 'சமர்ப்பணமொன்று 'என்றொரு கவிதை எழுதியிருக்கிறாய். அந்தக் கவிதையை வாசித்தபோது நீ என்னைப்பற்றியே எழுதியிருப்பது போல் தெரிகிறது. உண்மையா கண்ணா?"

"கண்ணம்மா, அது நூற்றுக்கு நூறு உண்மையேதான். என் பதின்ம வயதுகளில் நான் உன்னைப்பார்த்து உருகத்தொடங்கியிருந்த காலத்தில் எழுதியது. வீதிகளில் ஒரப்பார்வைகளால் என்னைப்பார்த்து செல்லும் உன்னை என் இதயச் சிறைக்குள் பிடித்து அடைத்து வைத்திருந்த சமயம் எழுதியது."

"கண்ணா,   அன்று ஒயிலாகச் செல்கையில் , ஓரக்கண்ணால், சிறைப்பிடித்துச் சென்றாயே. அந்தப் பார்வையை, நான் உனக்குச் சொல்வதெல்லாம், சொல்ல முடிந்ததெல்லாம் இதனைத்தான். அந்தப் பார்வையைத் தப்பியோடிட ஒருபோதுமே விட்டிடாதே. உந்தன் இதயத்தில் ஆழ்ந்த அறையொன்றின் ஆழத்தே கொண்டுபோய்ச் சிறை வைத்திடு." என்னும் வரிகளை நானும் என் குறிப்பேட்டில் உன் ஞாபகமாக எழுதி வைத்திருந்தேன்."

"கண்ணம்மா, இந்தக் காதல் உணர்வு மானுட உணர்வுகளில் முதன்மையானது என்பேன். அதற்காக எப்பொழுதும் உனக்கு என் நன்றி இருக்கும். முதன் முதலில் என் நெஞ்சில் காதல் உணர்வுகளை விதைத்தவள் நீ. இன்றுவரை என்னுடன் தொடர்ந்து வருகிறாய். அது என் பாக்கியம்."

"கண்ணா, நீ சொல்வது மிகவும் சரியானதுதான். காதல் மனிதருக்கு முதலில் தன்னை மறந்து, இன்னொருவர் மீது , உறவினர் அல்லாத இன்னுமொருவர் மீது அன்பு வைக்கும் அனுபவத்தைத் தருகின்றது. அது அற்புதமானதோர் உணர்வு. காதல் வெற்றியடையலாம். தோல்வியடையலாம். அது முக்கியமில்லை. ஆனால் அந்த உணர்வு முக்கியம். அந்த உணர்வு மனிதரின் வாழ்க்கையின் வளர்ச்சிப் படிக்கட்டுகளில் முக்கியமான ஒன்று. தவிர்க்கப்படக் கூடாத ஒன்று."

"கண்ணம்மா, நீ காதலைப்பற்றிக் கூறுவது சரியானதுதான். காதல் எழுத்தாளர் பலருக்கு எழுதும் உத்வேகத்தைத் தந்திருக்கின்றது. இன்பத்தைத் தந்திருக்கின்றது."

"இன்றுள்ள தலைமுறையைச் சேர்ந்த பலர் காதல் என்று கருதுவது உண்மையில் காதலே அல்ல கண்ணா"

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய் கண்ணம்மா?"

"உண்மைக்காதலென்றால், காதலனோ காதலியோ அக்காதல் ஏதோ ஒரு காரணத்தால் தோற்றவுடன் ஆத்திரப்பட்டுச் செயற்பட மாட்டார்கள். தன் காதலி தனக்குக் கிடைக்கவில்லையென்றவுடன் அவள் முகத்தில் அசிட் ஊத்துவது போன்ற செய்திகளைப் பத்திரிகைகளில் அன்றாடம் படிக்கிறோம். இல்லையா கண்ணா?"

"ஓம் கண்ணம்மா"

"கண்ணா, அந்தக் காதல் மட்டும் உண்மையானதாகவிருந்திருந்தால் அவன் அவள் மேல்

இவ்விதம் ஆத்திரப்பட்டு செயற்பட்டிருக்க மாட்டான். அவள் எங்கிருந்தாலும் மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமென்றுதான் நினைத்திருப்பான். அதனால்தான் சொல்லுகிறேன் பெரும்பாலானவர்கள் பருவக்கிளர்ச்சிகளை, காமக் கிளர்ச்சிகளை உண்மைக்காதலாக எண்ணி விடுகின்றார்கள். இது என் கருத்து கண்ணா."

"உன் குறிப்பேட்டுக் கவிதைகளில் எனக்குப் பிடித்த இன்னு,மொரு கவிதை.. நீ வேற்றுலக உயிரினமொன்றுக்கு எழுதிய கவிதை கண்ணா."

அவள் இவ்விதம் கூறியது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

"கண்ணம்மா, அக்கவிதை பற்றி நீ என்ன நினைக்கிறாய். வேற்றுலக உயிர்கள் இருப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளனவா? அவற்றை நீ நம்புகின்றாயா?"

"நான் நம்புவது இருக்கட்டும். நீ நம்புகின்றாயா கண்ணா?"

"நிச்சயமாகக் கண்ணம்மா, நிச்சயமாக நான் நம்புகின்றேண்."

'நிச்சயமாக.."

'நிச்சயமாகவே நம்புகின்றேன். ."

'அதெப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுகிறாய் கண்ணா?"

'ஏனென்றால்... முக்கிய காரணமாக நான் இதனைக் கூறுவேன். நீண்ட காலமாக மனிதர் பூமியே இப்பிரபஞ்சத்தின் நடுவில் இருப்பதாகக் கருதினார்கள். பின்னெரே பூமி சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களில் ஒன்று என்பதைக் கண்டு பிடித்தார்கள். பின்னரே சூரியன் இப்பிரபஞ்சத்திலுள்ள பில்லியன் கணகான சுடர்களில் ஒரு சுடர். அதுவும் அற்பத்தனமான, மிகச்சாதாரணமான சுடர்களில் ஒனறு என்பதைக் கண்டுபிடித்தார்கள். இந்நிலையில் இப்பிரபஞ்சத்திலிருக்கும் மிகச்சாதாரணமான சுடர்களில் ஒன்றான சூரியனைச் சுற்றி மிகச்சாதாரணமான கிரங்களில் ஒன்றான பூமி சுற்றுகிறது,'

இதற்குச் சிறிது நேரம் மௌனமாகவிருந்தாள் மனோரஞ்சிதம். நானே மீண்டும் தொடர்ந்தேன்:

"இந்த மாபெரும் பிரபஞ்சத்தைப்போல் மேலும் பல பிரபஞ்சங்கள் இருப்பதாகக் கூட ஆறிவியல் அறிஞர்கள் சந்தேகிக்கின்றார்கள். அவை கூட பில்லியன் கணக்கில் இருக்கலாமென்று கூட அவர்கள் கருதுகின்றார்கள்."

இதைக் கேட்டதும் மனோரஞ்சிதம் "நினைக்கவே பிரமிப்பாகவிருக்கிறது கண்ணா. இப்பிரபஞ்சதம் தான் எவ்வளவு பெரியது. நினைத்துணர்வதற்கே முடியாமலிருக்கிறது கண்ணா."

"மிகச்சாதாரணச் சுடரொன்றின் மிகச்சாதாரணக் கிரகமொன்றில் நாம் வாழ்வுதற்கான சாத்தியங்கள் இருக்குமென்றால், என்னைப்பொறுத்தவரையில் வேறு கிரகங்களிலும் உயிரினங்கள் இருப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் கண்ணா."

"கண்ணம்மா, நீ கூறுவது மிகவும் சரியானதுதான். மிகச்சாதாரணக் கிரகமொன்றில் நாம் இருப்பதற்கான சாத்தியங்கள் இருக்கிறதென்றால் விரிந்து , பரந்து கிடக்கும்

இப்பிரமாண்டமான புதிர்கள் நிறைந்த இப்பிரபஞ்சத்தில் நம்மைப் போல், நம்மிலும் மேலான அல்லது கீழான நிலையில் உயிர்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்பதை நூற்றுக்கு நூறு வீதம் நம்புகின்றேன் கண்ணம்மா"

"கண்ணா, எனக்கொரு சந்தேகம்?"

"எனன கண்ணம்மா? அப்படியென்ன சந்தேகம்?"

"வேற்றுக்கிரகவாசிகளும் நம்மைப்போலவா இருப்பார்கள் கண்ணா?"

"கண்ணம்மா, மிகச்சிறந்ததொரு கேள்வியைக் கேட்டிருக்கின்றாய்?"

"சாதாரணமாகத்தான் கேட்டேன் கண்ணா. இதில் அப்படியென்ன சிறப்பை நீ கண்டாய்?"

"இப்பிரபஞ்சத்தில் உயிரினங்கள் பல்வேறு வகைகளில், வடிவங்களில், பரிமாணங்களில் இருக்கக்கூடும். எம்மைப்போல நீள, அகல, உயர வெளிப்பரிமாணங்களும், காலப்பரிமாணமும் இவற்றுடன் மேலும் பல பரிமாணங்களை உள்ளடக்கி அவை இருக்கலாம். சில வேளைகளில் வேறு வகையான பரிமாணங்களில் அவை இருக்கக் கூடும். அவ்விதம் சாத்தியம் இருக்கும் பட்சத்தில் அவை இப்பொழுது எமக்கருகில் அவற்றின் பரிமாணங்களில் கூட இருக்கக் கூடும். எம்முலகில் உயிரினங்கள் கார்பனை அடிப்படையாகக் கொண்டவை. அவ்வுயிர்கள் வேறு அணுக்களை அடிப்படையாகக்கொண்டிருக்கலாம். எம்மைப்போல் அவை வாழ்வதற்கு பிராணவாயுவில் தங்கியியிருக்காமல் வாழும் தன்மை மிக்க உயிர்களாகக்கூட இருக்கலாம் கண்ணம்மா."

"கண்ணா, நீ எவ்வளவு தூரம் சிந்திக்கின்றாய். நினைக்கப் பெருமையாயிருக்கிறதடா."

இவ்விதம் பிரமிப்புடன் கூறினாள் மனோரஞ்சிதம்.

"இவ்விதமாக மனோரஞ்சிதத்துடனான, என் கண்ணம்மாவுடனான உரையாடல் தொடர்ந்தது. அவள் என் குறிப்பேட்டுக் கவிதைகளை, எழுத்துகளைப் பற்றிய கருத்துகளைத் தெரிவித்தாள். அவை பற்றிய தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டாள்.

இந்தப் பிரபஞ்சம், இதில் எம் இருப்பு இவை பற்றிய சிந்தனைகள், நூல்கள் எப்பொழுதுமே எனக்குப் பெரு நாட்டமுள்ள விடயங்கள். இவை பற்றிச் சிந்திப்பதென்றால், வாசிப்பதென்றால், தர்க்கிப்பதென்றால், எழுதுவதென்றால் எனக்கு அவற்றில் பெரு நாட்டமுண்டு. இப்புதிர்கள் நிறைந்த உலகில் நம்மைச் சுற்றி விரிந்து , எழில் கொட்டிக்கிடக்கும் இயற்கையன்னையின் பெரு வனப்பு என்னை எப்பொழுதும் மெய்ம்மறக்கச் செய்யுமொரு விடயம். இவற்றில் என்னை மூழ்க வைத்து மெய்ம்மறந்து கிடப்பதில் என்னை எப்போதுமே மறந்து விடுவேன்.

நவீன விக்கிரமாதித்தனின் குறிப்பேட்டுக் கவிதைகள் சில..

சமர்ப்பணமொன்று!

அன்று ஒயிலாகச் செல்கையில் , ஓரக்கண்ணால்
சிறைப்பிடித்துச் சென்றாயே. அந்தப் பார்வையை.

நான் உனக்குச் சொல்வதெல்லாம்,
சொல்ல முடிந்ததெல்லாம் இதனைத்தான்.
அந்தப் பார்வையைத் தப்பியோடிட ஒருபோதுமே
விட்டிடாதே. உந்தன் இதயத்தில்
ஆழ்ந்த அறையொன்றின் ஆழத்தே கொண்டுபோய்ச்
சிறை வைத்திடு.
ஏனெனில் சோகமுகிலகள் படர்கையில்,
பாதையில் இருட்டு செறிகையில்,
வாழ்வே ஒரு கேள்விக் குறியாகி,
இதயம் இரணமாகிச் செல்கையில்
அன்பே!
உன்னிதயத்தின் உற்றதோழனாக, தோழியாக
இருக்கப் போவது அது ஒன்றேதான்.
அதனால்தான் சொல்கிறேன். உன்னிதயத்தின்
ஆழத்தே அந்தப் பார்வைத் துண்டத்தைச்
சிறைப்பிடித்து வைத்திடு.
பாலைகளின் பசுமையென,
கோடைகளில் வசந்தமென,
அன்பே! உன் வாழ்வில், நெஞ்சிற்கு
இதமான ஸ்பரிசத்தைத் தந்திடப்
போவது அது ஒன்றுதான்.
உனக்காக என்னால்
வானத்தை வில்லாக வளைக்கவோ அல்லது
பூமியைப் பந்தாகவோ மாற்றமுடியாது.
ஆனால் அந்த உனது ஏங்குமிதயத்தின்
துடிப்பலைகளை இனங்கண்டிட முடியும்.
அவற்றை நெஞ்சினொரு கோடியில் வைத்து
அபிஷேகம் செயதிட முடியும்.
புரிகிறதாடீ! புரிந்தால் கவலையை விடு.
உன் பாதையில் இன்பப் பூக்கள்
பூத்துச் சொரிவதாக.

தனி நட்சத்திரம்

நீண்டு, பரந்து , விரிந்து கிடக்கும்
மூண்டிருக்கும் பேரமைதியில் மூழ்கி,
ஒளி ஆண்டுகள் பல கடந்து
நிற்குமொரு
தனி நட்சத்திரம்
அது நான்.
வானத்தினின்று வழிதப்பி
வந்து வீழ்ந்தேனோ?
மனித கானகத்தில் வந்து
கட்டுண்டு கிடந்தேனோ?
பிரபஞ்சத்து அமைதிகளின் ஆழத்தில்
போயடங்கி விடும் மாயைக்குள்
ஏன் வந்து பிறந்தேனோ?
என் நிம்மதியைத் துறந்தேனோ?
ஒரு நாள்

அடங்கிவிடும் இருப்புக்குள்
கால்
முடங்கிக் கிடக்கின்றேன்.
தொடங்கி விட்ட பயணத்தின்
முடிவை நாடி நடக்கின்றேன்.

அத்தியாயம் பதினேழு - நடுக்காட்டில் வழிதப்பிய நாயகன்!

"கண்ணம்மா, எதற்காக இங்கு வந்து பிறந்தோம்?" திடீரென நான் கேட்கவே மனோரஞ்சிதம் சிறிது திடுக்கிட்டுப் போனாள்.

"என்ன கண்ணா? உனக்கு என்ன நடந்தது? ஏனிந்தக் கேள்வி? அதுவும் இந்தச் சமயத்தில்" என்று கேட்கவும் செய்தாள். அத்துடன் என் தோள்களைப் பிடித்துக் குலுக்கினாள்.

"கண்ணம்மா, எனக்கு அடிக்கடி வரும் கேள்விதான். இதிலொன்றும் ஆச்சரியப்படுவதிற்கில்லையே. நீ இவ்விதம் திடுக்கிடுவதுதான் வியப்பைத் தருகிறதடீ"

"கண்ணா, சில விடயங்களில் கேள்வி கேட்கக் கூடாது. இருப்பின் இரகசியமும் அவற்றிலொன்று"

'கண்ணம்மா, எனக்கு அதில் உடன்பாடில்லை. கேள்வி கேட்பது பகுத்தறிவு படைத்த மனிதரின் பிரத்தியேக உரிமை. எப்பொழுதும் பாவிக்க வேண்டிய உரிமை. இருப்பிலொரு தெளிவினை அடைதற்கு இவ்விதமான கேள்விகள் அவசியமில்லையா கண்ணம்மா?"

"கண்ணா, என்னைப்பொறுத்தவரையில் அவசியமில்லை. ஏன் இவ்விதம் நம் இருப்பு இருக்கிறது? எதற்காக வந்து பிறந்தோம்? இருப்பில் அர்த்தமுண்டா? இவை போன்றா கேள்விகளுக்கு ஒருபோதும் சரியான விடைகள் கிடைக்கப்போவதில்லை. ஏனென்றால் நாம் படைக்கப்பட்டுள்ள , உருவான விதம் அப்படியிருக்கிறது கண்ணா? எப்படி எறும்பொன்றால் எம்மைப் புரிந்துகொள்ள முடியாதோ அதுபோல்தான் எம் நிலையும்.எமக்கு மேலான நிலையிலுள்ள பலவற்றைப் புரிந்துகொள்ளும் நிலையில் நாமில்லை. கிடைத்ததை ஏற்றுக்கொண்டு, இன்று புதிதாய்ப் பிறந்தோமென்று எண்ணி, நடந்ததைப்பற்றிச் சிந்தனையை நீக்கி , இருப்பை எதிர்கொள்வதுதான் நல்லதென்பேன் கண்ணா."

"கண்ணம்மா, நீ சொல்வது ஒருவிதத்தில் சரிதான் என்றாலும் என்னால் அப்படியெல்லாம் இருந்து விடமுடியாது. எதற்காக எமக்குப் பகுத்தறியும் சிந்தனையும் தரப்பட்டிருக்கிறது. அதனைப் பாவிப்பதற்குத்தானே. இருப்பில் அர்த்தமிருக்கோ, இல்லையோ அது பற்றிச் சிந்திப்பதிலிருந்தும், அது பற்றிய தேடலிலிருந்தும் என்னை யாரும் தடுத்துவிட முடியாது. நானே என்னைத் தடுக்க மாட்டேன் கண்ணம்மா."

"அப்படித்தான் இருப்பேன் என்று நீ அடம் பிடித்தால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது கண்ணா. நீ அப்படியே இருப்பதில் எனக்கும் ஆட்சேபணையில்லை. ஆனால் நான் இப்படித்தான் இருப்பேன் கண்ணா. உனக்கு ஆட்சேபணையேதுமில்லையே"

இவ்விதம் கூறிவிட்டு மனோரஞ்சித, வழக்கம்போல் தனக்கேயுரிய குறும்புத்தனத்துடன் கண்களைச் சிமிட்டினாள்.

என் சிந்தனையோ விரிந்துகொண்டிருந்தது. எதற்காக இவ்விருப்பு? இவ்வுலகம்? இப்பிரபஞ்சம்? எதற்காக? நம்மைச் சுற்றிக்கிடக்கும் உயிர்களுக்கு ஒவ்வொரு நாளும் புது நாள். உணவு தேடி, உண்டு , களித்து, கூடிக்குலாவி, இனப்பெருக்கி இருந்துவிடுவதுடன் அவற்றின் இருப்பு முடிந்து விடுகின்றது. நாமோ? நாமே உருவாக்கிய சமுதாயச் சட்டதிட்டங்களுக்குள் சிக்கி, அவற்றின் தாக்கங்களில்ருந்து தப்பிப்பிழைத்தலுக்காகப்

போராடுவதிலேயே வாழ்நாளைக் கழித்து விடுகின்றோம். இசமுதாய அமைப்பின் தாக்கங்களே இனம், மதம், மொழி, வர்ணம் எனப்பல முரண்களை ஏற்படுத்தி விட்டன. போர்களால் நம்முலகை நிறைத்து விட்டன. சாதாரணக் குற்றச்செயல்களிலிருந்து பெருங்குற்றங்கள் வரை நிகழ்வதற்கு அடிப்படைக்காரணங்களாக இருக்கின்றன. ஒரு சில உளவியல் காரணங்கள் காரணமாக ஏற்பட்டாலும், 99 வீதமானவை நாம் உருவாக்கிய இச்சமுதாய அமைப்புகள் மனிதர்கள் மேல் ஏற்படுத்தும் தாக்கங்களின் விளைவுகளே.

"என்ன கண்ணா, என்ன மீண்டும் சிந்தனையில் மூழ்கிவிட்டாய்?"

"கண்ணம்மா, என்னால் நீ சொல்வதுபோல் ஒருபோதுமே இருந்துவிட முடியாது. இருக்கும்வரை என் தேடலும் ஓயாது."

"கண்ணா, ஒருவிதத்தில் சிந்திப்பதிலுமோர் இன்பம் இருக்கத்தான் செய்கிறது இல்லையா?"

"சரியாகச் சொன்னாய் கண்ணம்மா. சிந்திப்பதிலுள்ள இன்பம் என் சிந்தையை எப்போதும் மயக்கும் பேரின்பமடி. இயற்கையின் பேரழகில் எமை மறந்து அது பற்றிச் சிந்திக்கின்றோம். அச்சிந்திப்பில் இன்பம் துய்க்கின்றோம். வாசிப்பில் அதனால் விளையும் சிந்திப்பில் எமை மறக்கின்றோம். இன்பம் அடைக்கின்றோம். இறுதியில் இருப்பின் இறுதிவரை இன்பம் அடைதலொன்றையே நாடி எம் அனைத்துச் செயல்களும் இருந்து விடுகின்றன. இல்லையா கண்ணம்மா?"

"கண்ணா நீயொரு தத்துவ வித்தகன். எவ்வளவு இலகுவாக இருப்பின் தன்மையைக் கூறிவிட்டாய். உண்மையில் இருக்கும்வரை நாம் அனைவரும் செய்யும் செயல்கள் எல்லாமே ஏதோ ஒரு வகை இன்பத்தை நாடுபவையாகவே இருக்கின்றன. ஆழ்ந்து பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. இல்லையா கண்ணா? பல்வகையான சிற்றின்பங்களுக்குள் மூழ்கி அவற்றை நாடிச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் நாம் இறுதிவரை அச்சிற்பங்களின் தேவைகள் அற்ற நிலையில் பேரின்பத்தை நாடிச் சிந்திக்க ஆரம்பித்து விடுகின்றோம். இல்லையா கண்ணா?"

"கண்ணம்மா நீயொரு தத்துவ வித்தகி' என்றேன். 'என்ன பந்தை என் பக்கமே திருப்பி விடுகின்றாயா கண்ணா?" என்றவளை வாரியிழுத்து அணைத்துக்கொள்கின்றேன்.

"என்ன சிற்றின்பமா கண்ணா" என்று குறும்பாக மீண்டும் கண்களைச் சிமிட்டியவளைப்பார்த்துக் கூறுகின்றேன் "இல்லை கண்ணம்மா. நீ என் பேரின்பம்" என்று.

காலக்கடலின் குமிழியென அர்த்தமற்ற
குறுவாழ்வில்
அவலங்களே அனர்த்தங்களாயவிந்திட
அர்த்தமற்றதொரு வாழ்வு.
'பொய்மையின் நிழல்படர்ந்து'
புழுங்குமுலகிலெல்லாமே நாசம்;
படுநாசம்; அழிவு; அழிவுதான்.
காரணமற்ற வாழ்வின் காரணம்தான்
யாதோ?
வெளியே, வெற்றிடமே, விரிகதிரே!
விடை பகின்றிடாயோ?

விடை பகின்றிடாயோ?
சலிப்பின் அலைக்கழிப்பில்
நலிந்திட்ட வுலகில்
வழிந்திடும் சோகங்களென்றுமே
தெளிந்திடாவோ?
அண்டச் சுடர்களே! அண்ரமீடாக்களே!
புதிரை அவிழ்ப்பீரோ? அன்றி,
முதிர வழி சமைப்பீரோ? கூறுவீர்.
நடுக்காட்டில் வழிதப்பிய நாயகன்
நானென்றால் சிரிக்காதீர்.
திக்குத் திசையோ புரியவில்லை.
திணறலினில் மூச்சு முட்டித்
தடுமாறினேனே.
என்றாலுமொரு விளக்கமெங்கோ
ஒளிந்துதானுள்ளது.
விளக்கிடுவேன்; விளக்கிடுவேன்; அவ்
விளக்கின் ஒளிதனிலே
வழிதனைக் கண்டிடுவேன்; அவ்
வழிதனைக் கண்டிடுவேன்.

அத்தியாயம் பதினெட்டு - தளைகள்! தளைகள்! தளைகள்!

"கண்ணம்மா, எத்தனை எத்தனை தளைகள். சுற்றியெங்கு பார்த்தாலும் தளைகள். உள்ளே தளைகள். வெளியேயும் தளைகள்."

என்ற என்னைப்பார்த்து ஒரு வித வியப்புடன் கேட்டாள் மனோரஞ்சிதம் "என்ன கண்ணா, தளைகளா? எந்தத் தளைகளைச் சொல்லுறாய்?"

"பொதுவாகக் கூறினேன் கண்ணம்மா, நாம் வாழும் சமுதாயத்தில் நிலவும் தளைகள்தாம் எத்தனை? எத்தனை?"

"கண்ணா நீ சொல்வதும் சரிதான். சமுதாயக் கட்டுப்பாடுகள், வர்க்கங்களின் பிரிவுகளால் பலம் வாய்ந்த வர்க்கங்களினால் செலுத்தப்படும் ஆதிக்கத் தளைகள், பால் ரீதியான கட்டுப்பாட்டுத் தளைகள், தீண்டாமைத் தளைகள், இன, மத, மொழி, தேசரீதியிலான கட்டுப்பாட்டுத் தளைகள், ..இத்தளைககளால் பிணைக்கப்பட்ட கைதிகள் நாங்கள் கண்ணா"

"கண்ணம்மா, இவையெல்லாம் புறத்தில் இருக்கும் தளைகள். இதேபோல் இவற்றின் தாக்கங்கள், மற்றும் மானுடப் படைப்பின் தன்மையால் அகத்தில் உருவான தளைகளாலும் பிணைக்கப்பட்டு இருக்கிறோம். இல்லையா கண்ணம்மா? இவ்வகையான தளைகள் அனைத்திலுமிருந்து விடுபடுவதன் மூலம்தான் மானுடருக்கு முழுமையான விடுதலை கிடைக்கும். ஒன்று புற விடுதலை. அடுத்தது அக விடுதலை. இல்லையா கண்ணம்மா?"

"கண்ணா, எனக்கொரு சந்தேகம்?."

"என்ன கண்ணம்மா?"

"பூரண மானுட விடுதலைக்கு முதலில் அகவிடுதலை பெற்றால் நல்லது இல்லையா?"

"கண்ணம்மா, இங்குதான் பிரச்சனையே இருக்கு"

"இதிலேன பிரச்சனை இருக்க முடியும் கண்ணா?"

"கண்ணம்மா, இங்கு புறத்திலுள்ள பிரச்சனைகள் எல்லாமே நாம் உருவாக்கியவை. மனிதர்களாகிய நாம் உருவாக்கியவை. இப்பிரச்சினை இருக்கும் மட்டும் எம்மால் சிந்தனையை எம் அகவிடுதலையை நோக்கிப் பூரணமாகத் திருப்பவே முடியாது. ஒரு சிலரால் திருப்ப முடிந்தாலும், பெரும்பான்மையான சாதாரண மக்களால் திருப்பவே முடியாது. அதனால்தான் முதலில் புறவிடுதலையை நோக்கி எம் கவனத்தைத் திருப்ப வேண்டும். உண்மையில் மார்க்சியம் இதனையே வலியுறுத்துகின்றது."

"கண்ணா, எனக்கென்னவோ இது நடைமுறைச்சாத்தியமில்லைபோல்தான் தெரிகிறது."

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய் கண்ணம்மா"

"உலகம் செல்வந்த நாடுகள் , வறிய நாடுகளென்று பிரிபட்டுக்கிடக்கின்றது. இந்நிலையில் வறிய நாடுகளின் வளங்கலைச் சுரண்டித்தான் செல்வந்த நாடுகள் தங்கள் நாட்டுத் தொழிலாளர்கள் தமக்கெதிராக எழுந்து விடாமல் அடக்கி வைத்திருக்கின்றன."

"கண்ணம்மா, நீ சொல்லுவது சரிதான். இவ்விதம் உலகம் வர்க்கரீதியாகப் பிளவுண்டுகிடக்கும் நிலையில் ,இப்பிளவினைத் தொடர்ந்தும் தக்க வைக்க ஆதிக்க சக்தியினர் உலக நாடுகளின் மத்தியில் தேசிய, இன, மத, மொழி, வர்ணப்பிளவுகள் இருப்பதை ஆதரிப்பார்கள். இப்பிளவு பட்டிருக்கும் உலகு செல்வந்த நாடுகளுக்கு பாதுகாப்பினைத் தருவதாக அந்நாடுகள் எண்ணுகின்றன. அதற்கேற்ப தம் நாட்டுப் பாதுகாப்புக் கொள்கைகளை வகுத்துக்கொள்கின்றன. இதனால் தான் மார்க்சியவாதிகள் உலகத்தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்று குரல் எழுப்புகின்றார்கள். உலகத்தொழிலாளர்கள் ஒன்றிணைந்து உருவாகும் சமூக, பொருளியல் மற்றும் அரசியல் மாற்றங்கள் மட்டுமே இறுதியில் பூரணமான மானுடரின் புற விடுதலையினைத் தரும். "

"கண்ணா, தனியுடமை இருக்கும் வரையில் இதற்குச் சாத்தியமிருப்பதாகத் தெரியவில்லையே"

'கண்ணம்மா, சரியாகச் சொன்னாய். அதனால்தான் கார்ல் மார்க்ஸ் பொதுவுடமைச் சமுதாய அமைப்பைத் தீர்வாக முன் வைத்தார்."

"கண்ணா, கேட்கவே எவ்வளவு நன்றாகவுள்ளது. தனியுடமை உணர்வுகளற்ற , பொதுவுடமைச் சமுதாய அமைப்புள்ள இப்பூவுலகில் அகவுணர்களைப்புரிந்து , அதன் விடுதலைக்காக வாழும் மனிதர்கள்.... நினைக்கவே எவ்வளவு மகிழ்ச்சியினைத் தருகிறது. எவ்வளவு இன்பம் மிக்க பூவுலகாக அவ்வுலகு இருக்கும்."

'கண்ணம்மா, அது பற்றிய நினைப்பே இவ்வளவு மகிழ்ச்சியைத் தருமென்றால், உண்மையில் நிகழ்ந்துவிட்டால் எப்படியிருக்கும். ஆனால்..."

"என்ன கண்ணா ஆனால்...?"

"ஏந்தப் பொதுவுடமை அமைப்பிலும் என் கண்ணம்மா மட்டும் என்றுமே என் தனியுடமை."

இதைக்கேட்டதும் மனோரஞ்சிதத்தின் முகத்தில் நாணமும், மகிழ்ச்சியும் படர்ந்த ரேகைகள் படர்ந்தன. அத்துடன் கூறினாள்:

"கண்ணா , என்றுமே நீயுமென் தனியுடமை."

இவ்விதம் கூறியவளை வழக்கம்போல் வாரியணைத்துக்கொண்டேன்.

தளைகள்! தளைகள்! தளைகள்!
எங்குமே, நானாபக்கமுமே,
சுற்றிப்படர்ந்திருக்கும்
தளைகள்! தளைகள்! தளைகள்!

சுயமாகப் பேசிட, சிந்தித்திட

உன்னையவை விடுவதில்லை.
நெஞ்சு நிமிர்த்தி நடந்திட
அவை சிறிதும் நெகிழ்ந்து
கொடுப்பதில்லை.

உள்ளும் , புறமும் நீ
உருவாக்கிய தளைகள்.
இன்றுனை இறுக்கி, நெருக்கி,
உறிஞ்சிக்கிடக்கையிலே
விழி! எழு! உடைத்தெறி!
உன் கால்களை,
உன் கைகளை,
உன் நெஞ்சினைப்
பிணைத்து நிற்கும் தளைகளை,
விலங்குகளை
உடைத்துத்தள்ளு! வேரறுத்துக்
கொல்லு!

அத்தியாயம் பத்தொன்பது - எங்கோ இருக்கும் கிரகவாசிக்கு ஒரு கடிதம்!

நள்ளிரவு. நகர் மெல்ல மெல்ல ஓசைகள் அடங்கித் துஞ்சத் தொடங்குகின்ற நேரம். சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தபடி அண்ணாந்து வானத்தை நோக்கியபடியிருக்கின்றேன். இருவர் ஒரே நேரத்தில் இலகுவாகச் சாய்ந்திருக்கும் வகையிலான அகன்ற சாய்வு நாற்காலி. அருகில் என்னுடன் ஒட்டி இணைந்தபடி, தன் தலையை என் வலது பக்கத்து மார்பில் சாய்த்தபடி , ஒருக்களித்து படுத்தபடி என்னுடன் அகன்ற ஆகாயத்தைப் பார்த்தபடி மெய்ம்மறந்திருக்கின்றாள் மனோரஞ்சிதம்.

விரிந்திருக்கும் இரவு வான் எப்பொழுதுமே என் மனத்தின் இனம்புரியாத இன்பக் கிளர்ச்சியைத்தருமொன்று. எண்ணப்பறவையைச் சிறகடித்துப் பறக்க வைக்குமொன்று. இரவு வானை இரசித்தபடி எவ்வளவு நேரமென்றாலும் என்னாலிருக்க முடியும். தெளிந்த வானில் நகரத்து ஒளி மாசினூடும், நூற்றுக்கணக்கில் நட்சத்திரங்களை என்னால் காண முடிந்தது. நட்சத்திரத்தோழியருடன் பவனி வரும் ஓர் இளவரசியாக முழுமதி விளங்கிக்கொண்டிருந்தாள். முகில்களற்ற தெளிந்த இரவு வானம் சிந்தைக்கு ஒத்தடம் தருவதுபோல் ஒருவிதத் தண்மை மிகுந்த உணர்வினைத் தருகின்றது.

விரிந்திருக்கும் வானில் கொட்டிக்கிடக்கும் சுடர்களிலொன்று இன்னுமொரு 'கலக்சியாக' அண்டமாகவிருக்கக் கூடும். அதன் மூலையிலுள்ள சுடரொன்றின் கிரகத்தில் என்னைப்போல் ஒருவன் அல்லது ஒருத்தி அல்லது ஒன்று விரிந்திருக்கும் ஆகாயத்தின் ஆழங்களைக் கண்டறிவதற்கான தேடலில் மூழ்கிக் கிடக்கக்கூடும். இவ்விதம் நினைக்கையிலேயே நெஞ்சில் இன்பம் பொங்கியது. அவ்வின்பம் வெளிப்பட வாய் விட்டு 'நண்பனே' என்றழைக்கின்றேன்.

"என்ன கண்ணா, யாரை அழைக்கின்றாய். அருகில் என்னைத்தவிர வேறு யாருமேயில்லையே?" என்று கூறியபடி என் தாடையைச் செல்லமாகத் தட்டினாள் மனோரஞ்சிதம்.

"கண்ணம்மா, நான் என் அண்டத்து நண்பனைப்பற்றி எண்ணினேன். அவனை அழைத்தேன்." என்றேன்.

"அண்டத்துச் சிநேகிதனா? இல்லை சிநேகிதியா?" என்று குறும்பு குரலில் தொனிக்கப் பதிலுக்குக் கேட்டாள் மனோரஞ்சிதம்.

"ஏன் கண்ணம்மா, சிநேகிதி ஒருத்தி எனக்கு இருக்கக் கூடாதா?" என்று பதிலுக்கு அவளைச் சீண்டினேன்.

"கண்ணா, உனக்கு என்னைத்தவிர சிநேகிதி வேறு எவளும் இருக்கக் கூடாது. என்னால் தாங்க முடியாது."

"கண்ணம்மா, நீயா இப்படிப் பேசுவது?"

"நான் பேசாமல் வேறு யார் பேசுவதாம் கண்ணா? அது சரி நான் பேசியதிலென்ன தவறு கண்ணா?"

"கண்ணம்மா, நீ நட்பையும், காதலையும் போட்டுக் குழப்பிக்கொள்கிறாயடி. நட்பு எத்தனை பேருடனும், எந்தப் பாலினருடனும் இருக்கலாம். ஆனால் காதல் காதலுக்குரியவரிடம் மட்டுமே இருகக் முடியும். காதலுக்குரியவர் சிறந்த நண்பராகவுமிருக்க முடியும். ஆனால் சிறந்த நண்பர் எல்லாரும் காதலர்களாக இருந்து விட முடியாது கண்ணம்மா. நீ என் காதலி கண்ணம்மா. நீ என் சிநேகிதி கண்ணம்மா."

இவ்விதம் நான் கூறவும் மனோரஞ்சிதத்தின் முகத்தில் நாணப்புன்னகை படம் விரித்தது. அத்துடன் பின்வருமாறு கூறவும் செய்தாள்:

"உன்னுடன் என்னால் பேசி வெல்ல முடியாது கண்ணா. எல்லாவற்றிலும் நீ மிகவும் தெளிவாக இருக்கிறாய். அதுசரி விடயத்துக்கு வருவோம் கண்ணா. நீ யாரை அழைத்தாய் கண்ணா?"

"கண்ணம்மா, என் சிந்தனைப்போக்குதான் உனக்குத்தெரியுமே. எப்பொழுதும் அண்டத்தை அளந்துகொண்டிருப்பவன் நான் என்பது நீ அறியாத ஒன்றல்லவே. என்னை எப்பொழுதுமே ஈர்க்குமொரு விடயம் அண்டத்து உயிர்கள் பற்றியது. அது பற்றிச் சிந்திப்பது. இவ்விதம் விரிந்திருக்கும் ஆகாயத்தைப் பார்த்து மெய்ம்மறந்து இருக்கையில் இவ்விதமான சிந்தனைகளால் நெஞ்சு நிறைந்து விடுகின்றது. இவ்விதம் நெஞ்சு நிறைந்து விடுகையில் சில வேளைகளில் வார்த்தைகள், சொற்களை என்னை மீறிப் பேசி விடுகின்றேனடி. அவ்விதமானதொரு தருணத்தில்தான் நண்பனே என்றேன்.நீ பிடித்துக்கொண்டு விட்டாய்."

"அது சரி கண்ணா, நீ கண்ணா என்றழைத்தாயே. அவனா, அவளா , அதுவா? அதைத்தான் நான் மிகவும் சாதாரணமாகக் கேட்க நினைத்தேன். ஆனால் உன் மீதான எனது அளவு கடந்த உரிமையுடன் கூடிய உறவு என்னைத் திசை திருப்பி விட்டது. இப்போது வழிக்கு வந்து விட்டேன் கண்ணா. சரி இப்போதாவது சொல். யார் அவன்? அவள்? அது?"

"கண்ணம்மா, ஏற்கனவே நாம் பல தடவைகள் இவ்விடயத்தில் உரையாடியிருக்கிறோம். நான் நிச்சயம் விரிந்திருக்கும் பேரண்டத்தில், இதைப்போல் பில்லியன் பில்லியன் கணக்கில் வேறு அண்டங்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றிலெல்லேம் எம்மையொத்த, அல்லது எமக்கும் மேலான, அல்லது கீழான நிலையில் உயிரினங்கள் இருக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை மிக்கவன். அப்படி இருக்க முடியாதென்றால் நாமிருப்பதும் இங்கு சாத்தியமில்லையல்லவா கண்ணம்மா."

"ஒரு தர்க்கத்துக்காகக் கேட்கின்றேன். நீயே பல தடவைகள் கூறியுள்ளதைப்போல் எம் புலன்களுக்கப்பால் பொருளுலகு இருப்பதை ஒருபோதுமே இருப்பதை நிரூபிக்க முடியாதல்லவா. அப்படிப்பார்த்தால் நாம் இருப்பது என்பது கூட உண்மையா என்று எனக்குத் தோன்றுவதுண்டு. ஏனென்றால் நாம் இருப்பதைக்கூட நாம் எம் புலன்களால்தாமே அறிகின்றோம். என்ன சொல்லுகிறாய் கண்ணா?"

"கண்ணம்மா , நீ என்னைக்கொண்டு என்னையே மடக்கி விட்டாயடி. இதனால்தான் நீ என் தோழி. என் காதலி. சரி இந்த விடயத்தில் 'காண்பதுவே உறுதி கண்டோம். காட்சி நித்தியமாம்' என்று பாடும் பாரதியின் வழி நடப்போம். ஒரு கதைக்கு அப்படியே எம் நிலைப்பாட்டையும் வைத்தால் மேலே தொடர்வதில் குழப்பமில்லையல்லவா கண்ணம்மா."

"சரி மேலே சொல்லு கண்ணா. அப்படியும் வைத்துக்கொள்ளலாம்தானே. பொருளும் சக்தியம் ஒன்றுதானே. அறிவியல் இவ்விதம்தானே கூறுகின்றது. நீயே பல தடவைகள்

சுட்டிக்காட்டியிருக்கிறாய் மறந்து விட்டாயா கண்ணா?"

"கண்ணம்மா, இந்தத் தெளிவுதான் முக்கியம்,. இந்தத் தெளிவுதான் மேலும் சிந்தனையைப்பெருக்கத் தேவையானது. சரி நீ கேட்ட விடயத்துக்கே வருகின்றேன். இவ்விதம் இரவு வானைப்பார்த்தபடி படுத்திருக்கையில் எனக்கு இளவயதில் படித்த 'ட்விங்கிள் ட்விங்கள் லிட்டில் ஸ்டார்' நேர்சரி றைம் நினைவுக்கு வருவதுண்டு. எனக்கு மிகவும் பிடித்த பாடலது. அது குழந்தைப்பாடல் மட்டுமல்ல வளர்ந்தவர்களுக்கும், இருப்பு பற்றிய சிந்தனைத் தேடல் மிக்கவர்களுக்கும் உரிய பாடலென்பது என் கருத்து."

"கண்ணா , இந்த விடயத்தில் எனக்கும் உன் கருத்தே. மனத்தில் சிந்தனைக் கிளர்ச்சியூட்டும் வரிகள். குறிப்பாக up above the world so high என்னும் வரியைக் கூறலாம். அதில்வரும் high உண்மையிலேயே எனக்குக் கிளர்ச்சியுட்டும் சொல் கண்ணா"

"கண்ணம்மா, அங்கே , உலகம் மிகவும் உயரத்தில் இருக்கிறது. அந்த உயரம் பல கால அடுக்குகளைக் கொண்டது. ஒரே நேரத்தில் பல்வேறு காலகட்டங்களை இங்கிருந்து காண்கின்றோம். அப்பொழுதெல்லாம் என் மனத்தில் அங்கு என்ன இருக்கும்? இருக்கிறது? என்னும் சிந்தனைகளே ஓடுவது வழக்கம். அப்பொழுதெலாம் நான் நினைப்பேன் - அங்கும் எம்மைப்போன்ற உயிரினமொன்று இவ்விதம், தான் வாழும் கிரகத்தில் நாம் அறிந்த தொழில் நுட்பங்களுடன் வாழுமா? அல்லது எம்மைவிட மேலான தொழில் நுட்பத்துடன் வாழும் ஆற்றல் மிக்கவையா? இவை போன்ற சிந்தனைகள் நிரம்பி வழியும் கண்ணம்மா."

"கண்ணா, இந்த விடயத்தைப்பற்றி விடிய விடிய கதைத்துக்கொண்டேயிருக்கலாம். ஆனால் எனக்குத்தூக்கம் வருகிறது கண்ணா, நீ கொஞ்ச நேரம் சிந்தனையைத் தொடரு கண்ணா?"

இவ்விதம் கூறிய மனோரஞ்சிதம் என்னை அணைத்தபடி , மார்பில் சாய்ந்தபடி வெகு விரைவிலேயே தூக்கத்திலாந்துபோனாள். நெஞ்சுக்கினியவள் நெஞ்சினில் தூங்கிக்கொண்டிருக்கையில் என் நெஞ்சிலோ சிந்தனைகள் மேலும் மேலும் சிறகடித்திப் பறந்துகொண்டிருந்தன.

எங்கோ இருக்கும் கிரகவாசிக்கு...

முகமில்லாத மனிதர்களிற்காகவும்
விழியில்லாத உருவங்களிற்காகவும்
கவிதைத் தூது விடுப்பர். ஆயின், யான்
அவர்களிற்கல்ல நண்பா! உனக்குத்தான்
அனுப்புகின்றேனிச் செய்திதனை.
உன்னை நான் பார்த்ததில்லை.
பார்க்கப் போவதுமில்லை.
உனக்கும் எனக்குமிடையிலோ
ஒளியாண்டுச் தடைச்சுவர்கள்.
'காலத்தின் மாய' வேடங்கள்.
ஆயின் நான் மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
மனந்தளர்ந்திடவில்லை.
நிச்சயமாய் நானுனை நம்புகின்றேன்.
எங்கேனுமோரிடத்தில்

நீ நிச்சயம் வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய்.
ஆம்!
வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றாய்.
காடுகளில் , குகைகளில் அல்லது
கூதற்குளிர்படர்வரைகளில்
உன்
காலத்தின் முதற்படியில்...
அல்லது
விண்வெளியில் கொக்கரித்து
வீங்கிக் கிடக்கும் மமதையிலே..
சிலவேளை
போர்களினாலுந்தன் பூதலந்தனைப்
பொசுக்கிச் சிதைத்தபடி
அறியாமையில்...
ஒருவேளை
அதியுயர் மனத்தன்மை பெற்றதொரு
அற்புதவுயிராய்...
ஆயினும் உன்னிடம் நான்
அறிய விரும்புவது ஒன்றினையே..
'புரியாத புதிர்தனைப் புரிந்தவனாய்
நீயிருப்பின்
பகர்ந்திடு.
காலத்தை நீ வென்றனையோ?
அவ்வாறெனின்
அதையெனக்குப் பகர்ந்திடு.
பின் நீயே
நம்மவரின் கடவுள்.
காலத்தை கடந்தவர் தேவர், கடவுளென்பர்
நம்மவர்.
இன்னுமொன்று கேட்பேன்.
இயலுமென்றா லியம்பிடு.
இவ்வாழ்வில் அர்த்தமுண்டோ?
இதனை நீ அறிந்தனையோ?
உண்டெனில் அர்த்தம் தானென்ன?
சிலர்
அர்த்தமற்ற வாழ்வென்பர்.
யான்
அவ்வாறல்லன்.
அர்த்தம்தனை நம்புபவன். ஆயினும்
அதனையிதுவரை அறிந்திலேன்.
அதனை நீ அறிந்திடின்
அதனையிங்கு விளக்கிடு.
அது போதும்!
அது போதும்

அத்தியாயம் இருபது - கண்ணம்மாவுக்கு நான் சூடிய சொல்மாலை!

"கண்ணம்மா"

"என்ன கண்ணா?" என்றவாறு என்னைத் தன் ஓரக் கண்களால் ஏறிட்டுப் பார்த்தாள் மனோரஞ்சிதம்.

"இது நானுனக்குச் சமர்ப்பிக்கும் சொல் மாலை."

"என்ன கண்ணா இது. சொல் மாலையா? எனக்கா? ஏன்? ஏன் இப்போ?"

"கண்ணம்மா, இப்போ இல்லையென்றால் எப்போ? அதுதான் இப்போ."

"சரி,சரி கண்ணா. அதுதான் உன் விருப்பமென்றால் தாராளமாகச் சமர்ப்பி உன் சொல் மாலையை. மாலையா எங்கே சமர்ப்பிக்கப்போகிறாய்? இதுதான் மலர் மாலை அல்லவே கண்ணா. அது சரி ஒரு கேள்வி."

"கேள்வியா? என்ன கேள்வி கண்ணம்மா. கேள்வி இல்லாமல் இருப்பில் எதுவுமில்லை. கேளு கண்ணம்மா."

"கண்ணா, இவ்விதமான சமர்ப்பணத்துக்கு நான் அப்படியென்ன செய்து விட்டேன். "

"கண்ணம்மா, நீ செய்தவற்றைப் பட்டியலிடுவேன். கேள். "

"அப்படியா? சரி. சரி. பட்டியலிடு என் கண்ணா. பார்ப்போம் உன் பட்டியலை"

வழக்கம்போம் அவள் குரலில் தொனித்த குறும்பு கலந்த தொனியை அவதானித்தேன்.

நான் தொடர்ந்தேன்:

"முதன் முதலாக என் குடும்பத்தவர் அல்லாத ஒருவரிடம் நான் அன்பு கொண்டது உன்னிடம்தான். அதற்காக உனக்கு நிச்சயம் நன்றி கூற வேண்டும். பட்டியலில் முதலிடத்தில் இருப்பது இதுதான் கண்ணம்மா."

"ம்ம்ம்.. மேலே சொல்லு" கண்ணைச் சிமிட்டினாள் மனோரஞ்சிதம்.

"எந்த விதப் பிரதியுபகாரமும் இல்லாத அன்பினை நீ வழங்கினாய். அது உண்மையிலேயே மகத்தானதொரு விடயமாகத்தான் எனகுத் தோன்றுகின்றது கண்ணம்மா. அது பட்டியலில் இடம் பெறும் இரண்டாவது விடயம் கண்ணம்மா."

"உன்மேல் நான் வைத்திருந்த அன்பு , தூய்மையான அன்பு, தூய்மையான காதலாக மாறியது. காதலென்றால் என்ன, அதன் விளைவுகள் எவை, இவற்றையெல்லாம் என் வாழ்வில் விளக்கியது நீதான். உன் மேல் நான் வைத்திருக்கும் காதல்தான்.அதறகாக

நான் உனக்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்."

"அடுத்தது.. இன்னும் மேலே ஏதாவது இருக்குதா கண்ணா."

"என்னைப்போல் நீயும் இருப்பு பற்றிய தேடல் மிக்கவள். சிந்தனைகள் வேறானவையாகவிருந்தபோதும் தேடலில் ஒன்றிணைந்தவர்கள். இவ்விடயத்தில் என்னுடன் தர்க்கபூர்வமாக விவாதிப்பவள். அதவும் பட்டியலிலிடப்பட வேண்டியதொன்று."

"கண்ணா , நீ கூறுவதைக் கேட்கையில் தித்திக்கிறதே."

"தித்திக்கிறதா? அதெப்படி கண்ணம்மா. தித்திப்பதற்குப் பட்டியலென்ன உணவா" இவ்விதம் கேலியாகக் கேட்டேன். அதற்கு அவள் என்ன பதிலைக்கூறப்போகின்றாளோவென்று ஆர்வத்துடன் நோக்கினேன்.

அதற்கு மனோரஞ்சிதம் தனக்கேயுரிய சாமர்த்தியத்துடன் " ஏன் கண்ணா, செவிநுகர் கனிகளைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா. அதுபோல்தான் இதுவும்." என்றாள்.

"என் கண்ணம்மாவின் சாமர்த்தியம் வேறு யாருக்கும் வராது." என்று அவள் சாமர்த்தியத்தை மெச்சினேன்.

கண்ணம்மாவுக்கு நான் சூடிய சொல்மாலை!

கண்ணம்மா, இந்தச் சொல் மாலையை நானுக்குச்
சமர்ப்பிக்கின்றேன்.
சிலவற்றைச் சொல்லாமலிருக்க முடிவதில்லை.
இதுவும் அப்படிப்பட்டதொன்றுதான்.
இதயத்தின் கோடியினில் கொலுவாக்கிடவேண்டிய
நினைவு. உறவு.
உந்தன் சின்னஞ்சிறிய ஆனால் எளிய, இனிமையான
அதிகாலையையொத்த உலகில் பாடல்களை, வசந்தங்களை,
அருவிகளை, நீரூற்றுகளை,
நீ வார்த்தைகளால் சொல்லிவிடவேண்டிய தேவையென்ற
ஒன்று இங்கிருந்ததில்லை.
உனது அந்தக் கணகள் எல்லாவற்றையுமே எனக்குக்
கூறிவிட்டன.
வாழ்வின் அர்த்தங்களைப் புரியாததொரு பொழுதினில்
நீயாகவே இந்தச் சிறைக்குள் வந்து சிக்குண்டது
உனக்கே தெரியும்.
அர்த்தங்களைப் புரிந்த நிலையில் இன்றோ
விடுபட முடியாததொரு நிலை.
அது உனக்கும் புரியும். எனக்கும் தெரியும்,.
நான் வேண்டக் கூடியதெல்லாம் இது ஒன்றுதான்:
உன் இரக்கமிக்க நெஞ்சினில்
அமைதியும் இன்பமும் என்றும் நிறையட்டும்.
வீதியினில் நீ எழிலெனப் படர்ந்த பொழுதுகளை
நினைத்துப் பார்க்கின்றேன்.
எனக்கே புரியாமல், திடீரென உன்னாலெங்ஙனம்
நுழைந்திட முடிந்தது? நெஞ்சினில்தான்.

கள்ளமற்ற, வெள்ளைச் சிரிப்பில்
பரவிக் கிடக்கும் அந்த இனிமை...
அதன்பின்னே தெரியுமந்த அழுத்தம்...
அபூர்வமாக மலரும் சில மலர்களில்
நீயும் ஒன்றென்பதை அவையே உணர்த்தும்.
அன்று
ஒயிலாகச் சென்றாய்.
ஓரக்கண்ணால் சிறைப்பிடித்தாய்.
அந்தப் பார்வையைத் தப்பியோடிட ஒருபோதுமே
விட்டிடாதே.
அதை உந்தன் இதயத்தில்
ஆழ்ந்த அறையொன்றின்
ஆழத்தே கொண்டுபோய்ச்
சிறை வைத்திடு.
உன்னிதயத்தின் உற்றதோழனாக, தோழியாக
இருக்கப் போவது அது ஒன்றேதான்.
அதனால்தான் சொல்கிறேன். உன்னிதயத்தின்
ஆழத்தே அந்தப் பார்வைத் துண்டத்தைச்
சிறைப்பிடித்து வைத்திடு.
பாலைகளின் பசுமையென,
கோடைகளில் வசந்தமென,
அன்பே! உன் வாழ்வில், நெஞ்சிற்கு
இதமான ஸ்பரிசத்தைத் தந்திடப்
போவது அது ஒன்றுதான்.
உனக்காக என்னால்
வானத்தை வில்லாக வளைக்கவோ அல்லது
பூமியைப் பந்தாகவோ மாற்றமுடியாது.
ஆனால் உன் இதயத்தின்
துடிப்பலைகளை இனங்கண்டிட முடியும்.
அவற்றை நெஞ்சினொரு கோடியில் வைத்து
அபிஷேகம் செயதிட முடியும்.
புரிகிறதாடீ! புரிந்தால் கவலையை விடு.
உன் பாதையில் இன்பப் பூக்கள்
பூத்துச் சொரிவதாக.

அத்தியாயம் இருபத்தியொன்று: பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்! கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்!

தொலைகாட்சியில் காட்டுயிர்கள் பற்றிய ஆவணக்காணொளியொன்று ஓடிக்கொண்டிருந்தது. மிருகங்கள் ஒன்றையொன்று கொன்று தின்று இருப்பில் தப்பிப் பிழைக்கும் கொடூர காட்சிகளை உள்ளடக்கும் காணொளி.

"என்ன கண்ணா, அப்படியென்ன டிவியிலை போய்க்கொண்டிருக்கு நீ ஆர்வமாய்ப் பார்க்கிறதுக்கு" என்று கூறியபடி வந்தாள் மனோரஞ்சிதம். வந்தவள் அருகில் நெருங்கி அணைத்தாள்.

"காட்டுயிர்களைப் பற்றிய காணொளியொன்று கண்ணம்மா. தப்பிப்பிழைத்தலுக்காக உயிர்கள் ஒன்றையொன்று கொன்று தின்பதை விபரிக்கும் காணொளி. பார்ப்பதற்குக் கொடூரமான காட்சிகளைக்கொண்டது. நீ தாங்க மாட்டாய். பேசாமல் போய்விடு கண்ணம்மா" என்றேன்.

"கண்ணா, நான் இது போன்ற பல 'டொக்குமென்ரி'களைப் பார்த்திருக்கின்றேன். என்னால் இவற்றைத் தாங்கிக்கொள்ள முடியும். கொடூரமானவைதாம். ஆனால் இருப்பு இப்படித்தானே இருக்கிறது கண்ணா"

"கண்ணம்மா, நீ கூறுவதும் சரிதான். எனக்கு இதனைப் பார்க்கையில் பாரதியின் கவிதை வரிகள் சில நினைவுக்கு வருகின்றன."

"என்ன வரிகள் கண்ணா?"

"கண்ணம்மா, அவரின் விநாயகர் நான்மணி மாலை என்னும் கவிதையில் நினைவில் நிற்கும்படியான , ஆழ்ந்த பொருளுடைய பல வரிகளுள்ளன. அவரது புகழ்பெற்ற வரிகளான '
நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்வ் இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல்.' என்னும் வரிகள் இக்கவிதையில்தான் வருகின்றன. இக்கவிதையில் வரும் மேலும் சில வரிகள் எனக்கு மிகவும் பிடித்தவை கண்ணம்மா."

"என்ன வரிகள் கண்ணா?"

"கண்ணம்மா, அவை இவைதாம்:

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்.
மண்மீதுள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்
யாவுமென் வினையா விடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புட நிணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா!
ஞானாகா சத்து நடுவே நின்று நான்
பூமண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு மிடிமையு நோவுஞ்

சாவு நீக்கிச் சார்ந்த பல்லுயிரெலாம்
இன்புற்று வாழ்க என்பேன்! இதனை நீ
திருச்செவி கொண்டு திருவுள மிரங்கி
'அங்ஙனே யாகுக' என்பாய், ஐயனே! "

" கண்ணா, நானும் இவ்வரிகளை வாசித்திருக்கின்றேன். "

"ஆனால் கண்ணம்மா, சக உயிர்களுடன் அன்புகொண்டு, மிருக வதை தவிர்த்து மனிதர் வாழும் ஒரு நிலை வருவதற்குச் சாத்தியமுண்டு. ஆனால் இங்கு வாழும் மிருகங்கள் ஒன்றையொன்று கொன்று வாழாமல் இருப்பதற்கு ஒரு போதுமே சாத்தியம் ஏற்படப் போவதில்லை. புலி மானைக் கொல்லாவிட்டால் , அதன் குட்டிகள் தப்பிப்பிழைப்பது எப்படி? கழுகு ஏனைய உயிரினங்களைக் கொல்லாவிட்டால் அதன் குஞ்சுகள் தப்பிப்பிழைப்பது எப்படி? எதற்காக இப்புவியில் இவ்விதமான உணவுச்சங்கிலியை அடிப்படையாகக்கொண்டு இருப்பு படைக்கப்பட்டுள்ளது. அல்லது பரிணாமத்துக்குள்ளாகியுள்ளது. இதனைத்தான் என்னால் ஒருபோதுமே புரிந்துகொள்ள முடியவில்லை கண்ணம்மா."

"கண்ணா, இருப்பின் இயல்பு இதென்று ஏற்றுக்கொண்டு வாழ்வதைத் தவிர வேறு வழியேதும் இருப்பதாகத் தெரியவில்லை. "

"மண்மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள் யாவும் இன்பமுற்றன்புட நிணங்கி வாழ்ந்திட பாரதி விரும்பியதுபோல் செய்தால் எவ்வளவு நன்றாகவிருக்கும்? பாரதியையும் இருப்பில் உயிர்களுக்கிடையில் நிலவும் வன்முறை பாதித்திருக்க வேண்டும். அதனால்தான் அவனால் இவ்விதம் கோரிக்கை வைக்க முடிகின்றது. "

"கண்ணா, பாரதி ஓர் அற்புத மானுடன். அவனால் எவ்விதம் இவ்விதமெல்லாம் சிந்திக்க எழுத முடிந்தது என்று நானும் அடிக்கடி சிந்திப்பதுண்டு. வியப்பதுண்டு."

"இருப்பின் இந்தக் கோணல்தான் எனக்கு இவ்விருப்பே ஒருவித 'புறோகிறா'மோ என்னும் சந்தேகத்தை அடிக்கடி ஏற்படுத்துகின்றது. அதற்கு முக்கிய காரணம் இங்குள்ள உயிரினங்கள், விருட்சங்கள் அனைத்தின் அடிப்படையே டி.என்.ஏ. ஆலமரத்தின் மிக நுண்ணிய விதையிலுள்ள டி.என்.ஏ அதனை எவ்வளவு பிரமாண்டமான விருட்சமாக வளர உதவுகின்றது. இந்த டி.என்.ஏயின் அடிப்படையில் உருவான இருப்பில்தான் எத்தனை வகை உயிரினங்கள். கண்ணம்மா , உனக்கு ஒன்று தெரியுமா? காளானின் டி.என்.ஏ மானுடரின் டி.என்.ஏயுடன் பெருமளவு ஒத்திருக்கின்றது. இதுபோல் இங்குள்ள அனைத்து
உயிரினங்களின் டி.என்.ஏக்களும் மானுட டி.என்.ஏயுடன் பல்வேறு வீதங்களில் ஒத்திருக்கின்றது. "

"இருப்பு எத்துணை அற்புதம் கண்ணா!"

"உண்மைதான் கண்ணம்மா. ஆனால் ஏன் இவ்விதம் இருப்பை இதனை உருவாக்கிய புறோகிறாமர் உருவாக்கினார்? அதுதான் புரியவில்லை. பிறப்பிலிருந்து இறப்பு வரையில் உயிர்கள் அனைத்தும் எத்தனை வகையான இன்ப, துன்ப உணர்வுகளுக்கு உள்ளாகின்றன. நிலையற்ற இருப்பில் இவை எதற்காக? இதுதான் எனக்குப் புரியவில்லை கண்ணம்மா"

இதைக் கேட்டதும் மனோரஞ்சஞ்சிதம் " எனக்கும்தான் கண்ணா" என்றாள். மறுகணமே "கண்ணா, இருப்பை இருப்பதுபோல் ஏற்றுக்கொள்வோம். இன்பமாக இருப்போம். என்றும் இருக்கும் வரை இன்று புதிதாய் பிறப்ப்போம்." என்றாள்.

மனோரஞ்சிதம் இவ்விதம் கூறவும் அவளைக் காதலுடன் நோக்கினேன். கூடவே "இவ்விருப்பில் என் இன்பமே நீதான் கண்ணம்மா" என்று கூறியவாறே வாரியிழுத்து அணைத்துக்கொள்கின்றேன்.

அத்தியாயம் இருபத்தியிரண்டு: ஐன்ஸ்டைனும் நானும் (ஒரு பிதற்றல்)!

"என்ன கண்ணா ஆழ்ந்த சிந்தனை. எல்லாம் என்னைப்பற்றித்தானே?" இவ்விதம் கூறியவாறே வழக்கம்போல் கண்களைச் சிமிட்டியவாறே வந்து தோளணைத்தாள் மனோரஞ்சிதம். அவளுடலின் மென்மையில் ஒருகணம் நெஞ்சிழகியது.

"கண்ணம்மா, உன்னைப்பற்றி நினைப்பதற்கு நானுன்னை மறந்திருக்க வேண்டும்.ஆனால் நீதான் என்னுடல் ,சிந்தையெங்கும் எந்நேரமும் வியாபித்து, கவிந்து கிடக்கின்றாயேயடி. எப்படி உன்னை நினைப்பேன்? "

வழக்கமான கேள்விதான். வழக்கமான பதில்தான். இருந்தாலும் இப்பதில் மனோரஞ்சிதத்துக்குத் திருப்தியையும், மகிழ்ச்சியையும் ஒருங்கே தந்தன என்பதை அவளது முகபாவமே காட்டியது.

"அப்போ, வேறெதைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தாய் கண்ணா? வழக்கம்போல் ஆகாயம் , பிரபஞ்சம், இருப்பு, காலவெளி இப்படி எதைப்பற்றித்தானே நினைத்துக்கொண்டிருப்பாய். அப்படித்தானே கண்ணா?"

"கண்ணம்மா சொன்னால் பிழையாக எதுதானிருக்கும்? இல்லையா கண்ணம்மா?"

"சரி , சரி சுற்றி வளைக்காமல் விடயத்துக்கு வா கண்ணா. அப்போ நான் சொன்னது சரிதானே. சரி நானே சொல்லுறேன் நீ என்ன நினைத்துக்கொண்டிருந்தாயென்று. சொல்லட்டுமா கண்ணா?"

"சொல்லு கண்ணம்மா. பார்ப்போம் சரியாகக் கண்டு பிடிக்கிறாயாயென்று."

"காலப்பயணம் பற்றி நினைத்துக்கொண்டிருப்பாயென்று நினைக்கின்றேன் கண்ணா."

"கண்ணம்மா மிகவும் நெருங்கி வந்து விட்டாய. அதற்கு மிகவும் நெருங்கியதொரு விடயம் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்."

"சரி சரி கண்ணா, ஓரளவு நெருங்கி விட்டதே போதும், நீ கூறு என்ன விடயமென்று.."

"எல்லாம் ஒளி வேகத்தையும் மிஞ்சிச் செல்லக்கூடிய துகள்களுண்டா என்ற சிந்தனை திடீரென ஏற்பட்டது. அவ்விதமான துகள்கள் இருப்பதாக முன்பொருமுறை எங்கோ வாசித்த நினைவுண்டு."

'கண்ணா, நீ கூறுவதும் சரிதான்., எனக்கும் நினைவுண்டு. நானும் வாசித்திருக்கிறேன். 'டகியோன்ஸ்' (Tachyons) என்ற துகள் பற்றி ஊடகங்களில் வாசித்திருக்கின்றேன். "

"ஆனால் அதற்கான சாத்தியங்கள் இல்லையென்றுதான் நினைக்கிறேன் கண்ணம்மா"

"ஏன் கண்ணா, அப்படிச் சொல்லுகிறாய்? ஆனால் நீ தானே அடிக்கடி சொல்லுவாய். அரிஸ்டாட்டில் போல், நியூட்டன் போல் , ஐன்ஸ்டனும் பிழையென்று வரும் சாத்தியங்களும் வரலாம் இல்லையா?"

"உண்மைதான் கண்ணம்மா, ஒளிக்கு மிஞ்சிய வேகம் எதுவுமில்லையென்று ஐன்ஸ்டைனின் சிறப்புச் சார்பியல் தத்துவம் கூறுகிறது. ஆனால் இவ்விதம் ஒளியை விஞ்சிய துணிக்கை இருக்கும் பட்சத்தில் ஐன்ஸ்டைனின் அந்தக் கோட்பாடு தவறென்றல்லவா ஆகிவிடுகிறது. கண்ணம்மா, காலத்துக்குக் காலம் நிலைத்து நின்ற கோட்பாடுகள் பல ஆட்டங்கண்டிருக்கின்றன. அந்த வகையில் ஐன்ஸ்டைனி கோட்பாடுகளும் ஏன் ஆட்டங்காண்க் கூடாது? அப்படி ஐன்ஸ்டைன் தவறாகவிருந்து, ஒளியை விஞ்சிய துகள்ளின் இருப்பு நூறு வீதம் சரியென்று நிரூபிக்கப்பட்டால் காலத்தை மீறிச் செல்லல் எவ்வளவு இலகுவாக விருக்கும்?"

"கண்ணா, உன்னுடன் இவ்விதமான விடயங்களைக் கதைக்கும்போதுதான் எவ்வளவு இன்பமாகவிருக்கிறது. இருப்புப் பற்றி இவ்விதம் சிந்திப்பதிலுள்ள இன்பத்துக்கு நிகரேது."

"உனக்கு மட்டுமல்ல, எனக்கும் கூடத்தான் கண்ணம்மா."

இவ்விதம் கூறிய கண்ணம்மாவைக் காதலுடன் நோக்கினேன்.வாரியணைத்துக்கொள்கின்றேன். "வாரியணைப்பதில் உனக்கென்ன அப்படியொரு பேராசை கண்ணா" என்று சிணுங்கினாள் மனோரஞ்சிதம்.

ஐன்ஸ்டைனும் நானும் (ஒரு பிதற்றல்)!

நானொரு பைத்தியமாம். சிலர்
நவில்கின்றார். நானொரு கிறுக்கனாம்.
நான் சொல்வதெல்லாம் வெறுமுளறலாம்; பிதற்றலாம்.
நவில்கின்றார். நவில்கின்றார்.
ஏனென்று கேட்பீரா? நான் சொல்வேன். அட
ஏனெழுந்தீர்? நீருமெனை நினைத்தோரோ 'கிறுக்கனென'.
ஆதிமானுடத்திலிருந்தின்றைய மானுடம்' வரையில்
வரலாறுதனை
அறிந்திடப் போகின்றேன் அப்படியே அச்சொட்டெனவே
என்றதற்கியம்புகின்றார் எள்ளி நகைக்கின்றார் இவரெலாம்.
நான் சொன்னதெல்லாம் இதுதான். இதுதான். இதுதான்:
'நுண்ணியதில் நுண்ணியதாய், மிக நுண்ணியதாயுளவற்றினை
நோக்கிடும் வலுவிலொரு தொலைகாட்டி சமைத்து
ஒளி விஞ்சிச் சென்றுவிடின்
ஆதிமானுடத்தினொளிதனையே
அட நான் முந்திட மாட்டேனா என்ன. பின்
வரலாறுதனை அறிந்திட மாட்டேனாவொரு
திரைப்படமெனவே'. என்றதற்குத்தான் சொல்லுகின்றார்
கிறுக்கனாமவை உளறலாம்; பிதற்றலாம்.
'ஒளி வேகத்தில் செல்வதென்றாலக்கணத்தில்
நீரில்லையும் உடலில்லை. நீளமெலாம் பூச்சியமே.
நான் சொல்லவில்லை. நம்ம ஐன்ஸ்டைன் சொல்லுகின்றார்'
என்றே
நவில்கின்றார்; நகைக்கின்றார் 'நானொரு கிறுக்கனாம்'.
நியூட்டன் சொன்னதிற்கே இந்தக் கதியென்றால்
நாளை ஐன்ஸ்டைன் சொன்னதிற்கும் மாற்றம் நிகழ்ந்திடாதோ?
அட நான் சொல்வேன் கேட்பீர். நானுமிப் பிரபஞ்சந்தனையே
சுற்றிச் சுற்றி வருவேனென்றன் விண்கலத்திலவ்வேளை

செகத்தினிலிவ் வாழ்வுதனின் அர்த்தம்தனைச்
செப்பிவைப்பேன்.
நல்லதிவையெலாம் கிறுக்கல், பிதற்றல்,
உளறலென்பவரெல்லாம்
நவின்றிடட்டுமவ்வாறே. அதுபற்றி
எனக்கென்ன கவலை.
எனக்கென்ன கவலையென்பேன்.

அத்தியாயம் இருபத்திமூன்று - நான் மீண்டும் விக்கிரமாதித்தன் பேசுகின்றேன்!

இதுவரை இங்கு நான் கூறியவற்றிலிருந்து நிச்சயம் நீங்கள் நவீன விக்கிரமாதித்தனாகிய இவனைப்பற்றிச் சிறிதளவாவது அறிந்திருப்பீர்கள் என்று நிச்சயமாக நிம்புகின்றேன். ஏற்கனவே நான் கூறியதுபோல் நவீன ஓவியப்பாணியான கியூபிசப் பாணியில் உருவங்கள் அவை எவையாயினும் அவை உருவாக்கப்பட்ட கேத்திரகணித வடிவங்களின் அடிப்படையில் அடையாளம் காணப்படும். உணரப்படும். அவ்வடிவங்களிலிருந்து உருவங்கள் உய்த்துணரப்படுமென்பது அப்பாணி பற்றிய எளிமையானதொரு விளக்கம் மட்டுமே. கியூபிசப் பாணியில் உருவங்களின் இருபரிமாணங்களே முக்கியமாகக் கையாளப்பட்டன. மூன்றாவது பரிமாணமான ஆழப்பரிமாணம் அங்கு முக்கியமானதொன்றல்ல. ஆனால் அதே சமயம் உருவங்கள் கேத்திரகணித வடிவங்களின் சேர்க்கையாக அவதானிக்கப்பட்டாலும் அவை ஒரு கோணத்திலிருந்து மட்டும் அவதானிக்கப்படவில்லை. அங்கமொன்று பல்வேறு கோணங்களிலிருந்து அவதானிக்கப்பட்டன. உதாரணத்துக்கு முகம் ஒரு கோணத்தில் பார்க்கப்படலாம். கண்கள் இன்னுமொரு கோணத்தில் பார்க்கப்படலாம். இவற்றிலிருந்து பார்க்கப்படும் காட்சியை , அது வெளிப்படுத்தும் உணர்வை உய்த்துணர வேண்டும். பிக்காசோவின் கியூபிசப் பாணி ஓவியங்கள் நவீன விக்கிரமாதித்தனுக்கு மிகவும் பிடித்தவை. ஓவியமொன்றினை இவ்விதம் உய்த்துணர்வது போன்றதுதான் மனிதரின் ஒருவரின் ஆளுமையினை அறிந்து கொள்வதும்.

இதுவரை இங்கு நீங்கள் வாசித்தவற்றிலிருந்து ஓரளவுக்கு என்னைப்பற்றி , என் ஆளுமையைப் பற்றி நீங்கள் அறிந்திருந்தால் அது ஓரளவுக்குப் போதுமானது. ஏனென்றால் நேரம் கிடைக்கும்போது நான் மீண்டும் நவீன விக்கிரமாதித்தனாகிய இவனின் வாழ்க்கை அனுபவங்களை விபரிக்கக்கூடும். அப்போது இவனைப்பற்றி இன்னும் நன்கு புரிவதற்கு இதுவரை விபரித்த விபரிப்புகள் நிச்சயம் உதவுமென்றும் நிச்சயமாக நம்புகின்றேன்.

இதுவரை நீங்கள் அறிந்தவற்றிலிருந்து முக்கியமாக சில விடயங்களை நவீன விக்கிரமாதித்தனாகிய இவனைப்பற்றி நீங்கள் உய்த்துணர்ந்திருப்பீர்கள். முதலாவது இவன் இருப்பு பற்றித் தீராத தேடல் மிக்க ஒருவன். அதே சமயம் அறிவியல்ரீதியில் இருப்பு பற்றிய தேடலைத் தொடர்வதில் ஆர்வமுள்ளவன். உண்மைதான் அறிவியல்ரீதியிலான தர்க்கமே இவனுக்கு ஏற்புடையதானதொன்று. அதுவே சரியான இயற்கைத் தேடலுக்கான வழியென்பதில் இவனுக்கு எவ்விதத்திலும் சந்தேகம் எப்போதுமிருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. காலவெளிக் கைதியாக இருப்பதால் இவன் தன் அறிதல், புரிதலுக்கான எல்லைகளை நன்குணர்ந்திருக்கின்றான். அவ்வெல்லைக்குள் நின்றுகொண்டே தன் சிந்தனைத் தேடலைத் தொடர்வதில் மிகுந்த நாட்டமுள்ளவன் என்பதையும் நீங்கள் நிச்சயம் நன்குணர்ந்திருப்பீர்கள். இரவு வானும், கொட்டிக்கிடக்கும் சுடர்களும் எப்பொழுதும் இவன் சிந்தனைக் குதிரையைத் தட்டிவிடும் ஆற்றல் மிக்கவை. அத்துடன் இவனுக்குக் களிப்புத் தருபவையும் கூட.

அடுத்ததாக இவனது கலை, இலக்கியத் தாகம் பற்றியும் அறிந்திருப்பீர்கள். குறிப்பாக இவனொரு கவிதைப்பிரியன் என்பதைப் புரிந்திருப்பீர்கள்.இவனது கவிதைகள் இவனது தேடலுக்கு உதவும் கருவிகளாகச் செயற்படுவதையும் அவதானித்திருப்பீர்கள். அத்துடன் அவற்றால் நீங்கள் இன்பமும் அடைந்திருப்பீர்கள். உண்மைதான்.

இன்னுமொரு விடயத்தையும் நிச்சயம் நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அது என் நட்புக்கும், காதலுக்குமுரிய 'கண்ணம்மா'. நான் பிரியத்துடன் 'கண்ணம்மா' என்றழைக்கும் என் நெஞ்சிற்கினியவளுடனான எனது உரையாடல்கள். அவள் என் சிந்தனையோட்டத்துக்கு ஈடுகட்டும் வகையில் சளைக்காமல் என்னுடன் உரையாடக் கூடியவள் என்பதையும் , என்னைப்போல் தேடல் மிக்கவள் என்பதையும் உங்களுக்குப் புரியவைத்திருக்குமென்றும் நான் உணர்கின்றேன்.

சில விடயங்கள் , கதாபாத்திரங்கள் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டவர்களாக உங்களுக்குத் தோன்றிருக்கக் கூடுமென்பதையும் நான் உணர்கின்றேன். ஆனால் அவர்கள் யாவரும் என் இருப்பில் முக்கியமானவர்கள். தேடல் மிக்க என் சிந்தைக்கு இதமூட்டிய, தெளிவூட்டிய நண்பர்கள். நீங்கள் யாரை நான் குறிப்பிடுகின்றேன் என்பதை இந்நேரம் அறிந்திருப்பீர்களென நினைக்கின்றேன். சதுரன் , வட்டநிலா தம்பதியர், மின்காந்தமணி ஆகியோரைத்தாம் குறிப்பிடுகின்றேன் என்பதை இந்நேரம் நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்பதையும் நானுணர்கின்றேன்.

உண்மையில் இதுவரையில் நானிங்கு விபரித்தவை ஓரளவுக்கு நவீன விக்கிரமாதித்தனாகிய இவனது ஆளுமையைப்பற்றி அறிவதற்கான உதவிகளாகவே கருதப்பட வேண்டும். இதற்கு மேலும் நவீன விக்கிரமாதித்தனாகிய இவனைப்பற்றி அறிவதற்கு இவனைப்பற்றிய வாழ்க்கை அனுபவங்களை , அவற்றினூடு வெளிப்பட்ட இவனது புரிதல்களை, சிந்தனைகளை அற்நிது கொளவதும் அவசியமானது. ஆனால் அதற்கான சமயம் இதுவல்ல. இன்னுமொரு தடவை , உரிய தருணத்தில் அவை பற்றி உரையாட வருவேன். அதுவரையில் உங்களிடமிருந்து தற்காலிகமாக விடை பெற்றுக் கொள்கின்றேன்.

" என்ன கண்ணா? இவ்வளவு விரைவில் விடைபெறப்போகின்றாயா? எனக்குக் கூடக்கூறாமல் அப்படியென்ன அவசியம் , அவசரம் கண்ணா?"

திரும்பினால் எதிரில் அவளுக்கேயுரிய புன்னகையுடன் மனோரஞ்சிதம்.

"என்ன கண்ணா, என்னை இத்தருணத்தில் எதிர்பார்க்கவில்லையா?"

"என்ன கண்ணம்மா சொல்லுறாய்? "

"என்ன கண்ணா, எனக்கும் சொல்லாமல் ஓடுவதற்குத் தானே பார்த்தாய்?"

மனோரஞ்சிதம் இவ்விதம் கூறவும் அவளையே சிறிது நேரம் உற்று நோக்கத்தொடங்கினேன். அத்துடன் கூறினேன்:

"கண்ணம்மா, என்ன சொல்லுறாய்? உன்னை விட்டு ஓடிப்பொறதா? நானேன் ஓடிப்போகோனும்., நீதான் என்னுடன் எப்பொழுதும் கூடவே எங்கும் பயணித்துக்கொண்டிருக்கப் போகின்றாயே. கண்ணம்மா, என் இருப்பின் வழிகாட்டியே, திசை காட்டியே நீதானடி"

இவ்விதம் கூறியவனை ஓடி வந்து ஆரத்தழுவி, மார்புடன் அணைத்துக்கொண்டாள் மனோரஞ்சிதம்; என் கண்ணம்மா.

'கண்ணம்மா! வா! காலவெளிக் குளத்தில்
குளித்துக் களிப்போம்.'

'என்ன கண்ணா? காலவெளிக்
குளத்தில் தானே களித்துக்கொண்டிருக்கின்றோம்'
'கண்ணம்மா! நீயென் கண்ணம்மா! ஞானக்
கண்ணம்மா!'
'கண்ணா! இவளுன் ஞானக்
கண்ணென்றால், நீயென்
ஞானம் அன்றோ.'
'கண்ணம்மா! ஒப்பற்ற
காலவெளிச் சித்திரமடீ நீ'
'கண்ணா! நீ மட்டுமென்ன?
காலவெளி அற்புதம் அன்றோ.'
'காலவெளியை நான் மறக்கின்றேன்
கண்ணம்மா! உன்னுடன் உரையாடும்போதெல்லாம்.'
'கண்ணா! காலவெளிப்பேரின்பத்தில் சுகித்துக்
களிக்கின்றேன் அப்போதுகளிலெல்லாம்.'
'காலவெளிக் கனவா நம்மிருப்பு
கண்ணம்மா! நானறியேன். ஆயினக்
கனவே எப்போதுமென் நனவாகக்
காண்கின்றேன்; காண்பேனடி
கண்ணம்மா.'
'கண்ணா! நீயென் உயிர்.'
'கண்ணம்மா! நீயுமெனக்கு
அப்படித்தான்.
அதுபோதும். அதுபோதும்'
'கண்ணா! வா!
காலவெளியில் களித்துக்கிடப்போம்.'
'களித்துக் கிடப்போம் கண்ணம்மா! இக்
காலவெளி உள்ளவரை.

முற்றும்.

இதுவரை வெளியான வ.ந.கிரிதரன் நூல்கள்

1. மண்ணின் குரல் (நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்பு),
2. எழுக அதி மானுடா! (கவிதைத்தொகுப்பு),
3. அமெரிக்கா (நாவல், சிறுகதைகளின் தொகுப்பு),
4. நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (ஆய்வு)
5. மண்ணின் குரல் (நாவல்களின் தொகுப்பு) ,
6. குடிவரவாளன் (நாவல்) ,
7.. அமெரிக்கா (நாவல், திருத்திய இரண்டாவது பதிப்பு.)
8. கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள் (சிறுகதைத்தொகுப்பு) ,
9> வ.ந.கிரிதரன் கட்டுரைகள் ,
10. ஒரு நகரத்து மனிதனின் புலம்பல் (கவிதைத்தொகுப்பு) ,
11. நவீன விக்கிரமாதித்தன் (நாவல்)

நல்லூர் ராஜதானி நகர அமைப்பு ஆய்வு நூல் மற்றும் இவரது சிறுகதைகள் சிங்கள மொழிக்கு எழுத்தாளர் ஜி.ஜி.சரத் ஆனந்தவினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது படைப்புகள் பல அமேசன் - கிண்டில் தளத்தில் மின்னூல்களாகக் கிடைக்கின்றன.

கணையாழி (1995 - 2000 தொகுப்பு, ஞானம் சஞ்சிகையின் ' ஈழத்துப்புலம்பெயர் இலக்கியத்தொகுப்பு', ' பனியும் பனையும்' தொகுப்பு , அமரர் வெங்கட் சாமிநாதன் பற்றிய வாதங்களும், விவாதங்களும் தொகுப்பு ,'வடக்கு வாசல் 'சஞ்சிகையின் இலக்கிய மலர்,   ஆழி பப்ளிஷர்ஸ் வெளியிட்ட ஆண்டு 'தமிழ்க்கொடி' மலர் ஆகியவற்றில் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன. எழுத்தாளர் சுஜாதா அறக்கட்டளையும் ஆழி பப்ளிஷர்ஸும் இணைந்து நடத்திய அமரர் சுஜாதா அறிவியல் புனைகதைப் போட்டியில் வட அமெரிக்காவுக்கான விருதினைப் பெற்ற அறிவியற் சிறுகதை 'நான் அவனில்லை'. இச்சிறுகதை ஆழி பதிப்பகம் வெளியிட்ட ‘சுஜாதா நினைவுப் புனைவு 2009’ , அறிவியற் புனைகதைத்தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளது. விகடனின் பவளவிழா ஆண்டில் இவரது 'பல்லிக்கூடம்' முத்திரைக் கதையாக வெளியானது.

வெளியான அமேசன் - கிண்டில் மின்னூல்கள். இவை பதிவுகள்.காம் வெளியீடுகள்.

1. வ.ந.கிரிதரன் பாடல்கள்
2. வ.ந.கிரிதரனின் அணிந்துரைகள்
3. அமெரிக்கா!: அமெரிக்கத் தடுப்பு முகாம் அனுபவம்!
4. வ.ந.கிரிதரனின் கட்டுரைகள் (தொகுதி ஒன்று)
5. வ.ந.கிரிதரனின் 'கணையாழி'க் கட்டுரைகள்
6. ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்!: வ.ந.கிரிதரனின் தமிழ்க் கவிதைத் தொகுப்பு!
7. அருச்சுனனின் தேடலும் அகலிகையின் காதலும் (நாவல்)
8. அண்டவெளி ஆய்வுக்கு அடிகோலும் தத்துவங்கள்: வ.ந.கிரிதரனின் அறிவியற் கட்டுரைகள், சிறுகதைகள்
9. நவீன கட்டடக்கலைச் சிந்தனைகள்!
10.வன்னி மண்: - என் பால்யத்தின் பிரதிபலிப்பு. (நாவல்)
11. பால்ய காலத்துச் சிநேகிதி! (நாவல்)
12. நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (திருத்திய இரண்டாம் பதிப்பு)
13.குடிவரவாளன்: நியூயோர்க் மாநகரத் தமிழ் அகதி அனுபவம்! (நாவல்)
14. மண்ணின் குரல்: - கனடாவில் வெளியான முதலாவது தமிழ் நாவல். - (நாவல்)
15. கணங்களும் குணங்களும் (நாவல்)
16. வ.ந.கிரிதரனின் கட்டுரைகள் (தொகுதி இரண்டு)
17. இன்று புதிதாய்ப் பிறந்தேன் (வ.ந.கிரிதரன் பாடல்கள் தொகுப்பு 2
18. என்னை ஆட்கொண்ட மகாகவி (மகாகவி பாரதியார் பற்றிய கட்டுரைகள்)

19. அழியாத கோலங்கள் (தொகுப்பு ஒன்று)
20. அழியாத கோலங்கள் (தொகுப்பு இரண்டு)

ஆங்கில நூல்கள் (மின்னூல்களாக) - மொழிபெயர்த்தவர் - லதா ராமகிருஷ்ணன்.

1. An Immigrant (Novel)
2. America (Novel)
3. Nallur Rajadhani City Layout

பின் அட்டை

வ.ந.கிரிதரன்



தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் வ.ந.கிரிதரன் இலங்கையைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர். வவுனியா மகாவித்தியாலயம், யாழ் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் , மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலைப் பட்டதாரி. "டொராண்டோ' சென்டனியல் கல்லூரியில் இலத்திரனியற் பொறியியல் துறையில் பட்டம் , தகவற் தொழில் நுட்பம் நுட்பத்துறையில் பல்வேறு கல்வித் தகைமைகளைப் பெற்றவர். இலங்கையிலிருந்த காலத்தில் தன் எழுத்துலக வாழ்வினை ஆரம்பித்த புகலிடத்தில் தொடர்ந்து எழுதி வருகின்றார். பதிவுகள் என்னும் இணைய இதழினை 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகவிருந்து நடாத்தி வருகின்றார்.

இவரது படைப்புகள் இலங்கை, தமிழகம் மற்றும் புகலிடத்தமிழர்கள் வெளியிட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. தமிழக ஆய்வரங்குகளில் இவரது புகலிடப்புனைகதைகளைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தமிழகப்பல்கலைக்கழகங்களில் இவரது படைப்புகளைப்பற்றி முனைவர் மற்றும், முதுகலைத் தத்துவம் கற்கை நெறிகளுக்காக மாணவர்கள் ஆய்வுகள் செய்திருக்கின்றார்கள். 'பொந்துப்பறவை'கள் என்னும் சிறுகதை சிங்கப்பூர் கல்வி அமைச்சினால் தமிழ் மாணவர்களுக்கான பாடத்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 'அமெரிக்கா' அமெரிக்கன் கல்லூரியின் (தமிழ்நாடு) பாடத்திட்டத்திலுள்ளது.

ஆனந்த விகடனின் பவள விழாப்போட்டி, எழுத்தாளர் சுஜாதா அறக்கட்டளை மற்றும் ஆழி பப்ளிஷர்ஸ் இணைந்து நடாத்திய உலக அளவிலான அறிவியற் சிறுகதைப்போட்டி ஆகியவற்றில் பரிசுகளைப்பெற்றுள்ளன. கனடாத் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இலக்கியச் சாதனைக்கான இயல் விருது 2022 பெற்றவர்.

இதுவரை மண்ணின் குரல் (நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்பு), எழுக அதி மானுடா! (கவிதைத்தொகுப்பு), அமெரிக்கா (நாவல், சிறுகதைகளின் தொகுப்பு), நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (ஆய்வு) மண்ணின் குரல் (நாவல்களின் தொகுப்பு) , குடிவரவாளன் (நாவல்) , அமெரிக்கா (நாவல், திருத்திய இரண்டாவது பதிப்பு.) மற்றும் கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள் (சிறுகதைத்தொகுப்பு) , வ.ந.கிரிதரன் கட்டுரைகள் , ஒரு நகரத்து மனிதனின் புலம்பல் (கவிதைத்தொகுப்பு) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன. நல்லூர் ராஜதானி நகர அமைப்பு ஆய்வு நூல் மற்றும் இவரது சிறுகதைகள் சிங்கள மொழிக்கு எழுத்தாளர் ஜி.ஜி.சரத் ஆனந்தவினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது படைப்புகள் பல அமேசன் - கிண்டில் தளத்தில் மின்னூல்களாகக் கிடைக்கின்றன.

கணையாழி (1995 - 2000 தொகுப்பு, ஞானம் சஞ்சிகையின் ' ஈழத்துப்புலம்பெயர் இலக்கியத்தொகுப்பு', ' பனியும் பனையும்' தொகுப்பு , அமரர் வெங்கட் சாமிநாதன் பற்றிய வாதங்களும், விவாதங்களும் தொகுப்பு ,'வடக்கு வாசல் 'சஞ்சிகையின் இலக்கிய மலர், ஆழி பப்ளிஷர்ஸ் வெளியிட்ட ஆண்டு 'தமிழ்க்கொடி' மலர் ஆகியவற்றில் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன.